www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஏப்.20–26,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 201

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## புலிகளின் தூது!

## சமரும் சதுரங்கமும்



## சரத்மீது வழக்கு நக்மாவுக்கு நெருக்கடி

## 'ஈழநாடு' தகர்ந்தது

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## மற்றொரு மாயமான்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

ஜனாதிபதிக்கும்-
எதிர்க்கட்சித் தலைவருக்கும்
இடையே நடைபெற்ற
கடிதப் பரிமாற்றங்களும்
காணப்பட்ட இணக்கமும்
நிச்சயம் வரவேற்கப்படவேண்டியதே!

ஆயினும்-
கடந்த கால அனுபவங்கள்
காரணமாக
மனம் திறந்து பாராட்ட
சில தயக்கங்கள் உள்ளன!

முதலாவது விடயம்:
சர்வதேச மத்தியஸ்தம்
கேட்கப்பட்டது,
இனப்பிரச்சனைக்கான
அரசியல் தீர்வுக்கே தவிர,
ஆளும் தரப்பு-எதிர்த்தரப்பு
இணக்கப்பாட்டுக்காக அல்ல!

தற்போது-
ஆளும் தரப்பும்- எதிர்த்தரப்பும்
இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன;
தீர்வுக்கு ஒத்துழைக்க
முன்வந்துள்ளன என்று
சற்று அளவுக்கதிகமாகவே
பிரசாரம் செய்யப்படுகிறது!

ஆரம்பம் முதலே,
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
தொடர்பான விடயத்தில்
ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும்
மத்தியஸ்தம் தேவையில்லை
என்றே கூறிவருகின்றன!

ஆயினும்- தீர்வு யோசனைகள்
இறுதித் திட்டமாக வெளிவராமல்
காலம் இழுத்தடிக்கப்படுவதும்
யுத்தம் தீவிரமாகிவருவதும்
ஆளும் தரப்பும்- எதிர்த்தரப்பும்
எதிரும் புதிருமாக நிற்பதும்
சர்வதேச மத்தியஸ்தம்
சார்பான கருத்துக்களை
வலுப்படுத்தி வருகின்றன!

இக்கட்டத்தில்
சலித்துப் போன
பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு
மீண்டும் உயிர்கொடுத்து,
மயிர் பிளக்கும் விவாதங்களை
மறுபடி ஆரம்பிக்க
தற்போதைய இணக்கப்பாட்டை
காரணம் காட்டப்போகிறார்களோ?
என்று சந்தேகம் எழுகிறது!

ஜனாதிபதியுடன்
நடைபெற்ற
கடிதப் பரிமாற்றத்தின் பின்னர்
எதிரணித் தலைவர்
கூறியுள்ள கருத்துக்களும்
நம்பிக்கை தருவதாக இல்லை.
"அரசியலமைப்பு திருத்தத்துக்கு
தமது கட்சி
ஆதரவு அளிப்பதாக
அர்த்தமில்லை," என்றுதான்
ரணில் தெரிவித்திருக்கிறார்!

ஆக, மொத்தத்தில்,
'புதிய மொந்தையில்
பழைய கள்தான்
இந்த இணக்கப்பாடு
பற்றிய ஆரவாரங்களோ?'
என்று ஐயம் எழுகிறது!

"இனப்பிரச்சனைக்குத்
தீர்வு காண ஒத்துழைப்போம்!
புலிகளுடன் பேச்சு நடத்தலாம்!"
என்பதெல்லாம்
என்றென்றும்- எப்போதும்
ரணில் கூறிவருவதுதான்!

தற்போது
ஜனாதிபதியுடன்
கடிதப் பரிமாற்றத்தில்
அதனைக் கூறியிருக்கிறார்.
அப்படிக் கூறியதை.
அரசாங்கமும்
அமோகமாக பிரசாரப் படுத்தியுள்ளது,
என்பதுதான் புதிய வித்தியாசம்.

அவ்வாறான பிரசாரம்தான்
சந்தேகத்தை அதிகமாக்கியுள்ளது!

எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவிக்கும்
மற்றொரு ஆரவாரமாகி
பின்னர் புஸ்வாணமாகிவிடுமோ
என்று சந்தேகம் வருகிறது!

ஏனெனில்-
மாயமான்கள் பல கண்டு,
அவற்றின் பின் ஓடி,
ஏமாந்துபோன அனுபவங்கள்
இங்கே சகஜம்!
அவ்வாறு- இந்த
இணக்கப்பாட்டு பிரசாரமும்
மாறிவிடக் கூடாது என்பதே
எல்லோர் விருப்பமும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## கவலைப்படாதிருங்கள்!

"கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?" (மத் 6:27)

கவலைகள் அர்த்தமற்றவை. நாம் கவலைப்படுகிற காரியங்கள் பொதுவாக நிறைவேறுவதில்லை! கவலைப்பட்டது தான் மிச்சம். இன்னும் சில காரியங்களுக்காக நாம் கவலைப்படுகிறோம். கவலைப்பட்டு நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அப்படியானால் கவலைப்பட்டு என்ன பிரயோஜனம்?

சிலர் தங்களுடைய சரீரக் குறைவைக் குறித்துக் கவலைப் படுகிறார்கள், சிலர் நல்ல தோற்றம் இல்லையே என்று கவலைப்படுகிறார்கள். இன்னும் சிலர் தனிமை உணர்வினால் பீடிக்கப்பட்டு கவலையினால் நிரம்பியிருக்கிறார்கள். இப்படிக் கவலைப்பட்டு என்ன பிரயோஜனம்? கவலைப்படுகிறதினாலே எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான் என்று கர்த்தர் கேட்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் எப்போதும் சந்தோஷம் உள்ளவர்களாகவும்; மகிழ்ச்சி உள்ளவர்களாகவும் விளங்க வேண்டும். என்பதே கர்த்தருடைய பிரியமாயிருக்கிறது.

பி. தேவபாலன்-மட்டக்களப்பு.

# ஆன்மீகம்



## இரகசியத்தைப் பாதுகாக்க வேண்டும்!

ஒருவர் விசுவாசியின் கஷ்டத்தை உலகில் போக்க உதவி செய்தால் அல்லாஹ் மறுமை நாளில் அவரது கஷ்டங்களில் ஏதேனுமொன்றை நீக்கி விடுவான். யாராவது ஒருவரது வறுமையைப் போக்கினால், அல்லாஹ் அவரது வறுமையை இம்மையிலும் மறுமையிலும் போக்குவான். ஒருவர், ஒரு முஸ்லிமுடைய இரகசியத்தை மறைப்பாரேயானால் அல்லாஹ் அவரது இரகசியத்தை இம்மையிலும் மறுமையிலும் மறைப்பான். ஒருவர் தனது சகோதரனுக்கு உதவியாக இருக்கும்வரை அல்லாஹ்வும் அவருக்கு உதவியாளனாக இருப்பான். மக்கள் அல்லாஹ்வின் வீட்டில் சேர்ந்தமர்ந்து அல்லாஹ்வின் வேதத்தைப் படித்துக் கொண்டும் ஒருவருக்கொருவர் படிக்க வைத்துக்கொண்டுமிருந்தால், அல்லாஹ் அவர்கள் மீது அமைதி ஏற்படுத்துவான். அவர்கள் மீது தனதருளால் நிழலிடுகிறான். வானவர்கள் அவர்களுக்கு முன்னும் பின்னுமாகச் சுற்றிக்கொண்டிருப்பார்கள். அல்லாஹ்வுக்கு நெருக்கமாக உள்ள படைப்புகளிடம் அவன் அவர்களைப் பற்றிக் கூறுகிறான்.

எந்தச் செயல் ஒரு மனிதனை பின்னுக்குத் தள்ளி விடுகிறதோ அவனது சந்ததியினரால் அவனை முன்னுக்கு தள்ளிட முடியாது.

ஆதாரம்- முஸ்லிம், அபூதாவுத் திர்மிதி
பாத்திமா மின்ஹா-புத்தளம்.

## கவிதைப் போட்டி இல.198



### பரிசுக்குரிய கவிதை

**நம்பிக்கை!**

மலர்கள் மலரும் இங்கே;
தடுப்புச் சுவர் தேவையில்லை.
நம் காதல் ஜெயிக்கும் விரைவில்
மத்தியஸ்தம் தேவையில்லை!

தெஹிவளை-நபீலா சிராஜ்.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**மாற்றம்**

என் காதல்
சொல்ல வந்தேன்!
உன் சிரிப்பால்
சொல்மாறி நின்றேன்!

சுபா வரன்-கண்டி.

**அச்சம்**

வீட்டிலிருக்கும் வில்லர்களுக்கஞ்சி
காட்டில் கொஞ்சும் காதற் கிளிகள்.

அ. சந்தியாகோ- அசோகா வித்தியாலயம், கண்டி

கவிதைப் போட்டிக்கு தமது படைப்புகளை அனுப்புவோர் முழுப் பெயர், முகவரிகளைத் தெளிவாக அனுப்பிவைக்கவேண்டும்.

**மகிழ்வு எப்போது?**

வட கிழக்கில் கடும்போர்;
வனத்தினிலும் கண்ணிவெடி;
மலையகத்திலாவது நமக்கு
மன மகிழ்வு ஏற்படாதா??

காரைதீவு சிவம்- குருக்கள்மடம்.

**வேகம்**

முத்துக்கள் சிந்திட
முத்தழகி நீ சிரித்தால்
மூச்சு வாங்குகிறது..
முன்னூறு மைல் வேகத்தில்....!

மனசு- நீர்கொழும்பு.

**காதல்**

பூமிக்குள்ளே நாளும்
போர் பூகம்பம்!
பூவைக்குள்ளே இவன்
காதல் ஆரம்பம்!

தெ. லோஜனா-
கொழும்பு-15.

**எமக்கென்ன....?**

ஊருக்கு என்னதான் நடந்தாலும் எமக்கென்ன?
யாருக்கும் தெரியாமல் சந்திக்க இது நல்ல வனமே!
பூரிக்கும் உன் சிரிப்பழகைக் கண்டபின் கனியே
போருக்குப் போ என்று சொன்னாலும் போகேன்!


செ. சோமசுந்தரம்- பேக்கறி ஒழுங்கை, வவுனியா.

**திட்டம்**

அண்ணலும் நோக்கவே அவளுந்தான் நோக்கினாள்;
அருமையாய்க் காதலும் உண்டாச்சு!
இல்லறம் என்றொரு நல்லறம் கண்டிட
இப்பவே திட்டமும் உருவாச்சு!

பசறையூர்-மல்லிகா பத்மநாதன்.

## கவிதைப் போட்டி இல.201



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 26.04.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.201
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

**சிறை**

சிரித்துச் சிரித்துச்
சிறையிடுவாள்- பின்போ
கண்கள்
சிவக்கச் சிவக்க
அழவிடுவாள்!

சியோதயன்-
இராகமை மருத்துவபீடம்.

**புறப்படுவோம்**

கண்ணே!
இது
காதல் தேசமல்ல;
சாதல் தேசம்!
புக்காரா வருமுன்னே
புறப்படுவோம் வா கண்ணே!

கல்முனை-நிஷாத் ஷரீ:ப்.

**ஓடிப்போவேம் வா!**

துப்பாக்கிச் சத்தங்களும்
ஒப்பாரிச் சத்தங்களும்
இல்லாத
தேசம் நோக்கி
ஓடிப் போவோம் வா!

மீராவோடை-ஸலீமா நஸ்ரீன்.

## அன்பின் முரசே,

'அந்த நாள் ஞாபகத்தில்' அந்த நாள் திருமணம் இந்த நாள் திருமணம் என அரச புகழ்பெற்ற திருமணங்களை எமக்குத் தந்தமையை பாராட்டுகிறோம். பலஸ்தீனத் தலைவர் மதிப்பிற்குரிய யாசீர் அரபாத் ஜனாதிபதிக்கு பிஸ்டல் காட்டினார் என்று இராஜதந்திரி கொடுத்த தலையங்கத்தை வாசித்துவிட்டு நடுங்கி விட்டோம். கட்டுரையை வாசித்தவுடன் தான் என்னவென்று விளங்கியது. இந்த மாதிரி தலையங்கம் கொடுக்க வேணாமய்யா- நாட்டு நிலவரம் வேறு மோசமாகி இருக்கிறது!

திருமதி மரீனா நியாஸ், ஸஹ்ரா- கே.பிள்ளை,
மிசிரியாஹக், கண்டி -பூரணவத்த.

என் இனிய முரசே,

நாரதரின் ஆரூடத்தின்படி உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி பெற்றுவிட்டது. ஆனால் முக்கிய நகரங்களில் எதிர்க்கட்சி வாக்குகளை கைப்பற்றியது வியப்பூட்டுகிறது. மலையகத்து மன்னனின் மைந்தர்களே மனம் மாறிவிட்டார்கள். இது மலையக மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பதற்கான அறிகுறி. மொத்தத்தில் இந்த மினித்தேர்தலை ஒரு பொதுத் தேர்தலை விட பெரிதாக நடத்திவிட்டது ஆளும் தரப்பு.

ஆ.ஜெகதீஸ்வரன், புசல்லாவ.

அன்பின் முரசுக்கு!

'கூட்டணி அடித்த பல்டிக்கு' நல்ல போடு போட்டது முரசு. தண்ணீருக்கும் தரைக்கும் தாவும் தவளைகளாக இருக்கும் தமிழ்க் கட்சிகளை நினைத்தால் வேதனை. தீர்க்கமான விடயங்களில் நியாயமாக இடித்துரைக்கிறார்கள் இல்லை. இந்த நிலை எப்போதுதான் மாறுமோ?

கே.ரவிச்சந்திரன், இலுப்படிச்சேனை, செங்கலடி.

'பெரிய இடத்து திருமணம்' அன்றும் இன்றும் பிரமாதம். இந்திரா காந்தி முதல் பிரியங்கா வரை காதல் திருமணம் செய்து கொண்டது ஆச்சரியமல்ல அதிசயம்!

திருமதி இந்திராணி பாலகிருஷ்ணன், அட்டன்.

'இளையபாடகர்' சாஹுல் ஹமீதின் பிரிவு எம்மையும் வருத்தத்துடன் அனுதாபப்படவைத்தது. 'கிளீனரை' ஓடவிட்டு; பாடகரின் உயிருக்கு வேட்டுவைத்த ஓட்டுநரின் நடத்தை பற்றி புதுத் தகவல் தந்த அன்பு சிந்தியாவுக்கு நம் நன்றிகள்!

வந்தி(கனிந்)திருந்த கதைகளுள்; 'என்றென்றும் ஐ லவ் யூ...!' கதை பிரமாதமாய் இருந்தது. 'வித்தியாச வடிவம்', வசீகரம் செய்தது!

கோட்டைமுனை-முத்துமணி, பதுளை.

### தகுந்த விளக்கம்

MI-24 ரக ஹெலி காணாமல் போனதற்காக ஏற்பட்ட ஊகத்திற்கு தகுந்த விளக்கமளித்த நாரதருக்கு எனது வாழ்த்துக்கள் பல....

எஸ்.அரசகுமார், கல்முனை-02.

# வாசக(ர்) சாலை



### கும்பலோடு கோவிந்தா

நாட்டில் சமாதானம் மலரப்போகிறது என்று எத்தனையோ தடவை நம்பிக்கெட்டவர் நாம். சமாதானத்தை தோற்றுவிக்க உண்மையாய் உழைப்போரை வரவேற்றேயாக வேண்டும். எனினும் சமாதானம் என்ற பெயரில் நடக்கும் முயற்சிகளையும், பின்னணிகளையும் தெளிவுறத் தரவேண்டியது பத்திரிகைகளின் கடமையாகும். கும்பலோடு கோவிந்தா போடாமல் 'முரசு' கடந்த காலத்தைப் போல உண்மைகளை வெளிச்சமிடத் தயங்கக்கூடாது.

சி.மணிவாசகம், கொழும்பு-12.

### அவசரம் ஏனோ?

யார் என்ன சொன்னாலும் 'முரசு' என்ன சொல்கிறது? என்பதை அறிந்த பின்னரே நாட்டு நடப்புகளை விளங்கிக் கொள்கிறோம். அரசியல் தீர்வு யோசனையை கொண்டுவந்த போது எல்லாமே தீர்ந்துவிட்டது என்று விழுந்து விழுந்து வரவேற்றனர் பலர். (முரசு விதிவிலக்கு) இப்போது என்னாயிற்று? கற்பூரம் கொளுத்து முன் சன்னதம் கொண்டு எம்மை நாமே ஏமாற்றுவானேன்? சமீபத்திலும் அவசரக் குடுக்கைத் தனங்கள் தெரிகின்றன. இதனால் ஏமாறும் கூட்டமாகவே இருந்துவிடப் போகிறோம். எச்சரிக்கை தேவை.

சி.தம்பிராசா, தெமட்டகொட.

அறியாத பல சங்கதிகளை நேர்நின்று தரும் அரசியல் தொடர் காலத்திற்கேற்ற முயற்சி. கலைஞர் கருணாநிதி அவர்களின் அன்றைய நிலைப்பாடும் இன்றைய கருத்துக்களும் அரசியல் நலன் சார்ந்தவையே. கட்சி நலன் என்ற வரையறைக்குள்தான் இலங்கை இனச்சிக்கலை அவர்கள் கையாளுகின்றனர். எம்.ஜி.ஆரின் உதவிகள் எக் காலத்திலும் மறக்கமுடியாதவை.

தி.வசீகரன், திருக்கோயில்.

'கனவு மெய்ப்பட வேண்டும்' மிக அருமையான தொடர். 'காயத்ரி' சுஜாதாவின் வித்தியாச விருந்து. புதிய தொடர் இரண்டும் இருவேறு நயத்துடன் எம்மைக் கவருகின்றன.

எம்.ரகீம், ஹட்டன்.

'பூலான்' தொடர், விறு விறுப்பு. 'காயத்ரி'யே குறு குறுப்பு. 'முரசு' என்றாலே துரு துருப்பு. 'சினி விசிட்டில்' அப்பாஸை மட்டும் தூக்கி நிறுத்த வேண்டாம். அஜித்குமார் ரசிகர்களை கோபமூட்டாதீர். ஜாக்கிரதை.

வி.ஜெகதீஸ், புத்தளம்.

என்னதான் வீரமாக முழங்கினாலும் எமது தமிழ் அரசியல் கட்சிகள் உரிய நேரத்தில் தமது விசுவாசத்தை உரிய பக்கம் காட்டத் தவறுவதில்லை. அதனை சுட்டிக் காட்டிய முரசாருக்கு சபாஷ்!

ஏ.அழகையா, மட்டக்களப்பு.

மலையகத் தலைவருக்கு கந்தசாமியாரின் நயமான வீச்சு பிரமாதம். தோல்விக்கு அவர் காரணம் தேடும் தீவிரம்தான் வேடிக்கை.

எஸ்.சுந்தர், கந்தப்பளை.




எனதன்பின் முரசே.

ஒரு பெண்ணுக்கு இவ்வளவு வலிமையா? வர வர பூலான் எம்மை வியப்பில் ஆழ்த்திச் செல்கிறாள்.

'காயத்ரி' ஆரம்பமே சூப்பரோ சூப்பர். உன் சேவை தொடர வாழ்த்துக்கள் பல.

செல்வி ஷோபனா யோசப்,
ஜம்பட்டா வீதி.

தினமுரசின் மீது நசம் கொண்ட பல வாசகர்களுள் நானும் நவனே. 'காதிலை பூ கந்தசாமி' சுவைத்தே. தொண்டாவுடன் கற்பனைப் பேட்டி சிறப்பாய் அமைந்திருந்தது. காலத்தின் தேவைக்கே நகைச்சுவை கலந்த வசன நடையில் அமைந்த இப்பேட்டி முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.

செல்வ மாரிமுத்து சிவகுமார்,
பிரதான வீதி, ஹட்டன்.

**மடல் அனுப்பவர்களில் இடம் உள்ளரை பெயர் பதிவுசெய்யட முடிந்தவர்கள்:**

* எஸ்.யசோதா, காழும்பு-15.
* கே.சுப்பிரமணம், ஹேவாஎட்டை.
* மானெல் சாந்மார், பொகவந்தலாவ.
* நந்தினி-தர்சி வவுனியா.
* நஜீப் சில்மிய ஹொரவபொத்தானை.
* கே.எம்.பைவ அஸீஸ், காத்தான்குடி.
* எஸ்.கலைய இரத்தினபுரி.
* எம்.ஜே.ரயீஸ்ஹமட், கம்பிரிகஸ்வெவ.
* பா.அழகேக ஃபிரான்ஸ்.
* ஜெ.யூட் கிரியன், மட்டக்களப்பு.
* ஆர்.டேவிற், கொழும்பு-08.
* சி.புவனேசரன், சவுதி-அரேபியா.
* எஸ்.எம்.டூன், கொட்டாரமுல்லை.
* எஃப்.நேசமார், ஹட்டன்.
* ப.தீபவதா, தெகிவளை.
* எம்.காண்ன், ஜெர்மன்.
* எஸ். பபசென்றல் பிளேஸ், திஹாரிய.
* கே.குலரேன், கண்டி.
* செல்வி தர்ஷினி, கொழும்பு-06.
* க.நந்தகு, ஜெர்மன்.
* செ.நிசான், வவுனியா.
* எ.எல்.றமத், சவுதி-அரேவியா.

## இரு கட்சிகளின் இணைக்கம்
## புலிகள் தெரிவித்த கருத்து

ஐக்கிய தேசியக் கட்சியும், பொது ஜன முன்னணியும் இனப்பிரச்சனை தீர்வுக் காண்பது தொடர்பாக 'இணக்கம் கண்டுள்ளமை' குறித்து 'புலிகளின் குரல்' வானொலி தனது செய்தியில் பின்வருமாறு தெரிவித்தது:

"ஆண்டாண்டு காலமாக இன அடக்கு முறையின் சின்னமாக விளங்கிய ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியும் தற்போது உறவு ஏற்படுத்தியுள்ளன. இந்த உறவு குறித்து தமக்கிடையே பரஸ்பரம் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றன. இதேவேளை இவ்விரு இனவாதக் கட்சிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள இந்த உறவானது, தமிழ் மக்களுக்கு எதிராக பௌத்த சிங்கள இனவாதம் ஒன்றுபட்டு வருவதையே காட்டுவதாக அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்." இவ்வாறு புலிகளின் குரல் வானொலி தனது செய்தியில் தெரிவித்துள்ளது. ■

## "அரசுடன் பேச்சு எதுவும் நடத்தவில்லை!"

# விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வ அறிவிப்பு!

## சர்வதேச அரங்கில் எதிர்ப்புப் பிரசாரம் தீவிரம்

**விடுதலைப் புலிகளும், இலங்கை அரசும் பேச்சில் ஈடுபடுவதற்கான அறிகுறிகள் தெரிவதாகக் கடந்த வாரங்களில் ஊகங்கள் வெளியானது தெரிந்ததே. பிரிட்டிஷ் பிரதியமைச்சர் லியாம் பொக்ஸ் இலங்கையில் மேற்கொண்ட சமாதான முயற்சிகளுடன் புலிகளை இணைத்தும் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன. தற்போது அந்த ஊகங்களுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் திட்டவட்டமான மறுப்பு வெளியிட்டுள்ளனர்.**

விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டள்ளது:

சிறீலங்கா அரசுடன் எவ்வித பேச்சு வார்த்தையிலோ, பேச்சுவார்த்தைக்கான ஆயத்தங்களிலோ விடுதலைப் புலிகள் ஈடுபட வில்லை.

சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்த பகுதியில் இருந்து வெளியேறி இயல்பு நிலையைத் தோற்றுவித்தால் மட்டுமே பேச்சு வார்த்தை நடத்தக்கூடிய சூழ்நிலை தோன்றும்.

ஆயுதங்களைக் கீழே போடுவது போன்ற நிபந்தனைகளை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

சிறீலங்கா அரசுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இல்லாமல் பேச்சு எதிலும் புலிகள் ஈடுபடமாட்டார்கள்!" என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

### தென்னாபிரிக்காவில்

தென்னாபிரிக்காவில் புலிகள் இயக்கப் பிரமுகர் லோரன்ஸ் திலகருக்கும், நீதியமைச்சர் ஜி.எல்.பீரிசுக்கும் இடையே சந்திப்பு நடைபெறக்கூடும் என்று சிலவாரங்களுக்கு முன்னர் தகவல் ஒன்று வெளியாகி இருந்தது. அத் தகவலை, பின்னர் ஊர்ஜிதம் செய்து தெரிவிப்பதாக முரசு குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே.

அவ்வாறான சந்திப்பு எதுவும் தென்னாபிரிக்காவில் நடைபெறவில்லை என்பது தற்போது திட்டவட்டமாகத் தெரிந்திருக்கிறது. புலிகள் இயக்க சர்வதேசப் பிரமுகரான லோரன்ஸ் திலகர் தென்னாபிரிக்காவுக்குச் செல்லவில்லை என்பதும் ஊர்ஜிதமாகியுள்ளது.

இதேவேளை சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக்கு எதிரான பிரசாரத்தை விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் வெளிநாட்டுக் கிளைகள் தீவிரப்படுத்தி உள்ளன.

மனித உரிமை அமைப்புக்கள், சமாதான இயக்கங்கள், வெளிநாட்டு இராஜதந்திர வட்டாரங்கள் என்பவற்றோடு தொடர்பு கொண்டு, இலங்கை அரசின் நடவடிக்கைகள் தொடர்பாக விளக்குவதிலும், மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பதிலும் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாகவே, சமீபத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு முன்பாக 53 அமைப்புக்கள் இலங்கை அரசைக் கண்டனம் செய்தன. ஃபிரான்சின் பிரதான மனித உரிமை அமைப்பான எஃப்.ஐ.டி.எச். அமைப்பும் இலங்கை அரசைக் கண்டனம் செய்திருந்தது. லோரன்ஸ் திலகரின் தீவிர முயற்சிக்குக் கிடைத்த வெற்றிகளில் ஒன்றாக அதனைக் கருதலாம்.

### சர்வதேச பிரசாரம்

'நீதிக்கான போராட்டம்' என்னும் தலைப்போடு ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட 12 பக்க அறிக்கை ஒன்றையும் சர்வதேச பிரசாரத்திற்காக புலிகள் வெளியிட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல்கள், தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தியது ஏன்? சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப்போராட்டம், சர்வதேச உறவுகள் என்று பல்வேறு விடயங்கள் தொடர்பாக அப் பிரசுரத்தில் விளக்கப்பட்டுள்ளன.

"போர்மூலம் சமாதானம்" என்று கூறி வரும் சிறீலங்கா அரசும், அதன் பிரசார சாதனங்களும் தவறான செய்திகளையும் தகவல்களையும் வெளியிட்டு வருகின்றன. தமிழ் மக்கள் தங்கள் சுதந்திரத்துக்காகவும், தன்மானத்துக்காகவும் போராடிவருகின்றனர்" என்றும் அப் பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. ■

## அமெரிக்க பிரதிநிதி கண்டனம்

இலங்கையில் மனித உரிமைகள் பாரதூரமான முறையில் மீறப்படுகின்றன, என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன் அமெரிக்கப் பிரதிநிதிகளின் தலைவி நான்சி ரூபின் தெரிவித்துள்ளார். இவ்வாணைக் குழுவின் 53வது கூட்டத்தொடர் அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற போதே நான்சி ரூபின் இத்தகவலை வெளியிட்டார்.

நான்சி ரூபின் மேலும் கூறியதாவது;

"மனித உரிமைகளை மீறும் நடவடிக்கைகள் இலங்கையில் படுமோசமடைந்து வருகின்றன. யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலங்களில் 700 க்கும் அதிகமானோர் காணாமற் போயுள்ளனர். இத்தகைய மீறல்களில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டப் படும் ஆயுதப்படையினர் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில் வீண்கால தாமதம் ஏற்படுத்தி வருகின்றது". ■

## போதையில் நடைபெற்ற சோதனை!
## சித்திரைத் திருநாளன்று சில்மிஷங்கள்!

மட்டக்களப்பில் நடந்த சம்பவமொன்றின்போது பொலிஸார் இருவர் காட்டிய நேர்மை எல்லோராலும் பாராட்டப்படுகிறது. மட்டக்களப்பு- வின்சன்ற் மகளிர் தேசியக் கல்லூரிக்கு முன்னால் சென்று கொண்டிருந்த பொலிஸார் இருவர் தங்கச் சங்கிலியொன்றைக் கண்டெடுத்தனர். அது பாடசாலை மாணவிகளுடையதாக இருக்கலாம் என ஊகித்துப் பாடசாலைக்குச் சென்று விசாரித்தனர். எனினும் யாரும் உரிமை கோரவில்லை.

பின்னர் அதைப் பொலிஸ் நிலையத்தில் பத்திரமாக ஒப்படைத்தனர். தனது தங்கச் சங்கிலி தொலைந்திருப்பதை மாணவியொருத்தி பின்னர் அறிந்தாள். அவரது தந்தை பொலிஸ் நிலையம் சென்று விசாரித்த போது தங்கச்சங்கிலி அவரிடம் பத்திரமாக ஒப்படைக்கப்பட்டது. அதன் பெறுமதி சுமார் 4500/= ரூபா இருக்கும்.

இந்த மாணவியின் தந்தையான கிராம சேவையாளர் தங்கச் சங்கிலியைக் கண்டெடுத்த அந்தப் பெரும்பான்மையினப் பொலிஸ்காரருக்கு சிறு வெகுமதியளிக்க விரும்பினாராயினும் சம்பந்தப்பட்ட பொலிஸ்காரர் முற்றாக அதை மறுத்துவிட்டார். தனது பெயரைக் கூட வெளியே சொல்ல அவர் விரும்பவில்லை, என்று மாணவியின் தந்தை பாராட்டிப் பேசினார்.

### பெண்களிடம் வம்பு

இது ஒருபுறமிருக்க கடந்த சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று மட்டக்களப்பின் சில இடங்களில் சோதனைச் சாவடிகளில் கடமையிலிருந்த பொலிஸார் தலைக்கேறிய போதையில் காணப்பட்டனர். யாரிடம் எதைக் கதைப்பதென்று தெரியாமல் வருவோர் போவோரிடமெல்லாம் வாய் உளறினர். அத்துடன் அன்றைய தினம் சனநடமாட்டம் மிகக் குறைவாக இருந்தபடியால் தப்பித் தவறி வீதியில் வந்த யுவதிகளை அழைத்து, "வாருங்கள்! நீங்கள் என்ன புலியா? ஆறுதலாக இங்கே இருந்து விட்டுச் செல்லுங்கள்? உங்கள் காதலரின் பெயரென்ன? திருமணம் முடித்து என்ன செய்வீர்கள்?" என்று கேள்விகள் கேட்டு அவர்களை உளவியல் வதை செய்த சம்பவங்கள் மிகவும் வேதனையாக இருந்தது. சிலர் அழுது கொண்டு வந்ததையும் காணமுடிந்தது.

### மிரட்டல்-உருட்டல்

அடையாள அட்டையைப் பறித்து வைத்துக் கொண்டு, கூட்டமாகக் குழுமி நின்று யுவதிகளைத் தனித் தனியே பிடித்து வைத்து விசாரித்து அவர்களை வேதனைப் படுத்தினர். அடையாள அட்டையைப் பறித்து வைத்து அதைக் கொடுக்க மறுத்த பொலிஸாரிடம் "நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி ஒரு யுவதி அவர்களது பிடியிலிருந்து தப்ப முயற்சித்ததும் கோபம் கொண்ட அவர்கள் அந்த யுவதியை அதட்டி உருட்டி அழவைத்தனர். வழக்கமாக போவோரை அல்லது வருவோரையே எந்தவொரு சோதனை நிலையத்திலும் சோதிப்பதுண்டு. ஆனால் தலைக்கேறிய போதையில் வருவோர் போவோரெல்லாம்– விசேடமாக யுவதிகள் பொலிஸாரின் சில்மிஷங்களுக்கு உள்ளாகினர். ■

## தரைப்பாதை திறந்தும் பயனில்லை!
### —போக்குவரத்து கெடுபிடி தொடர்கிறது—

(மன்னார் நிருபர்)

மன்னார் பயணிகள் மீது தற்போது மேற்கொண்டுவரும் பயண நடைமுறையானது, முன்னர் படகுப் பயணத்திற்கிருந்த கட்டுப்பாடுகளை விடவும் மிகவும் கடுமையானதாக உள்ளது.

தற்போது பயணத்திற்காக ஒருவர் 7 படிவங்களை நிரப்பி கிராம அதிகாரி, அரசாங்க அதிபர், பொலிஸ் தலைமை அதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இராணுவ இணைப்பதிகாரி ஆகியோரின் சிபாரிசு பெற்றபின்பே பயணத்திற்கு அனுமதிக்கப்படுகின்றார். விசாரணைக்கும் அவசியம் சமூகமளிக்க வேண்டும்.

இருந்த போதிலும் வவுனியாவுக்குச் செல்லும் இவர்கள் அங்குள்ள கோழிக் கூண்டு முகாமில் சில மணி நேரம் தாமதித்து சகல விபரங்களையும் தெரிவித்து வீடியோப் படமும் பிடித்த பின்பே ரயிலில் ஏற்றப்பட்டு அனுப்பப்படுகின்றனர்.

இதனால், தரைப் பாதை திறந்தால் சுதந்திரமாகப் பயணம் செய்யலாம் என எதிர்பார்த்திருந்த மக்கள் தற்போது படகு சேவை நடைபெற்றாலும் பரவாயில்லை என்ற நிலைமைக்கு வந்துவிட்டனர். ■

## காணாமல் போனோர் விவகாரம்
## மன்னிப்புச் சபையும் கண்டனம்

சிறீலங்கா ஆயுதப்படையினர், எல்.ரி.ரி.ஈ.யினரின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப் பாணத்தைக் கைப்பற்றியதிலிருந்து, 1996 முற்பகுதிவரை அப்பிரதேசத்தில் மொத்தம் 648 பேர் வரை காணாமற் போயுள்ளனர். "இது மிகவும் அட்டூழியமான செயல்" என்று இலண்டனிலுள்ள சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

"அரசாங்கம், மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த பல நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் குற்றம் புரிந்தவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடத்தப் பட்டு வருவதாகவும் கூறுகிறது. ஆனால் ஒரே வருடத்தில் இப்பாரிய தொகையினர் காணாமற் போயிருப்பது பாரதூரமானதாகும்" என்று சர்வதேச மன்னிப்புசபை, கொழும்பில் கடந்த 11ம் திகதி வெள்ளிக் கிழமை வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. ■

## தலைநகரில் பாதுகாப்பு!
### ஈழப்போர் 3– மூன்றாண்டு

'ஈழப்போர் 3' ஆரம்பமாகி 1997 ஏப்ரல் 19ம் திகதியுடன் மூன்றாண்டுகள் பூர்த்தியாகின்றன. அதனை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டிருந்தன.

கிழக்கில் புலிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்பதால் அங்குள்ள முகாம்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப் பட்டிருந்தன. எல்லைப்புற காவல் நிலைகள் மீது புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ■

## பகலில் படைகள் இரவில் புலிகள்

மட்டக்களப்பு-வாழைச்சேனைப் பகுதியில் புலிகள் சமீபகாலமாக பகலிலும் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். தாக்குதலுக்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து பட்டப் பகலிலும் சைக்கிள்களில் சீருடை அணிந்து சவாரி செய்கின்றனர். இத்தனைக்கும் மத்தியில் புலிகள் நடமாடித்திரியும் வாழைச்சேனையைச் சூழவுள்ள பகுதிகள் படையினரின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்கள் என்று கருதப்படுபவையாகும்.

படையினரும், பொலிஸாரும் நிலைகொண்டுள்ள இடங்களிலிருந்து 500 மீட்டர் தூரத்திலே புலிகள் தமது நடவடிக்கைகளை எதுவித தடையுமின்றிச் சுதந்திரமாகச் செய்து விட்டுச் செல்கின்றனர். கடந்த வாரம் வாழைச்சேனை கண்ணன் கிராமத்தில் ஏராளமான புலிகள் பகலில் சைக்கிள்களில் சவாரி செய்தனர். அச்சமயம் அங்கே சந்தை கூடியிருந்தது. புலிகளின் நடமாட்டத்தை அங்கு கண்ணுற்ற பொதுமக்கள் கடைகளை உடனடியாக இழுத்துப் பூட்டி விட்டு ஓட்டம் பிடித்தனர். புலிகள் அப்பகுதியில் நடமாடுவதாகப் படையினருக்கு முன் கூட்டியே தகவல் கிடைத்தாலும் படையினர் அங்கு உடனடியாகச் செல்வதைத் தவிர்த்து விடுகின்றனர். புலிகள் அப்பகுதியை விட்டு விலகி வாவியைக் கடந்து மறுகரை சேர்ந்ததும் படையினர் இரவில் சுற்றிவளைப்பு நடத்தி வருவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள். ■

## மோதலில் நால்வர் பலி

யாழ்ப்பாணம் அளவெட்டிப் பகுதியில் 8.04.97 அன்று ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் பலியான மூவரின் சடலங்கள் யாழ் மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தன. அடையாளம் காணும் பொருட்டே அவை வைக்கப்பட்டிருந்தன. ஆயினும் எவரும் அடையாளம் கண்டு பொறுப்பேற்கவில்லை. அதனால் பலியான மூவரும் புலிகள் இயக்கத்தினராக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

மூன்று சடலங்களும் முறையே 13,20,26 வயது மதிக்கத்தக்கவர்களுடைய சடலங்களாகும். 13 வயது மதிக்கத்தக்கவரின் தலைப்பகுதியில் சூடுவிழுந்து மூளை சிதறிக்காணப்பட்டது.

7.04.97 அன்று யாழ்ப்பாணம் ஆனைக் கோட்டை உயரப்புலம் பகுதியில் படையினரை நோக்கிக் கைக்குண்டு வீசப்பட்டது. அதன்பின்னர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. துப்பாக்கிச் சூட்டில் ஆனைக் கோட்டையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பிரதீபன் (வயது 16) என்னும் மாணவர் பலியானார். அவர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் 11ம் ஆண்டு கல்வி கற்றுக்கொண்டிருந்தவர் என்று அடையாளம் காணப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பி.யினர் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டனர். பலியானவர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும், அவரது இயக்கப் பெயர் நீலன் என்றும் படையினர் தெரிவித்துள்ளனர் என்று ஈ.பி.டி.பி.யினர் கூறியுள்ளனர். ■

## "பலியானவர் புலனாய்வாளர்"

மட்டக்களப்பில் 12.04.97 அன்று இராணுவ புலனாய்வு பிரிவைச் சேர்ந்த ஒருவர் தம்மால் சுட்டுக்கொல்லப்பட்டதாக புலிகள் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சார்ஜன்ட் ஆரியரட்ணா என்னும் அதிகாரி செங்கலடி பெற்றோல் நிரப்பு நிலையத்தில் சிவில் உடையில் நின்று கொண்டிருந்தார். புலிகள் தொடர்பாக தகவல் திரட்டவே அவர் அங்கு வந்திருந்தார் என்றும், அப்போதே சுட்டுக் கொல்லப் பட்டார் என்றும் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமக்கள் இருவர் காயமடைந்தனர். ■

## "படையினரைத் திருப்பி அழைக்கவும்!"
## மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை!

ஜெனீவாவில் அண்மையில் நடைபெற்ற 53வது மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தொடரில், அரச சார்பற்ற 53 மனித உரிமை அமைப்புக்கள் ஒரே குரலில் "இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர சிறிலங்கா அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்!" என்று கோரிக்கை விடுத்துள்ளன. 'இலங்கையின் தமிழர் தாயகத்தை விட்டு அரச படைகள் திருப்பி அழைக்கப்படவேண்டும்' என்றும் அக் கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

ஜெனீவாவில் 1993ம் ஆண்டு நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 49வது கூட்டத் தொடரிலும் "இலங்கையில் மனித நேயச் சட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு, மனித உரிமைகள் மீறப்படுவது பயங்கர விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக வளர்ந்து வருகிறது" என்று அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்தன. அப்போது 24 உறுப்பினர்களே ஒன்றிணைந்து குரல் எழுப்பினர். இம்முறை நடைபெற்ற கூட்டத் தொடரில் இத்தொகை இரட்டிப்பாகி, மொத்தம் 53 நிறுவனங்கள் ஒன்றிணைந்து கோரிக்கையில் ஒப்பமிட்டுள்ளன. நிகழ்ச்சி நிரலில் இக் கோரிக்கை 10வது இடத்தில் சேர்க்கப்பட்டிருந்தது.

"இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது- புதிதாக தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக அதிகரித்துள்ளது. அத்துடன் தமிழ் மக்களே இராணுவ நடவடிக்கைகளின் இலக்குகளாகக் கணிக்கப்படுகின்றனர்.

"தமிழ் மக்கள் தங்களுக்கானதோர் தேசிய அந்தஸ்த்தைத் தேர்ந்தெடுப்பதற்கு அருகதை உடையவர்கள். தங்களுக்கான அரசியல் தலைவிதியை நிர்ணயிப்பதற்கான உரிமையை வழுங்குவதற்கான அரசியல் தீர்வை அவர்கள் எதிர்பார்க்கின்றனர்," என்று 53 நிறுவனங்களும் தங்கள் கோரிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளன. ■

## "வன்னி நிலவரம் மேலும் மோசமாகலாம்"
## 'சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்' எச்சரிக்கை!

வன்னிப் பிரதேசத்தில் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினால் அங்கு சுகாதாரப் பிரச்சனைகள் படுமோசமான நிலையினை எட்டியிருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மருத்துவத்துறை இணைப்பாளர் டாக்டர் கிளோடி ஃபீலிக்ஸ் எச்சரித்துள்ளார். உடனடியாக நிலமைகளைச் சீர்திருத்தாமல்விட்டால் படுமோசமான சூழ்நிலையினை எதிர்பார்க்க வேண்டி வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பிராந்தியத்தில் 6 இலட்சம் முதல் 8 இலட்சம் வரையிலான மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் சொந்த இருப்பிடங்களை விட்டு பல தடவைகள் அங்கும் இங்கும் அலைந்துள்ளனர். நுளம்புக்கடியினாலும் சுத்தமான நீர் கிடைக்காமையினாலும் மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டுத் துன்பப்படுகின்றனர். இவர்களுடைய நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு போதுமான மருத்துவர்களோ, தாதிமார்களோ அல்லது உதவியாளர்களோ கிடையாது. சில மருந்துகளை எடுத்துச் செல்ல முடியாத கட்டுப்பாடுகளும் உள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சில நடமாடும் மருத்துவ முகாம்களை நிறுவி வைத்திய உதவி அளித்து வருகிறது. எனினும் மக்கள் தொகைக்கு ஏற்றதாக இது அமையவில்லை.

சில இடங்களில் தற்காலிகக் கொட்டகைகளை அமைத்து வைத்திய உதவி வழங்கப் பட்டு வருகிறது. இவற்றில் வெறும் மண் தரையில் நோயாளிகள் படுக்கவோ இருக்கவோ வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதால், தொற்று நீக்கிகளைப் பயன்படுத்துவதில் சிரமம் இருக்கிறது. இப்பகுதிகளுக்கு சீமெந்து எடுத்துச் செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

சுகாதார வசதி மட்டுமல்லாமல் இம்மக்களுக்குப் போதுமான உணவு வசதிகளும் கிடைப்பதில்லை. இதனால் நாளுக்கு நாள் நிலமை மோசமடைந்து வருவதாக டாக்டர் ஃபீலிக்ஸ் தெரிவித்துள்ளார். ■

## மரண தண்டனை

யாழ்குடாநாட்டில் படையினருக்கு தகவல் கொடுப்போர் என்று சந்தேகிக்கப்படுவோருக்கு புலிகள் இயக்கத்தினரால் பரவலாக மரணதண்டனை வழங்கப்பட்டு வருகிறது.

08.04.97 அன்று சாவகச்சேரி நுணாவில் பகுதியில் செல்லையா படைவீரசிங்கம் (வயது 60) என்பவரை புலிகள் இயக்கத்தினர் அழைத்துச் சென்றனர். நுணாவில் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் இரவோடு இரவாக அவரது வீட்டுக்குச் சென்று அழைத்துப் போனார்கள். பின்னர் செல்லையா படைவீரசிங்கத்தின் உடல் சூட்டுக்காயங்களுடன் வீதியில் கிடந்தது. ■

## கோபுரத்தில் வெடிமருந்து

யாழ்ப்பாணம் வடமராட்சியில் கரவெட்டி தச்சன்காடு பிள்ளையார் கோவில் கோபுரத்தில் இருந்து ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டன.

படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே கோபுரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

மூன்று கலன்களில் இருந்து வெடி மருந்தும், துப்பாக்கி ரவைகளும், ஆயுதங்களும் படையினரால் கைப்பற்றப்பட்டன.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## அபாயமான விமானப் பயணம்
# படையினர் மத்தியில் கிலேசம்!

நாட்டில் விமான விபத்துக்கள் அதிகரித்து வருவதால் வடபகுதிக்குச் செல்லும் படையினர் மத்தியிலும் கிலேசம் ஏற்பட்டுள்ளதாம். கொழும்பில் இருந்து வெளியாகும் 'மிட்வீக் மிரர்' வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில் அவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பலாலி விமான நிலையத்தில் இருந்து விடுமுறையில் வந்த இராணுவ அதிகாரி ஒருவர் இரத்மலானை விமான நிலையத்தில் இறங்கினார். மொரட்டுவவில் உள்ள தனது வீட்டுக்குச் செல்வதற்காக ஓட்டோவில் ஏறினார்.

ஓட்டோ சாரதியுடன் அந்த அதிகாரி உரையாடிக்கொண்டு சென்றார்.

"தம்பி! வடபகுதியில் யுத்தம் பெரிதாக இல்லை. நாங்கள் பங்கர்களுக்குள் இருக்கிறோம். எந்த நேரத்திலும் எதிரியைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். நாங்கள் பயப்படவில்லை.

ஆனால் விமானத்தில் வரும் ஒருமணி நேரம்தான் பயமாக இருக்கிறது. என்ன நடக்குமோ என்று தெரியாத நிலை நிலவுகிறது. கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு தான் அந்த ஒரு மணித்தியாலத்தைக் கழிக்கிறோம். விமானத்தில் வரும்போது நான் இறக்க விரும்பவில்லை!" என்று அவர் கூறினாராம்.

மற்றொரு பிரிகேடியர் தனது நிலை பற்றிக் கூறுகையில், விமானத்தின் முன் ஆசனத்தில் பயணம் செய்யும் தாம் விமானம் புறப்பட்டு இறங்கும்வரை 40 தரம் கண்களை மூடித் திறப்பதாகக் கூறினார்.

# யாழ்ப்பாணத்தில் 12 மணி நேர வாழ்க்கை

யாழ்ப்பாணத்தில் மக்களது நிலைமை ஒரு சாதாரணமான நிலைமை என்று கூறமுடியாது. அவர்களுடைய வாழ்க்கை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6.30 மணிக்குள் முடிவடைகின்றது. அதற்குள்ளே நடக்கின்ற வாழ்க்கைதான் அவர்களுடைய வாழ்க்கை. அந்த 12 மணித்தியாலத்திற்குள்ளும் அவர்கள் ஒவ்வொரு சோதனைச் சாவடியையும் தாண்டித் தங்களுடைய நாளாந்த வாழ்க்கையைச் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இலண்டனுக்குச் சென்றுள்ள திருமலைக் கலாமன்ற இயக்குநர் மரியசேவியர் அடிகளார் பி.பி.ஸி.க்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தில் அலுவலகங்கள் பெரும்பாலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பாடசாலைகளுக்குப் பிள்ளைகள் அநேகமாக 25 சதவீதம் தொடக்கம் 70 சதவீதம் வரையும் வருகை தருகின்றனர். ஆசிரியர்கள் பற்றாக்குறை அங்கு பெரிதும் காணப்படுகின்றது. ஆகவே, பள்ளிக்கூடங்களைப் பொறுத்த மட்டிலும், குறிப்பாக- யாழ். குருநகரில் பெரும்பாலும் அவை ஓரளவு இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று கூறலாம்.

மருந்தைப் பொறுத்தவரையில் உண்மையாக மக்களுடைய நிலைமை பரிதாபகரமானதாக உள்ளது. மருத்துவர்களின் பற்றாக்குறை உள்ளது. மருத்துவர்கள் அங்கு அதிகமாக இல்லை. இருக்கின்றவர்களும் வெளியேறுகின்றனர். இந்தச் சூழ்நிலை எமக்குப் பாதகமாகவே உள்ளது.

**கேள்வி: இராணுவத்தினரின் போக்கு அங்கு எப்படி உள்ளது?**

பதில்: உண்மையில் இராணுவத்தினரின் போக்கைப் பார்த்து நான் வியக்கின்றேன். அவர்கள் மிகவும் நட்போடு மக்களுடன் பழகுகிறார்கள். சிறுவர்களுடன் பேசுகின்றார்கள். சில சமயத்தில் மக்களுக்கு உதவுகிறார்கள். இந்தப் போக்கு உண்மையாக ஒரு மனிதத் தன்மையுடன் இணைந்த போக்காக எனக்குத் தென்பட்டது. இதற்குப் பின்னணியில் எந்த அரசியல் இருக்குமோ தெரியாது. ஆனால் அவர்களும் மனிதர்கள் என்ற முறையில் நடமாடுகின்றனர்.

# நினைவு தினத்துக்கு அரசவாகனம்

(காரைதீவு நிருபர்)

1987ல் அம்பாறை மாவட்டத்திலுள்ள அரந்தலாவை என்னுமிடத்தில் 30க்கு மேற்பட்ட பௌத்த பிக்குகள் படுகொலை செய்யப்பட்ட 10ம் ஆண்டு நினைவு வைபவ நிகழ்ச்சிகளுக்காக அரச வாகனம் பாவிக்கப்பட்டது.

நினைவுதின வேலைகளைக் கவனிப்பதற்கென 'பிக்-அப்' வாகனமொன்றின் தேவை ஏற்பட்டதும் கல்முனை (தமிழ்) பிரதேச செயலரின் 'பிக்-அப்' வாகனம் மேலிடத்து உத்தரவில் பெறப்பட்டது.

வடகிழக்கு மாகாண பொதுநிருவாக உள்வட்ட அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலர் ஜி. பரமலிங்கம் பிரஸ்தாப 'பிக்-அப்' வாகனத்தை உடனடியாக அம்பாறை பிரதேச செயலரிடம் ஒப்படைக்குமாறு கடிதமொன்றை அனுப்பியிருந்தாராம்.

அம்பாறை மாவட்ட சில பிரதேச செயலகங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிக்-அப் வாகனங்கள் இருக்கையில் ஒரே ஒரு வாகனமுள்ள கல்முனை (தமிழ்) பிரிவு வாகனத்தைப் பெற்றமை விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

# அம்பாறையை இணைக்கச் சம்மதமா?

எல்லைகள் நிரந்தரமானவை அல்ல. சமுதாயங்கள் மாறும் போது அவற்றை மாற்றி அமைப்பது அவசியம் என்று அரசமைப்பு, நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மட்டுமன்றி தமிழர் விடுதலைக் கூட்டணிகூட இவ் விடயத்தில் தமிழ் மக்களுக்குப் பாதகம் செய்யும் விதத்தில் நடக்கிறது.

12ம் திகதி இலங்கை வானொலி 'நாடும் நடப்பும்' நிகழ்ச்சியில், தமிழர் கூட்டணியும், முஸ்லிம் காங்கிரசும் ஓர் இணக்கத்திற்கு வந்துள்ளதாகக் கூறப்பட்டது. இதன் பிரகாரம் சம்மாந்துறை, கல்முனை அடங்கிய பிரதேசம் தென்கிழக்கு மாகாணம் எனவும், அம்பாறைப் பகுதி சிங்கள மாகாணங்களுடன் இணைக்கப்படும் என்றும் எஞ்சியவை வடக்கு-கிழக்கு மாகாணம் என அழைக்கப்படும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

அம்பாறைப் பகுதியைச் சிங்கள மாகாணங்களுடன் இணைக்க ஒப்புக்கொள்ளும் தமிழர் கூட்டணி, திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சேருவில பகுதி மற்றும் வெலி ஓயா (இப்போது இது மணலாறு அல்லவே!) பகுதியைச் சிங்கள மாகாணங்களுடன் இணைக்க ஏன் இணங்க மறுக்க வேண்டும்? மார்ச் மாதம் 13ம் திகதியன்று வெலி ஓயாப் பகுதியில் உள்ள புலிகளின் தளங்களை கடற்படை, ஆகாயப்படை தாக்கி அழித்ததாக இலங்கை வானொலி செய்தி வெளியிட்டது. வெலி ஓயாப் பகுதி முழுவதும் முன்னர் தமிழர் குடியிருந்த பகுதிகள் என்பதனை மறந்து விடலாகாது.

பேரினவாதிகள் 56ம் 58ம் ஆண்டுகள் தொடக்கம் 12 சதவீதத் தமிழருக்கு இலங்கையின் 1/3 பங்கு நிலப்பரப்பையும் 2/3 பங்கு கடலோரத்தையும் வாரி இறைப்பது எப்படி நியாயமாகும் என்று ஒப்பாரி வைக்கிறார்கள். ஆனால் முழு வடக்கு-கிழக்கு மாகாணமும் தமிழர் பாரம்பரியப் பிரதேசம் என்பதை அவர்கள் மறுக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதி கண்டி அரசன் கீழ் இருந்தது. ஆனால் அங்கு குடியிருந்தது தமிழர்களே. தமிழருக்குக் குடிசனத் தொகைக்கேற்பதான் காணி கொடுக்க வேண்டும் என்றால், இவர்கள் ஐக்கிய நாட்டை பின்வரும் விதமான தீர்மானத்தையன்றோ நிறைவேற்றுமாறு செய்தல் வேண்டும்!

அவுஸ்திரேலியா தனது ஒரு கோடி ஐம்பது இலட்சம் குடிமக்களையும் நாட்டின் ஒரு மூலைக்குள் முடங்கிக் கொள்ளச் செய்து, மிகுதியை சீனரும், இந்தியரும் குடியேற இடம் கொடுக்க வேண்டும்.

இப்படி ஒரு தீர்மானம் சர்வதேச மட்டத்தில் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே வட-கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதிக்குள் தமிழரும் ஒதுங்கிக்கொள்ள முடியும்?

செ.அழகரத்தினம்,
உரும்பிராய் தெற்கு.

# கைதானோரில் 9 பேர் விடுதலை

யாழ் மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களில் கைதான 150 பேர் தொடர்பாக யாழ். ஈ.பி.டி.பி. அலுவலகம் சமர்ப்பித்த பட்டியலில் உள்ளவர்களில் சிலர் பற்றிய விபரங்களை 51வது படையணி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பலேகலை தமக்கு அனுப்பியுள்ளார் என யாழ். ஈ.பி.டி.பி. அலுவலகம் தெரிவித்தது.

கைதானவர்களில் 9 பேர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும், 11 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 9 பேர் விபரம் வருமாறு:

1. மார்க்கண்டு பாஸ்கரன் (சாவகச்சேரி)
2. சிவசுப்ரமணியம் சிவாகரன்- (சாவகச்சேரி வடக்கு)
3. கந்தசாமி சிவகுமார் (யாழ்ப்பாணம்)
4. மாணிக்கம் தியாகராசா (கொட்டடி)
5. சுப்ரமணியம் செல்வநிதி (யாழ்ப்பாணம்)
6. சிவசுப்பிரமணியம் ரமேஷ் (சாவகச்சேரி)
7. ஜோசப் பீற்றர் கொல்வின் (மானிப்பாய்)
8. எம்.பிரபாகரன் (சாவகச்சேரி வடக்கு)
9. வீரசிங்கம் சுதர்னகாந்தன்.

**விடுதலையான 10 பேர் பற்றிய விபரம் வருமாறு:**

1. மார்க்கண்டு நகுலேஸ்வரன் (திருநெல்வேலி)
2. நல்லையா ஜெகநாதன், (நாயன்மார்கட்டு)
3. கறுப்பையா குமார் (யாழ்ப்பாணம்)
4. இராசன் ஜெகதீஸ்வரன் (சுன்னாகம் தெற்கு)
5. கணேசன் சதீஸ்குமார்
6. மாணிக்கம் இராஜவேல் (புத்தூர் கிழக்கு)
7. சின்னத்தம்பி பரமநாதன் (புத்தூர் கிழக்கு)
8. நகுலராசா இராசன் (யாழ்ப்பாணம்)
9. கந்தையா கணேசப்பிள்ளை (சண்டிலிப்பாய்)
10. இராசன் ஜெயந்தன் (இருபாலை)

# காணாமல்போனவர் எங்கே?

மானிப்பாய் பகுதியில் கடந்த டிசம்பர் மாதம் 25ம் திகதி காணாமற்போன மகாஜனாக் கல்லூரி மாணவனான துரைராசா தசிஜீபன் (வயது 18) என்பவரைப் பற்றி இதுவரை தகவல் எதுவும் தெரியவில்லை என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கும் முறையிட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

அளவெட்டி வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து சுதுமலையில் வசித்த இவர் கடந்த டிசம்பர் 25ம் திகதி ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சை பெறச் சென்ற வழியில் மானிப்பாயில் காணாமற் போனார் என்றும்,

பின்னர் டிசம்பர் 26ம், 27ம் திகதிகளிலும், ஜனவரி 11ம் திகதியுமாக மூன்று தடவைகள் அவரை இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் அவரது வீட்டிற்கு அழைத்து வந்து வீட்டைச் சோதனையிட்ட பின்னர் மீண்டும் தம்முடன் அழைத்துச் சென்றனர் என்றும் அவரது பெற்றோர் தெரிவித்தனர்.

அதன் பின்னர் சில முகாம்களுக்குச் சென்று அவரைப்பற்றி விசாரித்தபோது, அவரைப்பற்றி எந்தவிதத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவரான இவர் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டுப் பெறுபேறுகளை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

# கிழக்கில் சுவரொட்டிகள்

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசமெங்கும் புதிதாக ஈ.பி.டி.பி. சுவரொட்டிகள் அலங்கரிக்கின்றன.

"சம உரிமை நமது உயிர்; சமாதானம் நமது விழி; ஜனநாயகம் நமது பாதை; கௌரவமான வாழ்க்கைக்கே நமது பணி!" என்று சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் படத்துடன் கூடிய அழகிய வர்ண போஸ்டர்கள் திருக்கோவில் அக்கரைப்பற்று, காரைதீவு, சம்மாந்துறை, கல்முனை, பாண்டிருப்பு முதலான பல பிரதேசங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை மையமாக வைத்தே ஒட்டப்பட்டிருக்கவேண்டுமென்று ஒரு சாராரும், திரு. டக்ளஸ் தேவானந்தா அம்பாறை மாவட்டத்திற்கு விரைவில் விஜயம் செய்வதற்கான அறிகுறியே இதுவென மறு சாராரும் கூறிவருகின்றனர்.

இதேவேளை ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினரும் காரைதீவில் ஒரு கிளை அலுவலகத்தை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.


**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SIDDARTHA ROAD,
KIRULAPONE, COLOMBO-5.
TELEPHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை




**நன்றி நவிலல்**

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைச் சேர்ந்த திருமதி றமணி ஜெயக்குமார் அவர்கள் 03.04.97 அன்று ஸ்காபறோவில் (கனடா) காலமானார். இவர் ஜெயக்குமாரின் (ரூபன்) அன்பு மனைவியும், உமேஸ், ரமணன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு, திருமதி கந்தசாமி

**திருமதி றமணி ஜெயக்குமார்**
மறைவு: 03.04.97

(ஈ.எஸ்.கே.ஜுவலறி-கொழும்பு) ஆகியோரின் அன்பு மகளும், காலம் சென்ற திரு, திருமதி இன்ஸ்பெக்டர் தாமோதரம் பிள்ளை ஆகியோரின் மருமகளும், கருணா (பிரான்ஸ்), ராஜன் (பிரான்ஸ்), ரவி(ஈ.எஸ்.கே.கண்ணன் ஜுவலறி- ஸ்காபறோ) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தும் எமது துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றியுடயன்,
தா.ஜெயக்குமார்.


**ரிஷி அஜமாமிச லேகியம்**
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை- ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

**பழுதுபார்த்தல்**
T.V, VIDEO DECK, RADIO
போன்ற எலக்ரோனிக் உபகரணங்கள் வெளி நாட்டில் பயிற்சி பெற்றவர்களினால் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் திருத்தப்படும்.
**LIBRA ELECTRONICS**
5, DEVOS AVENUE,
BAMBALAPITIYA.
TELE PHONE: 585126

**றெறாசோ ஷிப்ஸ்**
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
**ரிஷி. S.மணி**
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

**விளம்பரப் பகுதி**

**SPOKEN ENGLISH**
BY PON. SAKTHIVEL
DIP.IN.ENGLISH (LOND)
மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச நவீன உளவியல் ரீதியில் கற்றுத் தரப்படும். 12 நாலக்ளுடன் கூடிய பாடத் திட்டம்.
ஆரம்பம்: 4.5. 97 - 27. 7. 97
நேரம்: மாலை 3.00 – 5.00
SPOKEN ENGLISH
77/20, JAMPATTAH LANE,
COLOMBO - 13. T.P. 345367



**கலை அலங்கார வகுப்புக்கள்**
★ சிகை அலங்காரம்
★ அழகுக்கலை
★ மணப்பெண் அலங்காரம்
★ 4 மாத கற்கைநெறி
**ஆரம்பம்: 28-04-97**
**FASNAZ BEAUTY SALON**
142, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை.
கொழும்பு–06.
தொலைபேசி: 589457

**SPOKEN ENGLISH**
தபால் மூலம் கல்வி
மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க தபால் மூலம் கற்றுத் தரப்படும். விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
P. O. BOX -162, COLOMBO.

**பழுது பார்த்தல்**
வீடியோ கமெரா,
போட்டோ கமெரா
திருத்திக்கொடுக்கப்படும்
**நியூ விக்ரேஸ்**
**New Victors**
40 1/3, Galle Road,
Colombo-06.
(Hongkong bank அருகாமையில்)
T.P-594492



33 வருடமாக நற்பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது எமது நிறுவனம். வாடிக்கையாளர்களிடம் அவர்களது குறைகளைக் கண்ட மாத்திரமே எடுத்துக்கூறி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே செயல்படுகிறோம்.

**மலையாள மாந்திரீகம்**
எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம். காலை 09 மணி முதல் மாலை 6 மணி வரை.
தொடர்புகளுக்கு:-
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD
KOTAHENA, COLOMBO-13
தொலைபேசி வரிசைகள்:
342463- 344831- 344832- 431137- 07841571
பக்ஸ் இல- 342464
பேஜர் சென்டர் இல- 588407
தொடர்பு கொண்டு இல- 972
இனைக் கேட்கவும்.
வெளிநாட்டில் உள்ளவர்கள்
COMPUTER INTERNET, NO.....
E/MAIL/SAMY 1.2 @ SLT.LK,
WWW LGO SLT.LK.
நேரில் சந்திக்க-
காலை 9 முதல் 12 வரை
மாலை 3 முதல் 6.30 வரை
அப்பாயின்ட்மெண்ட் பெற்று வரவும்.
வெள்ளிக்கிழமை விடுமுறை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# புலிகளின் திட்டமும் அரசின் உத்திகளும்!

## உலாவந்த வதந்திகளும்–ஊகங்களும்

**க**டந்த இரண்டு வாரங்களாக ஒரு வதந்தி அட்டகாசமாக உலா வந்தது.

பின்னணிகளை ஆராய அவகாசமே எடுத்துக் கொள்ளாமல் சில செய்தியாளர்களும், விமர்சகர்களும் கிளப்பிவிட்ட ஊகங்கள் கட்டுக்கதைகள் என்பவற்றின் உபயத்தில் அந்த வதந்தி உலா நடத்தியது.

வதந்தியின் நடுநாயகமாக இருந்தவர் பிரிட்டிஷ் பிரதி வெளிநாட்டமைச்சர் லியாம் பொக்ஸ்.

நடுநாயகமாக அவர் இருந்தாலும்கூட வதந்திகள் உருவாக அவர் காரணமல்ல.

இலங்கையில் ஆளும் தரப்புக்கும், எதிரணிக்கும் இடையில் இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாக ஒரு புரிந்துணர்வுடன் செயற்படுவது என்று கடிதப் பரிமாற்றம் நடைபெற்றது. அதன் பின்னணியில் லியாம் பொக்ஸ் இருந்தார். விஷயம் அவ்வளவுதான்.

கடிதங்களிலும் அப்படியொன்றும் பெரிய நம்பிக்கைத்தரும் வாக்கியங்கள் கிடையாது.

**தீர்வுக்கு ஒத்துழைப்புத்தரத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் சொல்வதும் இது முதற் தடவையல்ல.**

அரசியல் தீர்வு யோசனையை அரசாங்கம் முன்வைத்தபோது ஜனாதிபதி சந்திரிக்காவும், ரணிலும் அலரி மாளிகையில் சந்தித்தனர். புன்னகைத்தனர். கருத்துப் பரிமாறினர்.

அது நேரடியாக நடந்த சந்திப்பு. கடிதம் மூலமாக முகம் பார்க்காமல் பரிமாறப்பட்ட கருத்தல்ல. நேருக்குநேர் முகம் பார்த்து நடத்தப்பட்ட கருத்துப் பரிமாற்றம்.

அப்போதும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒத்துழைப்போம் என்றுதான் ஜனாதிபதியிடம் கூறியிருந்தார் ரணில்.

தற்போது கடிதம் மூலமாக அதனைச் சொல்லியிருக்கிறார்.

அப்படிப் பார்க்கும்போது முன்னர் நேரடியாக சந்தித்த சூழலைவிட தற்போதைய சூழல் கடிதம் மூலமாக பேசுமளவுக்கு கெட்டுப் போய்விட்டது என்றுதானே அர்த்தம்.

அப்படியிருந்தும் ஜனாதிபதிக்கும், எதிரணித் தலைவருக்கும் இடையே நடைபெற்ற கடிதப் பரிமாற்றத்துக்கு பெரு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது ஏன்?

பின்னணி விபரங்கள் சுவாரசியமானவை. சில பத்திரிகைகளிலும், விமர்சனங்களிலும் வெளியான அவசரக் கணிப்புக்களுக்கும், ஊகங்களுக்கும் முற்றிலும் முரணானவை.

விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பிரமுகர் லோரன்ஸ் திலகர் வன்னிக்கு வந்து சென்றார். பிரபாகரனுடன் ஆலோசித்தார் என்று செய்திகள் வெளியானதுமே இலங்கை அரசும், அதன் வெளியுறவுத் துறையும் உஷாராகிவிட்டனர்.

பாரிசில் இருக்கும் திலகருடன் வன்னியில் இருந்தே பேசக்கூடிய சற்றலைட் தொலைபேசி வசதி பிரபாகரனிடம் இருக்கிறது.

அப்படியிருந்தும் திலகரை நேரடியாக அழைத்துப் பிரபா பேசுகிறார் என்றால் மிக மிக இரகசியமான விடயத்தைப் பற்றி கலந்து பேசப்பட்டுள்ளது என்றுதானே அர்த்தம்.

ஆயுதக் கொள்வனவு மற்றும் நிதி தொடர்பான விடயங்களைப் பேசுவதாக இருந்தால் அதற்குப் பொறுப்பானவர் திலகர் அல்ல. எனவே- ஏதோ ஒரு அரசியல் சதுரங்கத் திட்டம் பற்றி திலகருக்கு இரகசிய உத்தரவுகள் கொடுக்கவும், கலந்து பேசவுமே அவரை நேரடியாக பிரபா அழைத்திருக்கலாம் என்று இலங்கை அரசு ஊகித்தது.

கொழும்பிலுள்ள தமிழ் கட்சி வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு புலிகளின் புதிய திட்டம் என்னவாக இருக்கலாம் என்று புலனாய்வு அமைப்பைச் சேர்ந்தவர்கள் கருத்தறிந்தனர்.

இதற்கிடையே புலிகளுக்கு எதிரான வட்டாரங்கள் லோரன்ஸ் திலகரின் விஜயம் பற்றிய செய்தியை தமது கோணத்தில் வியாக்கியானம் செய்தன.

'போரில் புலிகள் பலவீனமாகிவிட்டனர். அதனால்தான் பேச்சுக்கு ஓடுப்பட்டுத் திரிகிறார்கள்' என்று கதை பரவியது.

ஆனால் அரசாங்கமோ, புலனாய்வு அமைப்புக்களோ அதனை நம்பத் தயாராக இல்லை.

போரில் ஏற்பட்ட பலவீனங்களை சீர்செய்யாமல் பேச்சுக்கு முன்வரக்கூடியவர் அல்ல பிரபாகரன் என்பது அவர்களுக்குத் தெரியும்.

எனவே- வேறொரு திட்டத்துடன்தான் பிரபாகரன் காய் நகர்த்துகிறார் என்பதை புரிந்து கொண்டனர்.

புலிகளுக்கு தற்போதுள்ள பிரதான நெருக்கடி உள்நாட்டில் அல்ல. வெளியுலகில் இலங்கை அரசுக்குள்ள செல்வாக்குத்தான் பிரதான பிரச்சனை.

ஏதாவது ஒரு நாட்டின் பின்பலம் கிடைத்து விட்டால் போதும், உள்நாட்டில் தற்போதுள்ள அரசியல்- இராணுவ நிலைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திவிடலாம் என்பதுதான் புலிகளின் நம்பிக்கை.

வெளியுலகில் புலிகளையும், புலிகளின் பிரசாரங்களையும் முறியடிக்கவும், புலிகளை தனிமைப்படுத்தவும் இரண்டு பிரதான துருப்புச் சீட்டுக்களை பயன்படுத்துகிறது இலங்கை அரசு.

**ஒன்று: போர் நிறுத்தத்தையும், பேச்சு வார்த்தையையும் முதலில் முறித்தவர்கள் புலிகள் என்ற குற்றச்சாட்டு.**

**இரண்டு: அரசியல் தீர்வு யோசனை ஒன்றை முன்வைத்திருப்பதாகவும், அதனை புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் ஆதரித்து வருவதாகவும் செய்யும் பிரசாரம்.**

இந்த இரண்டு துருப்புச் சீட்டுக்களையும் பயனற்றதாக்கச் செய்யத்தான் புலிகள் சர்வதேச அரங்கில் தமது உத்திகளை வகுத்துள்ளனர்.

**'பேச்சுக்குத் தயார், ஆனால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன்' என்று புலிகள் கூறிவருகின்றனர்.**

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு அரசாங்கம் தயாராக இல்லை. போரில் தனது வெற்றி காரணமாக புலிகள் பணிந்து பேச்சுக்கு வந்தால் அதனை தனது அரசியலுக்கும் சாதகமாக பயன்படுத்துவதே அரசின் நோக்கம். எனவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை கோருவது மூலமாக அரசின் உண்மையான நோக்கத்தை வெளியுலகில் அம்பலப்படுத்துவதுதான் புலிகளின் திட்டம்.

வெளிநாடுகளின் இராஜதந்திரிகள் மத்தியில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக வலியுறுத்துவது.

'இலங்கை அரசுக்கு உண்மையான சமாதான நோக்கம் இருந்தால் உங்கள் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொள்ளட்டுமேன். ஏற்க முடியாது என்றால் இராணுவத் தீர்வில் நாட்டம் என்றுதானே அர்த்தம். எனவே எமக்கு வேறு வழியில்லை. எது பக்கம் நில்லுங்கள்.' என்று அந்த ராஜதந்திரிகளின் ஆதரவை வென்றெடுப்பதுதான் புலிகளின் திட்டம்.

அரசியல் தீர்வு யோசனை விடயத்தில் ஆளும் தரப்பும், எதிர்க்கட்சியும் ஒருபோதும் ஒத்துழைத்துச் செயற்படப்போவதில்லை. அதனால் மூன்றாம் தரப்பு அவசியம். அதற்கு அரசு மறுக்குமானால் தீர்வை வழங்கத் தயாராக இல்லை என்றுதான் அர்த்தம் என்பதும் வெளியுலகத்தால் ஏற்கப்படக்கூடிய நியாயம் தான்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை அரசு விரும்பாமல் இருப்பதும், அரசியல் தீர்வு விடயத்தில் தொடரும் இழுத்தடிப்பும் சர்வதேச அரங்கில் புலிகளுக்கு அரசியல் ரீதியாக சாதகமான அம்சம்தான்.

எனவே அவற்றின் அடிப்படையில் சர்வதேச சமூகம் முன்பாக இலங்கை அரசை அம்பலப்படுத்துவதுதான் பிரபாகரனின் விருப்பம்.

**பிரபாகரனைப் பொறுத்தவரை அரசாங்கம் நீதியான தீர்வை வழங்கப்போவதில்லை என்பதில் சந்தேகம் அற்றவராக இருக்கிறார். பேச்சுக்கள், பேச்சுக்கான முயற்சிகள் என்பவை அந்த உண்மையை சர்வதேச சமூகம் அறியச் செய்வதாக அமையவேண்டும் என்பதில்தான் அன்றுமுதல் இன்றுவரை நாட்டமுடையவராக இருக்கிறார்.**

சர்வதேச அரங்கில் இலங்கை அரசின் உண்மையான தோற்றத்தை அம்பலப்படுத்தி புலிகளுக்கு சாதகமான, ஆதரவான சூழ்நிலையை உருவாக்குவதுதான் லோரன்ஸ் திலகருக்கு பிரபாகரன் இட்ட உத்தரவாக இருக்கமுடியும்.

அதனை உணர்ந்துதான் இலங்கை அரசு குறிப்பாக வெளிநாட்டமைச்சு மிகத் துரிதமாக செயற்ப்பட்டது.

அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைத்



துள்ளோம் என்று சொல்லிச் சொல்லியே வெளியுலகில் தமது நியாயத்தன்மையை இனிமேலும் நிரூபித்துக் கொண்டிருக்க முடியாது.

"யோசனைகளை வைத்தீர்கள் சரிதான். இத்தனை காலமாக இழுத்தடிக்கிறீர்களே? எப்போது முடிக்கப் போகிறீர்கள்?" என்று வெளியுலக இராஜதந்திரிகள் கேட்கத் தொடங்கிவிடுவர்.

**எனவே- புதிய உத்தியோடு வெளியுலகில் பிரசாரம் செய்ய வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது.**

அது தவிர, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நியாயப்படுத்தும் பிரதான காரணியாக இருக்கக்கூடியது ஆளும் கட்சி, எதிர்க்கட்சி முரண்பாடுதான்.

ஆக, மொத்தத்தில் புலிகளின் சர்வதேச பிரசார உத்திகளுக்கு பதில் மார்க்கம் ஒன்றை தீவிரமாக யோசித்தபோது கிடைத்த வரப் பிரசாதம்தான் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உடன்பாடுபற்றிய பிரசார தந்திரம்.

**இனப்பிரச்சனை தீர்வுக்கு சர்வதேச மத்தியஸ்தம் வேண்டாம் என்று கூறிக் கொண்டே, அந்த மத்தியஸ்தம் ஏற்படாமல் தடுக்கும் தந்திரத்துக்கு ஒரு மத்தியஸ்தர் தேவைப்பட்டிருக்கிறார். அதுதான் முரண்பாடான வேடிக்கை.**

**அரசியல் ரீதியில் மட்டுமே எதிரும் புதிருமாக இரண்டு கட்சித் தலைவர்கள் கடிதம் பரிமாறக்கூட ஒரு வெளிநாட்டு மத்தியஸ்தர் தேவைப்படும்போது, போரிடும் இரு தரப்புக்கள் பேசுவதற்கு மட்டும் மத்தியஸ்தம் தேவையில்லை என்று கூறுவது எத்தனை பெரிய முரண்பாடு-**

சரி அந்த மத்தியஸ்தர் யார்? லியாம் பொக்ஸ். அவர் பிரிட்டிஷ் பிரதியமைச்சர் என்பது தெரியும்.

அவர் ஏன் திடீரென்று இரு கட்சிகளின் மத்தியில் மத்தியஸ்தரானார்?

பிரிட்டனில் தேர்தல் நடக்கப்போகிறது. எதிர்வரும் மே மாதம் தேர்தல்.

ஆட்சியைப் பிடிக்க கன்சர்வேட்டிவ் கட்சியும், தொழிற்கட்சியும் மல்லுக்கட்டிக் கொண்டு நிற்கின்றன.

**தற்போது ஆட்சியில் இருப்பது கன்சர்வேட்டிவ் கட்சி. சமீபத்தில் நடைபெற்ற கருத்துக் கணிப்புப்படி கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 30 வீதமும், தொழிற்கட்சிக்கு 50 வீதமும் செல்வாக்கு இருப்பதாக தெரிய வந்துள்ளது. மீதி 20 வீதம் லிபரல் கட்சிக்கு.**

ஆக, கடும் போட்டி. கடுமையாக பிரசாரம் செய்ய வேண்டிய கட்டம்.

ஆனால் திரு. லியாம் பொக்ஸ் அங்கு பிரசாரத்தில் ஈடுபடாமல் இங்கு வந்து பிரச்சனை தீர்த்துக் கொண்டிருக்கிறார்.

வழக்கமாக இவ்வாறான விடயங்களில் ஈடுபடும் இராஜதந்திரிகள் தமது சம்பந்தம் இருந்ததை உடனடியாக ஒப்புக்கொள்வதில்லை. இரகசியமாக வைத்திருப்பர்.

ஆனால், லியாம் பொக்ஸ் தனது தலையீட்டில் இரு கட்சிகளும் இணக்கம் கண்டுவிட்டதாக பெரிதாக அறிவிக்கிறார். பேட்டி கொடுக்கிறார்.

இத்தனைக்கும் நடைபெற்றது கடிதப் பரிமாற்றம்தான். கடிதத்திலும் எந்த தீர்க்கமான அம்சம் தொடர்பாகவும் ஒரு உடன்பாடும் கிடையாது.

உதாரணமாக, ஒற்றையாட்சியை மாற்ற இணக்கம் என்றோ, அல்லது பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இத்தனை மாதத்துக்கு விவாதித்து முடிப்போம் என்ற காலவரையறை இணக்கமோ...இப்படி ஏதாவது ஒரு விடயத்திலாவது இணக்கம் காணப்பட்டிருந்தால் அதனை உடன்பாடு என்று கூறலாம். அப்படி ஒன்றுமே இல்லை.

**ஒரு ஜனநாயக நாட்டில் ஆட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும் ஒரு தேசியப் பிரச்சினையில் ஒத்துழைப்போம் என்று சொல்வதுகூட அதிசயமாகக் கருதப் படுமானால், ஜனநாயகம் என்றால் என்ன? என்று கேள்வி எழுகிறது.**

இந்தக் கேலிக்கூத்துக்கு ஒரு பிரிட்டிஷ் அமைச்சர் உரிமை கோருகிறார். பிரிட்டிஷ் அரசும் அதனை உறுதி செய்கிறது. புலிகளோடு மட்டும் தொடர்பில்லை, ஏனைய முயற்சிகள் உண்மை என்று அறிக்கை விடுக்கிறது.

'சோழியன் குடுமி சும்மா ஆடுமா?' பிரிட்டன் தேர்தலில் அங்கு வாக்காளர்களாக உள்ள ஆசிய மக்கள்மீது குறிவைத்திருக்கிறது கன்சர்வேட்டிவ் கட்சி.

பிரிட்டனில் இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள், இலங்கையர்கள், பங்களாதேஷ்காரர்கள் உட்பட கிட்டத்தட்ட 15 இலட்சம் பேர் வாழ்கிறார்கள்.

பிரிட்டனின் இரண்டு பிரதான கட்சிகளும் அவர்கள்மீது குறிவைத்துள்ளன.

இந்தியாவினதும், பாகிஸ்தானினதும் சுதந்திரதின 'விழாக்களை முன்னிட்டு பெரிய விருந்து வைபவங்களையே இம்முறை நடத்தியிருந்தார் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர்.

இலண்டனில் உள்ள இந்துக் கோவில்களுக்கும் விசிட் அடித்து இந்துக்களை மகிழ்வித்திருக்கிறார் பிரதமர் ஜோன் மேஜர். தொழிற்கட்சியினரும் அதற்கு போட்டியாக கோவில்களுக்கும், மசூதிகளுக்கும் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இந்துக் கோயிலுக்கு ஜோன் மேஜர் சென்றதையும் அங்கு மாலையணிவிக்கப்பட்டதையும் கூட புகைப்படமாக்கி பிரசாரம் செய்கிறார்கள்.

இந்நிலையில்தான் இலங்கை விவகாரத்தில் பேர் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பத்தையும் தவறவிடாமல் பயன்படுத்தியிருக்கிறார் லியாம் பொக்ஸ்.

வெளிநாட்டு விவகாரம் ஒன்றில் தலையீடு செய்வது என்பது உள்நாட்டு தேர்தல்களில் பயன்படுத்தப்படுவது புதுமையல்ல.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பாலஸ்தீன-இஸ்ரேல் பிரச்சினையில் தலையிட்டதையும், ஈராக்குக்கு பாடம் புகட்டியதையும் சொல்லித்தான் கிளிண்டனே மார் தட்டினார்.

தமது நாடு பிறிதொரு நாட்டுப் பிரச்சினையில் தலையிட்டு நல்ல பெயர் எடுத்தது என்றால் குறிப்பிட்ட நாட்டு மக்களுக்குள் ஒரு பெருமிதம் ஏற்படும். அந்தப் பெருமிதம் வாக்குகளாக மாறும் என்பதுதான் ஒரு பொது நம்பிக்கை.

ஆக, ஆசிய நாட்டவரின் வாக்குகளை மட்டுமல்ல பிரிட்டிஷ் மக்களின் பரவலான வாக்குகளைப் பெறும் பிரசார நடவடிக்கையின் ஒரு அம்சமாகவும் இலங்கை விவகாரத்தை பயன்படுத்தியுள்ளார் லியாம் பொக்ஸ.

அதேவேளை புலிகளுடனோ வேறு எந்த தமிழ்க் கட்சிகளுடனோ லியாம் பொக்ஸ் தொடர்பு கொள்ளவும் இல்லை. பேசவும் இல்லை.

அதுமட்டுமல்ல **"பயங்கரவாதம் என்பது சமூக அமைப்புக்கு அச்சுறுத்தலானது. அதனை வெற்றி கொள்ளவே இந்த இணக்கப்பாட்டுக்கு உதவினேன்"** என்று லியாம் பொக்ஸ் கூறியிருக்கிறார்.

அவரது அக் கூற்றைக்கூட கவனியாமல் லியாம் பொக்ஸை புலிகளுக்கும் நண்பராக காட்டி வதந்தி பரப்பினர் சில செய்தியாளர்கள்.

புலிகளுக்கோ மெல்லவும் முடியவில்லை. விழுங்கவும் முடியவில்லை. பிரிட்டன் முயற்சியை கண்டித்தால் வம்பை விலைக்கு வாங்குவதாக முடிந்துவிடும். பிரிட்டனில்தான் புலிகளின் சர்வதேச செயலகம் இயங்குகிறது. பிரிட்டிஷ் அரசை பகைப்பது புத்திசாலித்தனமல்ல. அதே வேளை இந்த உடன்பாட்டைக் காட்டி இலங்கை அரசு காய் நகர்த்துவதையும் தடுத்தாக வேண்டும்.

அதனால்தான் புலிகளின் சர்வதேச செயலகப் பேச்சாளரான அன்ரன் ராஜா பின்வருமாறு கூறினார்: **"இரு கட்சிகளும் [illegible]துள்ள உடன்பாடு ஏதாவது ஒரு அரசியல் திட்டத்தில் இணக்கம் காணக் கூடியதாக இருக்குமா என்பது சந்தேகம் தான். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் தான் பேச்சு என்பதே எமது நிலைப்பாடு!"**

**மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு எதிரான முயற்சி என்று நேரடியாகக் கூறினால் பிரிட்டிஷ் அரசின் முயற்சியை குறைகூறுவதாக அமைந்துவிடும். எனவே புத்திசாலித்தனமாக தமது நிலைப்பாட்டை முன்வைத்துள்ளதுடன், இரு கட்சி இணக்கம் மீதான சந்தேகத்தையும் புலிகள் தெரிவித்துவிட்டனர்.**

பிரிட்டிஷ் அரசும் விழுந்தடித்து ஒரு அறிக்கைவிட்டது. **"புலிகளோடு பேசவும் இல்லை. நமது முயற்சியின் நோக்கம் அதுவும் அல்ல. அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே இணக்கம் காணச் செய்தது மட்டுமே நமது முயற்சி"** என்று காரசாரமாக மறுப்பு விட்டிருந்தது பிரிட்டிஷ் அரசு.

**புலியையும் சிங்கத்தையும் ஒன்றுபடச் செய்வதுதான் தனது பணி என்று சொல்லாமல் சொல்லிவிட்டது பிரிட்டிஷ் அரசு.**

ஆனால் சிங்கங்களும் வெளிப் பேச்சில் தான் ஒற்றுமையாக இருப்பதாக காட்டிக் கொள்ளுகின்றன.

இணக்கப் பிரசாரத்தின் பின்னர் ரணில் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் சொல்லிருப்பது நம்மை கனவு காணாமல் தடுக்கப் போதுமானது;

**"அரசுடன் ஏற்பட்ட இணக்கம் அரசியலமைப்புதிருத்த ஷரத்துக்களுக்கான இணக்கமாக கொள்ளப்படவேண்டியதல்ல"**

முடியைப் பிய்த்துக் கொள்ளலாம் போல் இருக்கிறது. ஆனாலும் தற்போதைக்கு சர்வதேச அனுதாபத்தை தக்கவைப்பதில் அரசு வெற்றி பெற்றுள்ளது என்பது மட்டும் உண்மை!.

எனினும் எதிர்க்கட்சி தனது ஒத்துழையாமையை வெளிப்படுத்தியேதீரும். தனது எதிர்த்தரப்பில் காணப்பட்டுள்ள போலியான ஒற்றுமையை தற்போதைக்கு சகப்புடன் நோக்குவதைத்தவிர புலிகளுக்கு வேறு வழியில்லை.

சமரும் தொடரும் சதுரங்கமும் தொடரும். ஆயினும் சர்வதேச அரங்கில் அரசியல் சதுரங்கத்தில் அடுத்த காய் நகர்த்தலுக்காக புலிகள் கொஞ்சம் காத்திருந்தேயாக வேண்டும்.

நாரதர்

---

## அதிரடி அய்யாத்துரை



**வெள்ளைக்காரன்** என்ன செய்தாலும் வெரி குட்டாகத்தான் இருக்கும் எண்டது எங்கடை ஆட்கள் சிலரது அபிப்பிராயம். அதுதான் பாருங்கோ ரிஷிமூலம் நதிமூலம் ஆராயாமல் மிஸ்டர் பொக்ஸை எக்கச்சக்கமாகப் பாராட்டிப் போட்டினம். தமிழ் தெரிந்திருந்தால் அந்த மனுசனுக்கு சத்தியமா ஜலதோஷம் பிடிச்சிருக்கும்.

**அதென்ன** மரியாதையோ, 'மாசற்ற பயமோ' தெரியேல்லை, எதுக்கெடுத்தாலும் ரெண்டு எழுத்தாருக்காத்தான் கதைப்பது மாதிரி கூட்டான கட்சிக்காரர் தங்கள் அறிக்கையில் ஒரு வாக்கியம் சேர்த்துப்போடுவினம். இந்த முறை பகிடி என்ன தெரியுமோ? ரெண்டு எழுத்தாருடன் பேசத்தான் 'உடன்பாடு' வந்திருக்கு எண்டு கூட்டான கட்சியினர் டூப் அடிக்க, சேச் சே.. அப்படி ஒண்டும் கிடையாது எண்டு அந்த நாட்டு அரசே மறுத்துப் போட்டுது. பாத்தியளோ, ஏதோ நடக்க, ஏதோ சொல்லி எத்தனை காலம் எங்களை மேய்ச்சிருக்கினம் எண்டு தெரியுதோ?

**ரெண்டு எழுத்தாரின்** ஆலோசகர் வீட்டுக் காவலில்தான் இருக்கிறார். வெளியே வரவே போறார் எண்ட துணிச்சலில் அவரும் வெளிநாட்டில் எண்டு வதந்தி பரப்பியிருக்கினமாக்கும். கரிகாலரும் வன்னியில்தான் இருக்கிறார். தீர்வு யோசனையை பரிசீலிக்கலாம் எண்டும், ரெண்டு எழுத்தாருக்குள் இரண்டாம் இடம் தனக்குத்தான் எண்டும் ஒரு பத்திரிகையாளருடன் அவர் பேசியபின்னர் கிழக்கில் இருந்து அவர் திருப்பி அழைக்கப்பட்டார். இந்தச் செய்தி முரசில் சில வருடங்களுக்கு முன்னர் வெளியானதல்லோ. அதன்பின்னர் இதுவரை அவர் பேட்டிகள் எதுவும் கொடுக்கவில்லை. கிழக்கில் வேறு பிரமுகர்கள்தான் பேட்டிகள் கொடுத்துக் கொண்டிருக்கினம். அப்படியிருக்க அவர்தான் ரெண்டு எழுத்துத் தலைவரின் பிரதிநிதியாக வெளிநாடு போனதாக சூப்பர் டூப் கேட்டதும் தலை சுத்திப்போட்டுது. வதந்திக்கும் ஒரு எல்லை வேண்டாமோ? போதாக்குறைக்கு இந்தியாவிலை ரெண்டு எழுத்து ஆலோசகருக்கு மருத்துவம் நடந்தது எண்டும் கதை. அந்தளவுக்கு நிலமை இருந்தா ரெண்டு எழுத்தாருக்கு என்ன குறை? புகுந்து விளையாடிப் போடுவினமல்லோ.

**யாழில்** கசிப்பு உற்பத்தி கடுகதி வேகத்தில் பெருகுகிறதாம். கசிப்பு அடிப்பதில் சீருடையார் மத்தியிலும் பிடிப்புக் காணப்படுகிறதாம். அது ஒரு புறமிருக்க, யாழ்ப்பாணம் கொட்டடியில் ஒரு வாசிகசாலையின் பெயரில் கசிப்பு உற்பத்தியாளர்களுக்கு மிரட்டல் விடுத்து பிரசுரம் ஒண்டும் வெளியிடப்பட்டது. தமிழ்க் கட்சியான கழகத்தார்தான் பின்னணியில் நிண்டவையாம். பிரசுரத்தைப் படிச்ச சீருடையார் வாசிகசாலைக்காரருக்கும், அங்கிருந்த கழகக்காரருக்கும் பூசை நடத்திப்போட்டினமாம்.

**அழகான பெண்கள்** தனியாக இருக்கும் வீடுகளுக்குப் போய் "உங்களைக் கல்யாணம் செய்ய விருப்பம்" எண்டு கோரிக்கை விடப்படுகிறதாம். விருப்பம் சொல்லுறதும், கேட்கிறதும் தப்பில்லை, மறுத்தாலும் முறைக்கிறதும், பின்னால் துரத்துறதும்தான் பிரச்சனையாகக் கிடக்காம். யாழில்தான் இந்த அன்புத் தொல்லையும் பின்னர் ஆக்கினையும்! மேலே முறையிட சம்பந்தப்பட்டவை பயப்பிடுவினமாம். சிலர் வீடுகள் மாறிச் செல்லுகினமாம். இதுக்கு என்ன பெயர் வென்றெடுப்போ, விரட்டியெடுப்போ?

**திருவானமலையில்** பிரசித்தி பெற்ற கோயில் தீர்த்தத்தில் ஒரு கண்கொள்ளாக் காட்சி. நகரத் தலைவர் உட்பட முக்கிய பிரமுகர்கள் சிலரின் குடும்பத்தினர் மட்டும்தான் தீர்த்தத்தில் இறங்க அனுமதிக்கப்பட்டவையாம். திவ்வியமாய் தீர்த்தமாடினவையாம். சனம் கடும் முறைப்போடு தடுக்கப்பட்டதாம். பின்நோக்கி தள்ளப்பட்டதாம். அதற்கு முன்னரே நகரத்தின் சூரியர் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்துப்போட்டார். "பேச வேண்டியவர்களுடன் பேசிவிட்டோம். மக்கள் தீர்த்தமாடலாம்" எண்டு அறிக்கை. நம்பிப்போன சனத்துக்கு பட்டை நாமம். அரசியல்வாதிகள் மக்கள் எண்டு சொல்வது தன்னையும் தன் சுற்றத்தாரையும் எண்ட விஷயம் சனத்துக்கு விளங்காமல் போனதுக்கு யார் பொறுப்பு?

**சுவாமி விவேகானந்தரின்** நூற்றாண்டு இது. தலைப்பாகையோடு கம்பீரமான அந்த மனுசனின் தோற்றமே சிலிர்க்கவைக்கும். நம்பிக்கை தரும் விவேகானந்தரின் ஒரு பொன்மொழி.

**"நேற்று**
**என்பதை மறந்துவிடுங்கள்.**
**நாளை**
**எப்படியோ?**
**அதைப் பற்றிய**
**கவலையையும் விடுங்கள்!"**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



புலிகள் இயக்கத்தினரின் நடமாட்டம் இருப்பதாகத் தகவல் கிடைத்ததும் இந்தியப் படை அணியொன்று விரைந்தது.

அவர்கள் தேடிச்சென்ற பகுதியில் புலிகள் யாரும் இல்லை. தவறான தகவல் கிடைத்த ஏமாற்றத்துடன் திரும்பிக் கொண்டிருந்தபோது புலிகள் திடீரென்று தாக்கினார்கள்.

இந்தியப் படையினருக்கு தவறான தகவல் கிடைக்கச் செய்துவிட்டு, அவர்கள் எதிர்பாராத இடத்தில் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

இந்தியப் படைத் தரப்பில் பத்துக்கு மேற்பட்ட படையினர் பலியானார்கள். மானிப்பாய் பகுதியில் அச் சம்பவம் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மற்றொரு மோதல் புலிகள் தரப்பில் காயமடைந்தவர்களில் ஒருவர் நடேசன்.

காயமடைந்த நடேசன் இந்தியப் படையினரால் தூக்கிச் செல்லப்பட்டார். மயக்கத்தில் கிடந்த நடேசன் கண்திறந்து

தலைவரான கலைஞர் கருணாநிதியும் நெடுமாறனும் 1987களில் நெருக்கமாக இருந்தவர்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில் கூட்டாக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள்.

இந்தியப் படைக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் நடந்துகொண்டிருந்த போது கலைஞர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தாரராம் நெடுமாறன்.

"இந்தியப் படையுடன் புலிகள் சண்டையிட முடியுமா? எப்படித் துணிந்தார்கள்?" என்று ஆச்சரியமாகக் கேட்டாராம் கலைஞர் கருணாநிதி.

அப்போது கலைஞர் கருணாநிதியுடன்

வழங்குவதற்காகவே அழைப்பு விடுத்திருந்தார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரின் மறைவுச் செய்தி புலிகளுக்கும் பலத்த அதிர்ச்சியாக அமைந்தது.

அஞ்சலி தெரிவித்து அறிக்கை விட்டிருந்தனர் புலிகள்.

### மாற்றுக்கருத்து

இந்தியப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் ஆரம்பமான பின்னர் இந்தியப் படையினருடன் நட்பாக பழகும் ஆட்களை எச்சரிக்கத் தொடங்கி இருந்தனர் புலிகள் என்று கூறியிருந்தேன் அல்லவா?

எச்சரிக்கையை மீறியவர்களில் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். வேறு சிலர் நேரடியாக மிரட்டப்பட்டனர்.

இந்தியப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகள் இயக்கத்தினர் பல்வேறு ரூபங்களில் நடமாடினார்கள்.

இந்தியப் படையினர் இரவு நேரமாகியதும் காவலரண்களைவிட்டு முகாம்களுக்குச் சென்றுவிடுவர். மீண்டும் மறுநாள் காலையில்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

'ஈழநாடு' அலுவலகம் யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் அமைந்திருந்தது. இந்தியப் படை வருவதற்கு முன்னர் இலங்கை விமானப்படையினர் குண்டுபோட்டதில் ஈழநாடு அலுவலகம் அருகே உள்ள வீடொன்று நொருங்கியது. அதிஷ்டவசமாக ஈழநாடு காரியாலயமும், உள்ளிருந்தவர்களும் தப்பிக் கொண்டனர்.

அப்போது தப்பிக்கொண்ட ஈழநாட்டுக்கு இப்போது ஆபத்து வந்தது.

**உண்மையில் 'நடுநிலை' என்ற கருத்தே ஒரு ஏமாற்றுத்தான். சரியான நிலை நிற்றல் என்பதும் நடுநிலை என்பதும் ஒன்றல்ல. புலிகளுக்கும் ஆமாம் போட்டு, இந்தியப் படைகளுக்கும் ஆமாம் போட்டிருந்தால் அதுதான் நடுநிலை. இரு தரப்பிலும் யார் தவறு செய்தாலும் துணிந்து சுட்டிக்காட்டுவது சரியான நிலை. ஈழநாடு ஓரளவு அப்பணியைச் செய்தது எனலாம்.**

# "பிரபாகரன் என் காலில் வந்து விழுந்தால்தான் போர் நிறுத்தம் செய்வேன்!"

**-ராஜீவ் காந்தி-**

அரசியல் தொடர்
அற்புதன்~
எழுதுவது

பார்த்தபோது இந்தியப் படையின் மருத்துவமனையில் இருந்தார். தற்போது தமிழ்ழக் காவல்துறைத் தலைவராக இருப்பவர் அவர்தான்.

நடேசன் வடமராட்சியைச் சேர்ந்தவர். பிரபாகரனின் இளம்பிராய நண்பர்களில் ஒருவர். நடேசனின் தந்தை பாலசிங்கம், சமசமாஜக் கட்சியின் முக்கிய பிரமுகராக இருந்தவர். இலங்கைப் பொலிஸில் கடமையாற்றிய நடேசன், தன்னுடன் கடமையாற்றிய சிங்களப் பெண் ஒருவரை காதலித்து மணந்துகொண்டார்.

### ஜனாதிபதி ஜெயில் சிங்

1987ம் ஆண்டின் இறுதியில் இந்திய ஜனாதிபதி ஜெயில் சிங்கை திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணியும், தமிழ் தேசிய கட்சித் தலைவர் பழ. நெடுமாறனும் சந்தித்தனர்.

இலங்கையில் இந்தியப் படை நடவடிக்கைகள் தொடர்பாகவே அச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்திய ஜனாதிபதி ஜெயில் சிங்கும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் அப்போது பனிப்போரில் ஈடுபட்டிருந்தனர்.

ஜனாதிபதி ஜெயில் சிங்கை ராஜீவ் காந்தி மதிப்பதில்லை என்பதுதான் பனிப்போருக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

அச் சமயத்தில்தான் ஜெயில் சிங்கை சந்தித்து தம் உள்ளக்கொதிப்பைக் கொட்டினார்கள் வீரமணியும், நெடுமாறனும்.

**"பிரதமர் இந்திரா காலத்தில் புலிகளுக்கு இந்தியா பயிற்சி அளித்தது, ஆயுதங்கள் கொடுத்தது. இப்போது ராஜீவ் காந்தி இந்திய இராணுவத்தை அனுப்பி ஆயுதங்களைப் பறிக்க நினைப்பது நியாயமா?"** என்று கேட்டனர்.

அதற்கு அன்றைய இந்திய ஜனாதிபதி ஜெயில் சிங் சொன்ன பதில் இதுதான்:

முரசொலிமாறனும் இருந்தார்.

**"போர் நிறுத்தம் செய்வது பற்றி ராஜீவ் காந்தியிடம் பேசினேன். பிரபாகரன் என் காலடியில் விழுந்து கெஞ்சினால்தான் போரை நிறுத்தச் சொல்லுவேன்"** என்று ராஜீவ் தன்னிடம் கூறியதாக நெடுமாறனிடம் சொன்னாராம் முரசொலி மாறன்.

### எம்.ஜி.ஆர். வேண்டுகோள்

சென்னையில் இருந்த கிட்டுவை கைது செய்யவேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ந்து எழுந்து கொண்டிருந்தன. ஆனாலும் எம்.ஜி.ஆர். அசைந்து கொடுக்கவில்லை. கிட்டுவை வீட்டுக்காவலில் வைத்தால் போதும் என்று கூறிவிட்டார்.

9.11.87ல் தமிழக சட்ட மன்றம் கூடும் போது இந்தியப் படை போர்நிறுத்தம் செய்ய வேண்டும் என்று கோரும் தீர்மானத்தை கொண்டுவருமாறு கி. வீரமணி, பழ. நெடுமாறன் உட்பட பல கட்சிகள் வேண்டுகோள் விடுத்தன.

இந்த அறிக்கைகள் வெளியான சூட்டோடு சூடாக அன்றைய வெளிநாட்டு அமைச்சர் நட்வர்சிங்கை எம்.ஜி.ஆரிடம் அனுப்பி வைத்தார் ராஜீவ் காந்தி.

தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படாமல் தடுப்பதற்காக எம்.ஜி.ஆருடன் பேசவே தனது வெளிநாட்டமைச்சரை அனுப்பினார் ராஜீவ். பிரதமர் ராஜீவின் வேண்டுகோளை எம்.ஜி.ஆர். ஏற்றுக்கொண்டார். ஆயினும், போர் நிறுத்தம் செய்யப்படவேண்டும் என்று நட்வர்சிங் எம்.ஜி.ஆர். வேண்டுகோள் விடுத்திருப்பார் என்று கருதப்பட்டது.

எம்.ஜி.ஆர். மரணமாவதற்கு முதல்நாள் புலிகளுக்கு ஒரு செய்தி அனுப்பினார். தன்னை வந்து உடன் சந்திக்குமாறு கூறியிருந்தார்.

வழக்கமாக பிரபாகரனின் பிரதிநிதியாக



வன்னியில் பிரபாகரனுடன் நெடுமாறன். மடியில் பிரபாவின் பிள்ளைகள் சாள்ஸ், துவாரகா.

தான் காவலரண்களுக்கு வருவார்கள்.

அவ்வாறு இந்தியப் படையினர் சென்ற பின்னர் அப்பகுதிகளில் புலிகள் தங்கியிருப்பார்கள். சுதந்திரமாகத் திரிவார்கள்.

'பகலில் இந்தியப் படை இரவில் புலிகள்' என்று மக்கள் கூறிக்கொள்வார்கள்.

இக் கட்டத்திலேதான்- 1988இன் ஆரம்பத்தில்- ஈழநாடு பத்திரிகையில் ஒரு ஆசிரியர் தலையங்கம் வெளியானது.

இந்தியப் படையோடு புலிகளின் யுத்தத்தை மறைமுகமாக குறைகூறுவதுபோல அத் தலையங்கம் தீட்டப்பட்டிருந்தது.

"மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கலாமா?" என்று அந்த ஆசிரியர் தலையங்கத்தில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

மதியம் 2 மணியளவில் மூன்று இளைஞர்கள் 'ஈழநாடு' அலுவலகத்துக்குள் புகுந்தனர். செய்தி ஆசிரியர் மகாதேவாவுக்கு இளைஞர்களைக் கண்டதும் யார் என்பது புரிந்துவிட்டது. ஏன் வந்திருக்கிறார்கள்? என்பதுதான் தெரியாது.

**"என்ன தம்பியவை, என்ன சொல்லுங்கோ?" என்றார் மகாதேவா.**

**வந்தவர்களில் ஒருவர் நகைச்சுவை உணர்வுடன் பதில் சொன்னார்;**

**"ஒன்றுமில்லையண்ணே, குண்டு வைக்கப்போகிறோம். சாக விருப்பமில்லையெண்டால் நீங்கள் ஓடித் தப்புங்கோ!"**

அச்சியந்திரப் பகுதியில் இருந்தவர்கள் உட்பட அனைவரையும் வெளியே ஓடுமாறு

'ஈழநாடு' குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதும் இந்தியப் படை உயரதிகாரிகள் அந்த இடத்துக்கு விரைந்து வந்தனர்.

**"பார்த்தீர்களா புலிகளின் செயலை? அவர்களின் சுயரூபம் இதுதான். உங்களுக்கு என்ன உதவி தேவை? சொல்லுங்கள் செய்கிறோம். உடனடியாக இந்தியாவில் இருந்து அச்சியந்திரம் கொண்டு வந்து தருகிறோம். பத்திரிகையை வெளியிடலாம்!"** என்றார் ஓர் உயர் அதிகாரி.

அதனை நாகரிகத்தோடு மறுத்துவிட்டனர் ஈழநாடு நிர்வாகத்தினர்.

இந்தியப் படையினரிடம் உதவியாக அச்சியந்திரம் பெற்று பத்திரிகை வெளியிட்டால் சுதந்திரமான பத்திரிகையாக செயற்பட முடியாமல் போகலாம். புலிகளின் விரோதத்தையும் தொடர்ந்து சம்பாதிக்க வேண்டி இருக்கலாம் என்னும் காரணங்களால் மறுப்புத் தெரிவித்துவிட்டனர்.

இலங்கைப் படைகளுடன் புலிகள் யுத்தம் நடத்தியபோது யாழ் கோட்டையில் இருந்து ஏவப்படும் ஷெல்கள் ஈழநாடு காரியாலயம் முன்பாகவும் வந்து விழுவதுண்டு.

அவ்வாறான காலங்களிலும் தம் உயிரைப் பணயம் வைத்து செயற்பட்டவர்கள் ஈழநாடு பத்திரிகையாளர்கள் என்பதை மறந்துவிடலாகாது.

ஒரு போராட்டம் என்பது பல்வேறு பகுதிகளைக் கொண்டது. பல்வேறு உட்கூறுகளைக் கொண்டது.

ஆயுதம் ஏந்துவோர் மட்டும்தான் போராளிகள் அல்ல; ஷெல் வீச்சுக்கள், விமானக் குண்டுவீச்சுக்கள் மத்தியில் மக்களுக்கான அத்தியாவ்சிய சேவைகளை வழங்கிக் கொண்டிருப்போரும் பேராளிகள்தான். 'ஈழநாடு' பத்திரிகையாளர்களும்

# 'ஈழநாடு'ம் குண்டுவெடிப்பும்!

"போராளிகளுக்கு பயிற்சி அளிப்பது என்று இந்திரா முடிவுசெய்தபோது, நான் உள்துறை அமைச்சராக இருந்தேன். என்னிடமே அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார் இந்திரா.

பயிற்சிக்கான இடம், பயிற்சி கொடுப்பவர்கள் ஆகியோரை நானே என்னுடைய நேரடிக் கண்காணிப்பில் தேர்ந்தெடுத்தேன்.

எனக்கும் இந்திராவுக்கும் தவிர வேறு யாருக்கும் இந்த இரகசியம் தெரியாமல் பாதுகாக்கப்பட்டது. **என்ன நோக்கத்திற்காக தமிழ் இளைஞர்களுக்கு இந்தப் பயிற்சியை அளித்து ஆயுதம் கொடுத்தோம் என்பது இன்றையப் பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தெரியாது. இந்திரா எத்தகைய தொலைநோக்குப் பார்வையோடு இதைச் செய்தார் என்பதை அறிந்துகொள்ளும் சக்தி துரதிஷ்டவசமாக ராஜீவுக்குக் கிடையாது. என்னிடமும் இது குறித்து ஆலோசனை கேட்பதில்லை.**

அறிவு முதிர்ச்சியும், அனுபவ முதிர்ச்சியும் இல்லாதவர்களே ராஜீவின் ஆலோசகர்களாக இருக்கின்றனர். அதனால்தான் இந்த மோசமான நிலை ஏற்பட்டுள்ளது."

இதுதான் தம்மிடம் ஜெயில் சிங் வருத்தத்தோடு தெரிவித்த கருத்து என்று திரு. நெடுமாறன் தனது நூல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

### ராஜீவ் சொன்னது

திரு. நெடுமாறன் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்



அகதிகள்

எம்.ஜி.ஆரைச் சந்திப்பவர் அன்று சென்னையில் இருக்கவில்லை. அதனால் வேறு ஒருவர் சென்றார். அவரை எம்.ஜி.ஆர். சந்திக்கவில்லை. வழக்கமாக சந்திப்பவரையே அனுப்பும்படி கூறிவிட்டார் எம்.ஜி.ஆர்.

பெருந்தொகை ஒன்றை புலிகளுக்கு

யாழ்ப்பாணத்தின் பாரம்பரியங்களுடன் கலந்த பத்திரிகை ஈழநாடு. அதன் நிர்வாக ஆசிரியராக அப்போது இருந்தவர் நமச்சிவாயம் சபாரத்தினம். அவர் முன்னர் யாழ் இந்துக்க்ல்லூரி அதிபராக இருந்தவர்.

அமரர் சபாரத்தினத்தால் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கங்கள் தனித்துவமானவை. யாரையும் நேரடியாகக் குறிப்பிட்டு புண்படுத்தாமல் நாசுக்காக எழுதப்படுபவை.

இலங்கை அரசு, இலங்கை அரச படைகளை கண்டித்தெல்லாம் மிக நுட்பமான தலையங்கங்களை தீட்டியிருந்தவர் அமரர் சபாரத்தினம்.

அதனால் தான் 1982ல் யாழ் நூல்நிலையத்துடன் சேர்த்து ஈழநாடு காரியாலயமும் தீக்கிரையாக்கப்பட்டது.

அப்போது யாழ் அரசாங்க அதிபராக இருந்த திரு. லயனல் பெர்னாண்டோவின் முயற்சியின் பயனாக ஈழநாடு நஷ்டஈடு பெற்றது. அதன் காரணமாக புது அச்சியந்திரத்துடன் மறுபடி ஈழநாடு வெளியாகிக் கொண்டிருந்தது.

இந்நிலையில்தான் 'ஈழநாடு' வெளியிட்ட ஆசிரியர் தலையங்கம் புலிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

கூறினார்கள் வந்த இளைஞர்கள்.

அச்சியந்திரப் பகுதியில் வேலை செய்தவர்களில் பிராமணரான இளைஞர் ஒருவர் பயந்து அழத் தொடங்கிவிட்டார். வந்தவர்களில் ஒருவரது காலைப்பிடித்துக் கெஞ்சினார்.

"உன்னை ஒன்றும் செய்யமாட்டோம். அழாதேடா ஓடு...." என்று கன்னத்தில் ஒன்று போட்டு துரத்திவிட்டார்கள்.

புது அச்சு இயந்திரத்தின் கீழே குண்டு வைக்கப்பட்டது.

குண்டு வெடித்ததில் அச்சியந்திரமும், காரியாலயத்தின் ஒரு பகுதியும் நாசமாகின.

### பின்னணியில்

'ஈழநாடு' மீது புலிகள் தாக்கியதற்கு பின்னணியில் இருந்தவர்கள் இரண்டு பேர். ஒருவர் 'முரசொலி' ஆசிரியர் திருச்செல்வம். மற்றவர் யாழ் மாநகரசபை முன்னாள் ஆணையாளர் சிவஞானம்.

இந்தியப் படையினர் 'முரசொலி', 'ஈழமுரசு' பத்திரிகைகளை தகர்த்துவிட்டனர். ஈழநாடு மட்டும் வெளியாகிக் கொண்டிருந்தது. அந்தப் பொறாமை காரணமாக குறிப்பிட்ட ஆசிரியர் தலையங்கத்தைக் காட்டி கோள்மூட்டிவிட்டார்கள்.

**புலிகளுக்கு சாதகமான செய்திகளை வெளியிடுவதும், புலிகள் தரப்பில் உள்ள தவறுகளை வெளியிடாமல் இருப்பதுமே 'நடுநிலை' என்று கருதப்பட்டதுதான் மிகப் பெரிய சோகம். தற்போதும் தமிழ் விமர்சகர்கள் பலருக்கு 'நடுநிலை' என்பதன் அர்த்தம் அதுதான்.**

அதில் அடங்குவர்.

எனினும் அரசபடைகளால் 'ஈழநாடு' எரியூட்டப்பட்டபோது கண்டித்த 'நடுநிலையாளர்கள்' புலிகளால் ஈழநாடு தகர்க்கப்பட்டபோது மூச்சுவிடவில்லை. சக தமிழ் பத்திரிகைகள் சில கூட வாயே திறக்கவில்லை என்பதும் அவற்றின் 'நடுநிலை'க்கு நல்ல உதாரணம்(?!)

இன்னொரு விடயத்தையும் நினைவு கூர்ந்தாக வேண்டும்.

இலங்கை அரசு மற்றும் அரச படைகள் தொடர்பாக விமர்ச்சிக்கத் தயங்காத தமிழ் விமர்சகர்கள் இந்தியப் படையின் அத்துமீறல்களை கண்டும் காணாமல் இருந்தனர். தென்னிலங்கை ஆங்கிலப் பத்திரிகைகள் வெளியிட்டளவுகூட சில தமிழ்ப் பத்திரிகைகளில் இந்தியப் படையின் கொடுமைகள் வெளிக்கொண்டு வரப்படவில்லை.

இந்தியத் தூதரகத்துடனான உறவு, இந்திய விசாக்கள், இந்தியாவிடம் எதிர்பார்த்த நலன்கள் போன்றன அவர்கள் கையைக் கட்டிப் போட்டன என்பதற்கு பல ஆதாரங்கள் உண்டு. **'நடுநிலை' என்று கூறிக்கொண்டே தமக்குப் பாதகம் ஏற்படாது என்று உத்தரவாதமான பக்கத்தை மட்டுமே வாசகர்களுக்குத் தெரிவித்து வந்தன.** அதனால்தான் இந்தியப் படை கால அத்துமீறல்கள் பல மறைக்கப்பட்டன.

1988ம் ஆண்டு ஆரம்பத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளை வரும் வாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது- இராஜதந்திரி

# விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராஜதந்திர நகர்வு!

## இணக்கப்பாட்டின் சூத்திரதாரி கதிர்!

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையே இனப்பிரச்சினை அணுகுமுறைகள் தொடர்பாக இசைவொன்று எட்டப்பட்டுள்ளது, என்ற செய்தியே தற்போது முக்கிய செய்தியாக அமைந்திருக்கிறது.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் இந்த இணக்கம் முக்கியத்துவம் மிக்கதாக இருக்குமென இதன் பின்னணியில் இருந்த வெளிவிவகார அமைச்சர், லக்ஷ்மன் கதிர்காமர், பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியாம் பொக்ஸ் ஆகியோர் கூறியுள்ளனர்.

அரசபிரசார சாதனங்களும் குறிப்பிட்ட இணக்கம் தொடர்பாக முக்கியத்துவம் கொடுத்திருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இனப்பிரச்சினை என்பது இலங்கையைப் பொறுத்தவரை ஒரு சாபக்கேடாகவே இருந்துவருகின்றது.

இனப்பிரச்சினையை இலங்கையின் பிரதான தேசியக்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமது சொந்த அரசியல் லாபங்களுக்காகவே பயன்படுத்தியிருந்தன.

**பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் ஆகியன உட்பட இலங்கை- இந்திய ஒப்பந்தம் கூட தோல்வியில் முடிவடைந்தமைக்கு இலங்கையின் தேசியக் கட்சிகளது கடும் போக்கே முக்கிய காரணமாக அமைந்திருந்தது.**

ஒரு பந்தாட்டம் போன்றே பிரதான தேசியக் கட்சிகள் இலங்கை இனப்பிரச்சினையை அணுகியிருந்தன.

ஆனால் தேசியக் கட்சிகளின் அணுகுமுறைகளில் காணப்பட்ட தவறுகளும், பேரினவாத சக்திகளின் அழுத்தங்களுமே, இனப்பிரச்சினையைப் பூதாகாரமாக மாற்றிவிட்டுள்ளன.

அத்துடன் இலங்கையின் ஓர் உள்நாட்டு யுத்தத்தையும் நீண்டுசெல்லச் செய்துள்ளது.

தென்னிலங்கையின் தேசியக் கட்சிகளுக்கும், வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல் கட்சிகளுக்குமிடையே இனப்பிரச்சினை ஓர் இழுபறியான நிலையை ஏற்படுத்திவிட்டுள்ளது.

இந்த இழுபறிக்கு தேசியக் கட்சிகளின் கடும் போக்குகள் மட்டும் காரணமல்ல; தமிழ்க் கட்சிகள் கூட இனப்பிரச்சினையைக் கையாளும் விதத்தில் ஒற்றுமையை வெளியிட்டிருக்கவில்லை.

**தமிழர் பிரச்சினைத்தீர்வுக்காகக் குரல் கொடுப்பதாகத் தமிழ் மிதவாத, தீவிரவாதக் கட்சிகள் குறிப்பிட்ட போதிலும் அவற்றினிடையே காணப்பட்ட ஒற்றுமையீனங்களே பேரினவாத சக்திகளுக்கு தமிழர் பிரச்சினை மீது 'சவாரி' விடவும் இடம்கொடுத்தன.**

தேசியக் கட்சிகள் இனப்பிரச்சினையைத் தமது சொந்த அரசியல் லாபங்களுக்காகப் பாவித்திருந்தன. ஆனால் மறுபுறத்தே இனப்பிரச்சினை பற்றிப் பிரஸ்தாபித்த தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியிலும் அரசியல் லாபங்களும், சுயநலமுமே குடி கொண்டிருந்தன.

தற்போது ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையே ஏற்பட்டுள்ள இணக்கத்தை தமிழ் கட்சிகள் பலவும் வரவேற்றுள்ளன.

தேசியக் கட்சிகளுக்கிடையே இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டால் மட்டுமே தீர்வு குறித்த அணுகுமுறைகளை இலகுவானதாக்க முடியும் என்று தமிழ் அரசியல் கட்சிகள் குறிப்பிட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரே ஐ.தே.க., பொ.ஐ.ஐ.மு. ஒப்பந்தத்தின் பின்னணியில் நின்றுள்ளார். அவர் இந்த ஒப்பந்தம் பற்றிக் குறிப்பிடுகையில், "பிரிட்டனில் வட அயர்லாந்துப் பிரச்சினையை பிரிட்டனின் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒருமித்த கண்ணோட்டத்துடன் அணுகுகின்றன. அதேபோல இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினையையும் எதிர்கட்சியும், ஆளுங்கட்சியும் ஒருமித்த கண்ணோட்டத்துடன் அணுகுவதற்கு இந்த இணக்கம் அல்லது புரிந்துணர்வு வழியமைக்கும்," எனத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் இந்த இணக்கம் ஏற்பட்டது தொடர்பான பின்னணியும் கவனத்துக்குரியதாகிறது.

பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியாம் பொக்ஸ்- திரு.கதிர்காமருக்கும்,எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுக்கும் நெருக்கமான நண்பர்.

பிரிட்டனில் தற்போது ஆளும் கட்சியாக உள்ள கன்சர்வேட்டிவ் கட்சியுடனும் ஐ.தே.கட்சிக்கு நல்லுறவு இருக்கிறது.

இவற்றின் பின்ணியில்தான் திரு. லியாம் பொக்ஸ் மூலமாக எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை ஒரு இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவர முயன்றிருக்கிறார் லக்ஷ்மன் கதிர்காமர்.

இதேவேளை, சமீபத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் எதிர்க்கட்சியையும், எதிர்க்கட்சித் தலைவரையும் கொலைகாரக் கூட்டமாக சித்தரித்தே பொதுஜன முன்னணியினர் பிரசாரம் செய்ததை நோக்கக் கூடியதாயிருந்தது.

ஆனால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒத்துழைப்புக் கோரும் கடிதம் ஜனாதிபதியிடமிருந்தே எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்களின்போது திரு. ரணில் விக்கிரமசிங்கவின் ,தனிப்பட்ட அரசியல் நேர்மை தொடர்பாகவும், பொதுஜன முன்னணித் தலைவி என்ற ரீதியில் ஜனாதிபதி சந்தேகம் தெரிவித்திருந்தார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக எதிர்க்கட்சியையும், ஜனாதிபதியையும் உள்ளூராட்சித் தேர்தலின் முன்பாக தமிழ்க் கட்சிகள் கூட்டாக சந்தித்திருந்தன.

அப்போது எதிர்க்கட்சியினர் தம்மிடம் தெரிவித்த கருத்துக்களை தமிழ்க் கட்சிகள் சார்பாக திரு. மு.சிவசிதம்பரம் ஜனாதிபதியிடம் எடுத்து விளக்கினார்.

உள்ளூராட்சித் தேர்தலை பின்போடுதல்,

அதன் மூலமாக ஆளும் தரப்புக்கும், எதிரணிக்கும் இடையே பொதுவான இணக்கப்பாட்டை உருவாக்கக்கூடிய சூழ்நிலையை கட்டியெழுப்புதல் பற்றியே அங்கு பேசப்பட்டது.

**அப்போது தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகளுக்கு பதிலளித்த ஜனாதிபதியவர்கள்: "எதிரணித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு போதும் ஒத்துழைக்கப் போவதில்லை," என்றே தெரிவித்திருந்தார்.**

ஆளும் கட்சியினர் அரசியல் ரீதியாக தம்மீது அபாண்டமான பிரசாரங்களை செய்யும்போது இனப்பிரச்சினை தீர்வில் மனம்விட்டுப் பேசி ஒத்துழைக்கக் கூடியதாக இருக்காது என்றே திரு. ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ்க் கட்சிகளிடம் தெரிவித்திருந்தார்.

ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் அரங்கில் செயற்பட்டவாறும், ஒருவரை ஒருவர் கொலை செய்யும் அளவுக்கு மோதிக்கொண்டும் இனப்பிரச்சினை விவகாரத்தில் மட்டும் இணைந்து செயற்பட முடியும் என்பது சாத்தியமில்லாத விடயமாகவே காணப்படுகிறது.

**இனப்பிரச்சினை விவகாரத்தில் ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் சேர்ந்திருந்து பேசுவதற்கு முதற்படியாக இருதரப்பும் அரசியல் மோதல் நிறுத்தம் ஒன்றையே செய்யவேண்டியவர்களாயுள்ளனர்.**

ஆனால் தற்போதைய இணக்கம் இரு தரப்பினதும் அரசியல் மோதல் மத்தியிலேயே காணப்பட்டுள்ளது. கடும் மோதல் மத்தியில் இரு தரப்புத் தலைவர்களும் கஷ்டப்பட்டு தம் முகத்தில் வரவழைத்துக் கொண்ட புன்னகை போன்றே அமைந்துள்ளது.

ஜனாதிபதியிடமிருந்தே முதலில் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே இவ்வாறான இணக்கப்பாடு அரசாங்கத்துக்கும் ஏதோ ஒரு வகையில் அவசியப்பட்டுள்ளது என்பதையே உணரத்தக்கதாயுள்ளது.

சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகள் சில இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டுவருவதாக சமீபத்தில் செய்திகள் வெளியாகியிருந்தன.

விடுதலைப் புலிகளின் பாரிஸ் பிரமுகர் திரு. லோரன்ஸ் திலகரும் வன்னிக்குச் சென்று திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்து திரும்பியதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

**சர்வதேச மத்தியஸ்தம் ஊடான பேச்சுவார்த்தை என்பதையே விடுதலைப் புலிகள் தற்போது வலியுறுத்தி வருகின்றனர்.**



கதிர்காமர், லியாம் பொக்ஸ்-*இராஜதந்திரத்திற்கு உதவிய நட்பு*

சர்வதேச ஆதரவைத் திரட்டுவதில் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவராகவே விளங்கி வருகின்றார். அவ்வாறு இருந்தும் அரசியல் தீர்வு யோசனைகள் தொடர்பான காலம் கடத்தல்கள் சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கை அரசின் நம்பகத்தன்மை, தீர்வு மற்றும் நேர்மை தொடர்பாக சந்தேகங்களை உருவாக்கி வருகின்றன.

இவ்வாறான நிலையானது சர்வதேச மத்தியஸ்தம் பற்றிய கருத்தோட்டங்களை நியாயப்படுத்துவதாக அமைவதுடன், இலங்கை அரசுக்கு அரசியல் தீர்வைவிட இராணுவத் தீர்விலேயே நாட்டம் உண்டு என்னும் விடுதலைப் புலிகளின் பிரசாரத்தையும் உரமாக ஒலிக்கச் செய்வதாகிவிடும் என்பதை லக்ஷ்மன் கதிர்காமர் உணர்ந்தேயிருப்பார்.

**எனவே- இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வை காண முடியும். அதற்கேற்ற சூழ்நிலை தோன்றிவிட்டது என்பதை சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தக் கூடியதான ஒரு நகர்வை உருவாக்கியிருக்கிறார் திரு. லக்ஷ்மன் கதிர்காமர்.**

சர்வதேச மத்தியஸ்தம் அவசியமற்றது என்பதை அழுத்தம் திருத்தமாக கூறிவருபவர் திரு. கதிர்காமர். இலங்கைக்குள்ளேயே பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டவராகவே அவர் விளங்குகிறார்.

ஆளும் தரப்பு- எதிர்த்தரப்பு இணக்கப்பாடு தொடர்பாக வெளியான ஊகங்களும், வரவேற்று வெளியான செய்திகளும் திரு. கதிர்காமரின் இராஜதந்திரத்துக்குக் கிடைத்துள்ள வெற்றி என்றே கொள்ளப்படக் கூடியதாகவுள்ளது.

**விடுதலைப் புலிகளுக்கும் இந்த இணக்கப்பாட்டுக்கும் இடையே தொடர்பிருப்பதாகச் செய்தி நிறுவனங்கள் முடிச்சுப்போட்டிருந்தன. இந்த இணக்கப்பாடு தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ள சந்தேகம் அந்த ஊகங்களுக்கு ஆப்பு வைப்பதாக அமைந்திருந்தது.** சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகளின் இராஜதந்திர நகர்வுகள் மேலோங்காமல் தடுப்பதுதான் இந்த இணக்கப்பாட்டுக்கான பிரதான அடிப்படை என்பதும் புலனாகின்றது.

---

# இன்னொரு சதுரங்கம்





சர்வதேச மத்தியஸ்தம் தொடர்பாக அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே பொதுக் கருத்து இருக்கிறது.

சர்வதேச மத்தியஸ்தம் வருமானால் தம் இரு தரப்புக்குமே பாதகம் என்பதை அவர்கள் அறிந்துள்ளனர்.

இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப் படுவதற்கு தான் தடையாக இருப்பதாகக் கருதப்படக்கூடிய சூழ்நிலை தோன்றுவதை எதிர்க்கட்சி விரும்பாது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் சிறுபான்மை மக்களின் வாக்கு வங்கி ஐ.தே.கட்சியின் பக்கம் திரும்பியிருக்கிறது.

அடுத்த தேர்தல்களில் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதில் சிறுபான்மை யினரின் வாக்கு வங்கி ஒரு பிரதான பாத்திரம் வகிக்கப்போகிறது.

எனவே தற்போதைக்கு ஐ.தே.கட்சிக்கு கிடைத்துள்ள வரப்பிரசாதம் அதுதான்.

அதே நேரம் சிறுபான்மையினரின் பக்கம் ஐ.தே.கட்சி சாய்ந்துவிட்டது. வாக்கு களுக்காக சிறுபான்மையினரிடம் நாட்டை தாரைவார்த்துவிட்டது என்ற அவப்பெயர் ஏற்படாமலும் பார்த்துக் கொண்டாக வேண்டும். இல்லாவிட்டால் சிங்கள மக்களின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டு விடலாம். ஆக, இனப்பிரச்சனைக்கு இறுதியும், உறுதியுமான தீர்வொன்றை எட்டும்போதுதான் தாம் எப்பக்கம் நிற்கிறோம் என்பதை மக்களுக்கு தெரிவித்தாக வேண்டிய கட்டாயம் கட்சிக்கு ஏற்படும்.

அப்படியான இக்கட்டான நிலை ஏற்படுவதைவிட, தீர்வு முயற்சிகள் இழுபட்டுச் செல்வதுதான் ஐ.தே.கட்சிக்கு சாதகமானது. அதனால் தீர்வு யோசனைகளை எத்தனை காலத்திற்கு ஆராய்ந்து இழுத்தடிக்க முடிந்தாலும், அதற்கு ஒத்துழைக்க ஐ.தே.கட்சி தயாராகவே இருக்கும்.

அதன் மூலம் இரண்டுவிதமான இலாபம் இருக்கிறது.

ஒன்று; தீர்வுக்கு ஐ.தே.கட்சி தடை என்ற அபிப்பிராயம் உருவாகாது.

இரண்டு; பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடர்பாக சிறுபான்மை யினரின் நம்பிக்கையீனம் மேலும் வளரும்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்று வருமானால் இவ்வாறு காலம் தாழ்த்த முடியாமல் போகும். ஏதாவது ஒரு முடிவு விரைவாக எட்டப்படுமானால் ஐ.தே.கட்சி தனது நிலைப்பாட்டை சொல்லியேயாக வேண்டும்.

சரி, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்பட்டால் அரசுக்கு என்ன சிக்கல்?

தற்போது அரசாங்கம் முன்வைத் துள்ள தீர்வு யோசனையை கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் திருப்தி யில்லை என்று கூறியுள்ளன.

ஆனால், ஐ.தே.கட்சி உட்பட சிங்கள இனவாதிகள் அத் தீர்வு யோசனையில் மிதமிஞ்சிய அதிகாரங்கள் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

புலிகளோ குறித்த யோசனைகளை பரிசீலிக்காமலேயே அரை குறைத் தீர்வு என்று நிராகரித்துவிட்டனர்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வரு மானால் தற்போதைய தீர்வு யோசனையில் உள்ளதைவிட அதிகமான அதிகாரங்களை சேர்த்தேயாக வேண்டும். சேர்க்கவே மாட்டேன் என்று விடாப்பிடியாக நிற்க முடியாது. எல்லாத் தரப்பும் விட்டுக் கொடுத்தாக வேண்டும், இறங்கி வந்தாக வேண்டும் என்றே மத்தியஸ்தம் செய்வோர் எதிர்பார்ப்பர்.

உடனே என்னாகும்? வெள்நாட்டார் சொல் கேட்டு நாட்டை சிறுபான்மை யினருக்கு கொடுத்து விட்டார் சந்திரிகா என்று பிரசாரம் கிளம்பும்.

எனவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பது பாதகம் என்பதே அரசின் தீர்மானமாக இருக்கிறது.

ஆக, மூன்றாம் தரப்பு மத்தியஸ்த விடயத்தில் ஆளும் தரப்புக்கும்-எதிர்க் கட்சிக்கும் இடையே இருக்கக்கூடிய பொதுக் கருத்தும், தர்மசங்கடங்களும் ஒத்துழைப் புடன் செயற்படுவோம் என்று பேச வைத்திருக்கிறது!

மற்றொரு திட்டமும் அரசாங்கத்திற்கு இருக்கலாம். சிறுபான்மையினரின் வாக்கு வங்கி ஐ.தே.கட்சியின் பக்கம் திரும்பியிருப் பதை பொதுஜன முன்னணி முகச் சுளிப்புடன்தான் நோக்கியுள்ளது.

தாம் ஒரு தீர்வு யோசனையை முன் வைத்தும் தமிழ்பேசும் வாக்காளர்கள் தம்மை ஆதரிக்கவில்லையே என்ற ஆதங்கம் பொ.ஐ.முன்னணிக்கு இல்லாமல் இல்லை.

அதனால் அடுத்த தேர்தலுக்கு முன்பாக ஐ.தே.கட்சியின் சுயரூபத்தை சிறுபான்மையினரிடம் அம்பலப்படுத்தவும் இதனை ஒரு பிடியாக பாவிக்கலாம்.

ஐ.தே.கட்சி மனப்பூர்வமாக தீர்வுக்கு ஒத்துழைக்காது என்பது பொ.ஐ. முன்னணிக்கு தெரியும்.

எப்படித்தான் தாம் முழுமையாக ஒத்துழைத்தாலும் நல்ல தீர்வு காணப் பட்டால் சிறந்த ஜனாதிபதி என்ற பெருமை திருமதி சந்திரிக்காவுக்கே போய்ச் சேரும் என்பதால் ஐ.தே.கட்சி பொறுத்த சந்தர்ப் பங்களில் பின்னடிக்கும்.

அப்படி நடக்குமானால், 'பார்த்தீர்களா ஐ.தே.க.உடன்பாட்டை மீறிவிட்டது' என்று சிறுபான்மை மக்களிடம் சொல்லும் பொ.ஐ. முன்னணி.

தான் முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனைகளில் குறிப்பிட்ட சிலவற்றை யாவது ஐ.தே.கட்சியை ஏற்றுக்கொள்ளச் செய்வது, அல்லது அக் கட்சியை தீர்வுக்கு எதிரான கட்சியாக அம்பலப்படுத்துவது என்ற திசையில் பொ.ஐ.முன்னணி காய் நகர்த்தப்போகிறது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## கடந்த வாரம்

கிராம அதிகாரி ஒருவனின்
பெண் வேட்டையைப் பற்றி
மல்லாவிடம் புகார் வருகிறது!
பூலான் கோபப்படுகிறாள்.
கிராம அதிகாரியை
வேட்டையாடும் பொறுப்பை
பூலானிடம் ஒப்படைக்கிறான் மல்லா.
கிராம அதிகாரியை
சுட்டுக் கொல்கிறாள் பூலான்.

இனி....

கிராம அதிகாரியை பூலான் சுட்டுக்கொன்ற ஆவேசமும்; அவள் காட்டிய வேகமும் மல்லாவை மட்டுமல்ல, கொள்ளைக் கோஷ்டியினர் அனைவரையுமே பூலானிடம் மரியாதை செலுத்தச் செய்துவிட்டது.

மல்லாகூட 'என்ன மாதிரியான பெண் இவள்! ஆண்களிடம்கூட இல்லாத ஆவேசம் இவளிடம் இருக்கிறதே' என்று பிரமித்துப் போனான்.

தனக்கு அடுத்த இடத்தில் பூலானை மல்லா நியமித்தபோது, அவன் கூட்டத்தில் இருந்த சிலருக்கு அறவே பிடிக்கவில்லை. மல்லாவுக்கு பயந்து மௌனமாக இருந்தார்களே தவிர, பூலானை அதுவும் ஒரு பெண் பிள்ளையை தலைவியாக ஏற்றுக் கொள்வதாவது? என்றுதான் இகழ்ச்சியாக நினைத்தனர்.

கிராம அதிகாரியை பூலான் வேட்டையாடிய பின்னர் அவர்களின் இகழ்ச்சி



பூலான்

வியப்பாக மாறிவிட்டது. முன்புபோல் இல்லாமல் பூலானைக் கண்டதும் நட்புக் கலந்த மரியாதையுடன் புன்னகைக்கவும் செய்தனர்.

மல்லா வாய் கொள்ளாமல் புகழ்ந்தான். தனியாக இருந்தபோது அவளை அப்படியே கட்டிப்பிடித்துத் தூக்கிச் சுற்றினான்.

அப்படித் தூக்கியபோது பூலானின் உடலில் உயர்ந்தும், தாழ்ந்தும் இருந்த பகுதிகள் மல்லாவின் உடலிலும், முகத்திலும் உரசிக் கொண்டிருந்தன. பூலானுக்கு அது இன்ப வேதனையாக இருந்தது. மல்லாவின் கரங்கள் பூலானின் பின்புற அழகுகளில் அழுத்திக் கொண்டிருந்தன. அப்படியே சில நிமிடங்கள் பூலானை தூக்கி வைத்திருந்துவிட்டு இறக்கிவிட்டான்.

"என்ன பாரம்?!" என்று சொல்லி கண்களில் வியப்புக் காட்டினான் மல்லா.

"இந்தப் பொய்தானே வேண்டாம், இங்கே வந்தபின் மெலிந்துபோயிருக்கிறேன். நீ பாரம் என்கிறாயே!" என்றாள் பூலான்.

தனியாக இருக்கும்போது மல்லாவை நீ என்றுதான் ஒருமையில் அழைத்தாள். வேறு ஆட்கள் முன்பாக மட்டும் நீங்கள் என்று மரியாதையுடன் அழைத்துக் கொண்டாள்.

நீ என்று அவனை அழைக்கும் போதுதான் உரிமையும், நெருக்கமும் அதிகமாவதாக நினைத்தாள் பூலான். அப்படி அவனை அழைப்பதே அவளுக்கு தனியான இன்பமாகவும், ஏதோ ஒருவிதமான மனக் கிளர்ச்சியை உருவாக்குவதாகவும் இருந்தது.

"உடம்பு மெலிந்துதான் இருக்கிறது. ஆனால்..." என்று சொன்ன மல்லாவின் கண்கள் சென்ற இடம் கண்டு வெட்கப் பட்டாள் பூலான்.

❣ ❤ ❤

அன்று காலையில் மல்லா ஒரு கடித்தைப் படித்துக் கொண்டிருந்ததை பூலான் கவனித்தாள்.

கடிதத்தை படித்த மல்லாவின் முகம் கிலேசம் அடைந்ததையும், அன்றைய காலைச் சாப்பாட்டைக்கூட ஏனோதானோ வென்றுதான் மல்லா சாப்பிட்டான் என்பதையும் பூலான் கவனிக்கவே செய்தாள்.

இப்போதெல்லாம் பூலானிடம் கலந்து பேசாமல் எக் காரியத்திலும் மல்லா ஈடுபட்டதில்லை. அதுபோல தன் மனதில் தோன்றும் எண்ணங்களையும் பூலானுடன் பகிர்ந்துகொள்ளத் தவறுவதில்லை.

கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கக் கூடும், மல்லா ஏன் சோர்வாகக் காணப்படுகிறான்? என்னும் கேள்வி மனதை அரித்துக் கொண்டிருந்தபோதும், அவனாகவே சொல்லுவான், சொல்லட்டும் என்று இருந்துவிட்டாள் பூலான்.

அவள் நினைத்ததுபோலவே மல்லாவே பூலானிடம் விபரம் சொன்னான்.

மல்லா சொன்ன விபரங்கள் யாவும் பூலானுக்குப் புதிய தகவல்களாக இருந்தன.

மல்லாவைக் கொள்ளைக்கூட்டத்தில் சேர்த்துவிட்டவன் ஸ்ரீராம். மல்லாவுக்கு பயிற்சிகள் கொடுத்து வளர்த்துவிட்டவனும் அவன்தான்.

ஸ்ரீராமை 'குருஜி' என்றுதான் மல்லா அழைப்பான். ஸ்ரீராம் மீது மல்லாவுக்கு ஏகப்பட்ட மரியாதை. பக்தி என்றும் சொல்லலாம்.

இந்தக் கொள்ளைக் கோஷ்டியின் முன்னோடியாக இருந்தவனும் ஸ்ரீராம்தான். அவனது சகோதரன்தான் லாலாராம். இருவரும் பொலிசாரிடம் பிடிபட்டுச் சிறையில் இருக்கிறார்கள்.

"குருஜி வெளியேவந்தால் அவர்தான் இந்தக் கூட்டத்துக்கு தலைமை தாங்குவார். நான் அவரது தளபதியாக இருப்பேன்!" என்றான் மல்லா.

மல்லா அதனைச் சொல்லும்போது மிக உற்சாகமாகவே கூறினான். ஆனால் மல்லா சொன்னதைக் கேட்டதும் பூலானுக்கு தூக்கிவாரிப் போட்டதுபோல் இருந்தது.


ஏனோ, அந்த முகம் தெரியாத ஸ்ரீராமை அந்த நொடியிலிருந்தே பூலான் தனக்குள் வெறுக்கத் தொடங்கிவிட்டாள்.

ஸ்ரீராம் நல்லவனல்ல என்று பூலானின் உள்மனம் சொல்லிக்கொண்டிருந்தது.

உள்மனம் சொல்கிறது என்று எப்படி மல்லாவிடம் சொல்லமுடியும்? நகைப்பது ஒரு பக்கமிருக்க, தன் குருஜியை பழிசொல்வதாக நினைத்து அடித்தாலும் அடித்துவிடுவான்.

சிறையில் இருக்கும் தன்னை மல்லா கைவிட்டுவிட்டான். மல்லா மட்டும் இங்கே சௌகரியமாய் இருக்கிறான் என்று ஸ்ரீராம் கடிதத்தில் எழுதியிருந்தானாம். அதுதான் மல்லா கவலைப்பட்டிருக்கிறான்.

ஸ்ரீராமுக்கு மல்லா பதில் கடிதம்



போட்டிருந்தான். கடிதத்தில் பூலானைப் பற்றியும் பிரமாதமாக குறிப்பிட்டு எழுதியிருப்பதாக சொன்னான் மல்லா.

குருஜியிடம் தன்னைப் பற்றி புகழ்ந்து எழுதியதாகச் சொன்னதும் பூலான் மலர்ச்சியடைவாள் என்று கருதி அவள் முகத்தைப் பார்த்த மல்லா ஏமாந்து போனான்.

"ஏன் சோர்வாக இருக்கிறாய்?" என்று கேட்டான் அப்பாவியாக.

"தலைவலி" என்றுவிட்டு போய்விட்டாள் பூலான். மல்லா அந்த ஸ்ரீராமிடம் தன்னைப் பற்றி எழுதியது பூலானுக்கு பிடிக்கவில்லை. எங்கே அதை மல்லாவிடம் நேரடியாகச் சொல்லவேண்டி வந்துவிடுமோ என்று நினைத்துத்தான் அந்த இடத்தைவிட்டு அகன்று உள்ளே போனாள் பூலான்.

மறுநாள் காலையில் வேறு ஒரு புதிய சீருடையை கொண்டுவந்து பூலானிடம் கொடுத்தான் மல்லா.

அது அசல் பொலிஸ் யூனிபோம் போலவே இருந்தது.

"இது எதற்கு?" என்றாள் பூலான்.

"போட்டுக் கொள். இன்று கொள்ளையடிக்கப் போகிறோம்?" என்றான் மல்லா.

"அதற்கு இது எதற்கு?"

"பொலிஸ்காரர்கள் மாதிரியே சென்றால்தான் சாலையில் இறங்கி கொள்ளையிட வசதியாக இருக்கும். தவிர இது மிகப் பெரிய கொள்ளை! புரிகிறதா? மிகப் பெரிய கொள்ளையாக நடத்த பக்காவான திட்டம் தீட்டியிருக்கிறேன்!" என்றான் முகத்தில் மலர்ச்சி மின்ன மல்லா.

பூலான் தயங்கிவிட்டுக் கேட்டாள்;

"இப்போ ஏன் பணம் தேட அத்தனை அவசரம்?"

"நல்லா கேட்டாய் போ! குருஜியை எப்படியாவது வெளியே கொண்டுவர வேண்டும். நீதிமன்றத்தில் பிணை கட்டமட்டும் எவ்வளவு தேவை என்கிறாய்? 34 ஆயிரம்

பாகம் 02

ரூபாய்! புரிகிறதா 34 ஆயிரம்! எவ்வளவு பெரிய தொகை?! முடியும் இந்த மல்லாவால் முடியும்! இந்த புத்லிபாயின் அவதாரம் என்னுடன் இருக்கும்போது எனக்கென்ன பயம்? சாதித்துக் காட்டுகிறேன் பார்!" கிட்டத்தட்ட கூவிக்கொண்டே போனான் மல்லா.

◆◆◆

பூலான் மட்டுமல்ல மல்லா உட்பட அனைவருமே பொலிஸ் யூனிபோம் அணிந்திருந்தனர்.

# கொள்ளை ராணி பூலான்தேவி 40

தருவது ரசிகன்

கான்பூர்- ஆக்ரா பிரதான வீதியின் நடுவே பெரிய மரக் குற்றிகளை போட்டு தடையை ஏற்படுத்தினார்கள்.

கொள்ளையில் ஈடுபடுவது பூலானுக்கு அதுதான் முதற் தடவை. ஸ்ரீராமின் விடுதலைக்காக திட்டமிடப்பட்ட கொள்ளை என்பதால் பூலானுக்கு முதலில் அத்தனை உற்சாகம் இருக்கவில்லை.

ஆனாலும் சாலையைமறித்து தடை போடப்பட்டு, வாகனங்களை எதிர்பார்த்து காத்திருக்கத் தொடங்கியவுடன் பூலானும் உற்சாகமாக மாறத்தொடங்கி விட்டாள்.

அந்த சாலைவழியாகத்தான் சரக்குகளை டில்லிக்கு ஏற்றிச் செல்லும் வாகனங்கள் செல்வதுண்டு.

எதிரே தொடராக சில வாகனங்கள் வருவது தெரிந்ததும் மல்லாவும் ஏனையோரும் சாலையின் குறுக்கே வந்து நின்று கொண்டனர்.

வாகனங்களில் இருந்த அனைவரையும் கீழே இறங்கச் சொன்னான் மல்லா.

"போதைப் பொருட்கள் கடத்தப்படுவதாக எங்களுக்கு தகவல் வந்திருக்கிறது. சோதனை போட வேண்டும்" என்று கூறினான் மல்லா.

சாரதிகள், நடத்துநர்கள் அனைவரும் இறக்கப்பட்டனர். அவர்களும் சோதனையிடப்பட்டனர்.

தங்களை அசல் பொலிஸ்காரர்கள் என்று நம்பி, அவர்கள் எல்லாம் தங்கள் முன்பாக மண்டி போட்டு அமர்ந்திருப்பதைக் காண பூலானுக்கு உள்ளூரச் சிரிப்பாக இருந்தது.

எந்தப் பொலிஸ்காரர்களால் வேட்டையாடப்பட்டாளோ அதே பொலிஸ்காரரின் உடையில் தான் இப்போது நிற்பதை நினைக்கும் போது திருப்தியாகவும், ஒரு விதமான கர்வமாகவும் இருந்தது.

வாகனங்களில் இருந்த பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டன. அவற்றில் வந்திருந்தவர்களில் சிலர் பெரும் தொகையான பணம் வைத்திருந்தனர். அத்தனை பணத்தையும் மல்லா பிடுங்கிக் கொண்டான். வழிச் செலவுக்காக மட்டும் கொஞ்சப் பணம் திருப்பிக் கொடுத்தான்.

அன்று இரவுக்குள் பதினைந்து இருபது வாகனங்களில் சூறையாடல் நடைபெற்றது.

கொள்ளையடித்த அனைவரிடமும் மல்லா மறக்காமல் சொன்னான்;

"நான்தான் மல்லா, விக்கிரம் மல்லா. இதோ யார் தெரியுமா? புத்லிபாயின் புதிய அவதாரம் பூலான் தேவி, பொலிஸ் நாய்களிடம் போய்ச் சொல்லுங்களடா! முடிந்தால் எங்களுடன் மோத வரச் சொல்லுங்கள்! நாய்கள்! கழிசடை நாய்கள்!"

கொள்ளையிட்ட பொருட்கள் அயலிலுள்ள கிராமத்தினரின் உதவியுடன் கொண்டு செல்லப்பட்டன. அதற்காக அந்த கிராம மக்களுக்கு பணம் கொடுத்தான் மல்லா. அவர்கள் மல்லாவை குனிந்து வணங்கிவிட்டு பணத்தை வாங்கிக் கொண்டார்கள்.

கிராமத்தவரிடமும் பூலானை அறிமுகம் செய்தான் மல்லா.

"பூலான் தேவி, புத்லிபாயின் அவதாரம் பிறந்து வந்துவிட்டாள்! இனி உங்களுக்கு எந்தக் கஷ்டமும் வராது! நாங்கள் இருக்கிறோம். பூலான் தேவி இருக்கிறாள்!"

பூலானுக்கு ஆரம்பத்தில் வெட்கமாக சங்கடமாக இருந்தாலும், பின்னர் போகப் போக பழகிவிட்டது. மல்லா தன்னைப் பற்றி அறிமுகம் செய்யும்போது முகத்தை கல்லாக வைத்துக்கொண்டு நிற்கப் பழகி விட்டாள்.

பூலானின் பெயர் சம்பல் பள்ளத்தாக்கில் பரவத் தொடங்கியது.

பூலானின் சந்தோசங்களுக்கு சவால் விடப்போவதுபோல ஸ்ரீராமிடம் இருந்து மல்லாவுக்கு மற்றொரு கடிதம் வந்திருந்தது.

அவன் விடுதலை உறுதியாகிவிட்டது.

(தொடர்ந்து வரும்)

## அசைந்தால் இவள் தொலைந்தாள்



அமெரிக்காவில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவம் இது. சினிமாக்களில் வருவதுபோல நிஜமாக நடந்த திகில் சம்பவம்.

நடந்தது இதுதான்.

அமெரிக்காவின் ஓசியோ மாநிலத்தில் ஸ்டூபன்வில்லி என்ற நகர் இருக்கிறது. அங்கேதான் மனநோய் மருத்துவமனையும் இருக்கிறது.

அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தவன் ஸ்டிவ்பர்ச். இவர் லேசாக நட்டுக் கழன்றவர் அல்ல. முற்று முழுதாகவே நட்டுக் கழன்ற கேஸ். அதனால் தீவிர சிகிச்சை கொடுக்கப்பட்டு வந்தது.

தீவிரசிகிச்சையால் பயந்துபோன ஸ்டிவ் எப்படியோ மருத்துவமனையில் இருந்து தப்பிச் சென்றான். தப்பிச் சென்றவன் சும்மா இருக்கவில்லை. ஒரு கைத்துப்பாக்கியும் வாங்கிக் கொண்டான்.

பொலிசாருக்கு தண்ணி காட்டிக் கொண்டு கடைவீதிகளில் சுற்றித் திரிந்தான் ஸ்டிவ். அப்படியே ஒருநாள் சூப்பர் மார்க்கெட்டுக்குள் நுழைந்தார். அங்கே கடை ஒன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அழகான பெண் பமீலா என்பவர் ஸ்டிவ் கண்களில் பட்டுவிட்டான்.

ஏற்கனவே பைத்தியம் பிடித்திருந்தவனை பமீலாவின் அழகும் மேலும் பைத்தியமாக்கியதால் வந்தது வினை. நடந்தது விபரீதம்.

கடைக்குள் புகுந்து பமீலாவை மடக்கி அவள் தலையில் கைத்துப்பாக்கியை வைத்து ஒரே அமுக்காக அமுக்கிவிட்டான்.

பமீலா அலறினார். "யாராவது நெருங்கினால் இவள் மூளை சிதறிவிடும்!" என்று எச்சரித்தான் ஸ்டிவ். ஒரே களேபரம். அதற்கிடையே புகைப்படக்காரர்களும், பத்திரிகையாளர்களும் வந்து செய்தி சேகரிக்க தொடங்கினர்.

பொலிஸ் விரைந்து வந்தது. ஸ்டிவ் அசரவில்லை. அவர்களுக்கும் மிரட்டல் தான்.

இறுதியாக அதிரடிப்படை விரைந்தது. பொலிசார் ஸ்டிவ்விடம் பேச்சுக் கொடுத்தபடி இருக்க அதிரடிப்படை காரியமே கண்ணாக களத்தில் இறங்கியது.

அதிரடிப்படைவீரர் ஒருவர் மறைந்து நின்று சுட்டார்.

ஸ்டிவ்வின் கழுத்தில் சூடுபட்டது. அப்படியே சுருண்டு விழுந்தான். பமீலா என்னும் பெண் காயம் இன்றித் தப்பினாள்.

அமெரிக்காவில் இதுபோன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. துப்பாக்கிகளும் தாராளமாக கிடைக்கின்றன. பாலியல் வன்முறை, கொலை, கொள்ளை, வழிப்பறி என்று சட்டவிரோத சம்பவங்களின் விளைநிலமாக மாறிக் கொண்டிருக்கிறது அமெரிக்கா.

## ராணியின் ஆசனம்



எலிசபெத் ராணிக்கு 84 வயது. இந்த வயதிலும் ராணி என்ன செய்கிறார் தெரியுமா? யோகாசனம் செய்கிறர். முக்கியமாக சிரசாசனம் (தலைகீழாக நிற்றல்) செய்கிறாராம்.

எலிசபெத் ராணிக்கு யோகாசனம் கற்றுக் கொடுத்தவர் ஒரு தமிழ்நாட்டுக்காரர். பெயர்: பி.கே.எஸ். அய்யங்கார். ராணியின் கம்பீரத்துக்குக் காரணம் அதுதானோ?!

## நடிக்க வரும் அழகி

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற உலக அழகுராணிப் போட்டியில் மயிரிழையில் தோற்றுப்போனவர் ராணி ஜெயராஜ். இந்தியாவில் கர்நாடக



மாநிலத்தைச் சேர்ந்த அழகிதான் ராணி ஜெயராஜ்.

அழகிப் பேட்டியில் தோல்வி கண்ட போதும், சினிமாவில் நடித்து வெற்றிக்கொடி நாட்ட முன்வந்துள்ளார் ராணி ஜெயராஜ்.

கவர்ச்சியான உடல்வாகு கொண்ட ராணி ஜெயராஜ் பிறந்து வளர்ந்தது ஆபிரிக்காவில். அதனால் ஆண் நண்பர்களின் அன்பை சம்பாதிப்பதில் தயக்கம் இல்லாதவர்.

ஹிந்தி நடிகரும், பெண் ரசிகைகளின் நாயகனுமான ஜாக்கி ஷெராப்பையும், ராணி ஜெயராஜையும் சந்திக்கவைத்து பேட்டி எடுத்தது மும்பாய் சஞ்சிகை ஒன்று.

இருவரும் கன்னத்தில் முத்தம் கொடுக்கு மளவுக்கு கொஞ்ச நேரத்திலேயே நெருக்க மாகி விட்டார்களாம்.

பேட்டிக்காக ராணி ஜெயராஜும் ஜாக்கி ஷெராப்பும் பேசிக்கொண்டதில் இருந்து ஒரு பகுதி.

**ராணி:** ஒரு பெண்ணுடன் நேரத்தை செல வழிக்க விரும்பினால் யாருடன் நேரத்தை செலவிட விரும்புவீர்கள்?

**ஜாக்கி:** உங்களுடன்தான்.

**ராணி:** என்னுடனா? சரி எங்கே கூட்டிப் போவீர்கள்?

**ஜாக்கி:** வெகுதூரத்திற்கு...!

**ராணி:** வெகுதூரம் போய்வந்தால் மறுநாள் காலை திருமணம் நடக்க வேண்டுமல்லவா?

**ஜாக்கி:** புத்திசாலித்தனமாக பேசுகிறீர்கள்.

**ராணி:** நடிக்கும்போது காதல் உணர்வுடன் யாரிடமாவது பழகியதுண்டா?

**ஜாக்கி:** உண்டு! இதற்கு மேலும் என்னிடம் கேட்காதீர்கள். ஏனெனில் நான் பொய் பேசாதவன்!

**ராணி:** எந்தக் கதாநாயகியுடனாவது நடிக்கும் போது அவர் வசம் ஈர்க்கப் பட்டதுண்டா?

**ஜாக்கி:** எல்லா நேரங்களிலுமே ஈர்க்கின்றனர். எத்தனை தடவை என்று சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆனால் ஒரு தடவை என்னை அவர் ஈர்த்து விட்டால் வாழ்நாள் முழுவதும் நண்பராக்கிக் கொள்வேன். இப்போது நீங்களும் என்னை ஈர்த்துள்ளீர்கள்.

## ரசிகையின் காதலன்



டென்னிஸ் உலகில் நம்பர் வன் இடத்தில் இருந்தவர் அகாசி. அவர் ஆடுகிறார் என்றால் கூட்டம் அலைமோதும். அதிலும் பெண் ரசிகைகளின் மனம் கவர்ந்த நட்சத்திரம் அகாசி.

ஆட்டத்தின்போது தனது சட்டையை கழற்றிவீசி ரசிக ரசிகைளுக்கு தன் உடல் அழகு காட்டுவதும் அகாசியின் ஸ்டைல்.

கடந்த சில ஆண்டுகள் அகாசிக்கு இறங்கு முகம். முதல் இடத்தில் இருந்தவர் பத்தாவது இடத்திற்கு சென்றுவிட்டார். பயங்கரமான சரிவு. அப்படியிருந்தும் அகாசிமீது பைத்தியமாக இருக்கிறார்கள் அவரது பெண் ரசிகைகள்.

அகாசியின்மீது பைத்தியமாக இருக்கும் பிரபலமான பெண் ரசிகைகளில் ஒருவர் பார்பரா. பிரபல நடிகையும், பின்னணிப் பாடகியுமான பார்பராவுக்கு 53 வயது. ஆனால் பார்வைக்கு மகா இளமையாக இருப்பார்.

அகாசிக்கும், பார்பராவுக்கும் இடையே காதல் மலர்ந்திருப்பதுதான் சுவாரசியமான சங்கதி. இருவரும் சந்தித்து தம் அன்பை வெளிப்படுத்திக் கொண்டார்களாம். அகாசிக்கு 26 வயது.


ஏற்கனவே அகாசிக்கு ஒரு காதலி இருக்கிறார். அவரும் பிரபல தொலைக் காட்சி நடிகைதான். பெயர்: புரூக்ஸீல்ட்.

தொலைக்காட்சி படங்களில் புரூக்ஸீல்ட் பிஸியாக நடித்துக் கொண்டிருப்பதால் அகாசியை அடிக்கடி சந்திக்க முடிவதில்லை. அன்பை பரிமாற முடிவதில்லை. அந்த இடைவெளியில் மூக்கை நுழைத்துக் கொண்டார் பார்பரா.

இதனால் அகாசி- புரூக்ஸில்ட் காதலுக்கு ஆபத்து ஒன்றும் நேராதாம். அது அது பாட்டுக்கு இருக்கும். இது இது பாட்டுக்குத் தொடரும். டேக் இட் ஈஸி பொலிஸிதான்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

தகவல் பெட்டி



## நேசமுள்ள வெண்புலி

புலிகளில் அபூர்வமானவை வெண்புலிகள். மிகக் குறைந்த எண்ணிக்கையில்தான் இவை தற்போது இருக்கின்றன. படத்தில் இருப்பது வெண்புலியில் பெண்புலி. மிகப் பத்திரமாக இதனை பராமரித்தனர். இரண்டே இரண்டு குட்டிகளை மட்டுமே ஈன்றெடுத்தது. மனிதர்களுக்கு மட்டும்தான் ஈன்றபொழுதில் ஈடற்ற இன்பம் தோன்றுமா என்ன, ஈன்ற குட்டிகளை வாஞ்சையோடு கொஞ்சி மகிழ்கிறது பாருங்கள் வெண் பெண்புலி.

அமெரிக்காவில் உள்ள புளோரிடாவில் உள்ள மிருகக் காட்சிச்சாலையில் தாயும் சேய்களும் நலமாக வளமாக அன்புக் கடலில் நீச்சலடிக்கும் காட்சிதான் இது.

## வேட்பாளரை விழுங்கலாம்

பிரிட்டனில் தேர்தல் நடக்கப்போகிறது. தேர்தல் அறிவிப்பு வந்ததும் அதில் போட்டியிடுகிறவர்கள் சூடாக முன்னரே சொக்லேற் நிறுவனங்கள் சுறு சுறுப்பாகிவிட்டன. சொக்லேற் நிறுவனங்களுக்கும் தேர்தலுக்கும் என்ன சம்பந்தம்? என்று மூளையைக் கசக்காதீர்கள். புதுமையாகச் சிந்தித்தால் எத்தனையோ விதமாக அசத்தலாமுங்க.

படத்தில் பாருங்கள், அழகான பாவையின் பற்களுக்குள் வசமாக சிக்கி இருக்கும் உருவம்தான் பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர். அடுத்து பற்களுக்குள் மாட்டப்போகிறவர் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன்மேஜர். அதாகப்பட்டது, தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களின் முகங்களை சுவையான சொக்லெற்றுக்களில்செய்து விற்பனைக்கு விட்டுள்ளனர்.

அதிகமாக விற்பனையாவது ஜோன் மேஜரின் முகம்போன்ற சொக்லேற்றுக்கள்தான். எதிர்க்கட்சித் தலைவருக்கு இரண்டாம் இடம்தான். ஆனால் இதனை வைத்து வெற்றி தோல்வியைச் சொல்ல முடியாது. கோபம் இருப்பவர்களும் தமக்கு பிடிக்காத வேட்பாளர்களின் தலைகளை சப்பித் துப்பி ஆத்திரத்தைத் தீர்க்கலாம் அல்லவா!



## தோள் கொடுப்பான் தோழன்



ச்சா.. என்னே ஒரு பாங்காய் பறிக்கிறார் பாருங்கள் தேங்காய்! குரங்கில் மக்காக்ஸ் இனத்தைச் சேர்ந்தது இது. கண் பார்க்கக் கை செய்யும் என்பார்களே, அது இந்தக் குரங்காருக்கும் பொருந்தும். பயிற்சியாளர் கற்றுக் கொடுத்ததைக் கப்பென்று புரிந்து கொண்டு தேங்காய் பறிக்கிறதாம். மனிதரை விட வேகமாக மரத்தில் ஏறுவதுடன், நாளொன்றுக்கு ஐநூறு தேங்காய்களை பறிக்கிறது.

பயிற்சி மூன்று கட்டமாகக் கொடுக்கப்படுகிறதாம். முதல் கட்டம், காம்பிலிருந்து தேங்காயை லாவகமாகப் பிடித்து திருகிப் பறிக்கும் பயிற்சி. கட்டம் இரண்டு; மரத்தின் நடுவே இளநீர் குலை கட்டி தொங்கவிடப்படும். குரங்கார் மரத்தின் மீதேறி இளநீர் பறித்துப் போடும். மூன்றாம் கட்டத்தில் பயிற்சியாளருடன் சேர்ந்து மரத்தின் உச்சிக்குப் போய் தேங்காய் பறிக்கவேண்டும். மூன்றிலும் தேர்ச்சி பெற்றால் பின்னர் தனியாகவே ஜமாய்க்கலாம்.

தேங்காய் குலைகளை ஒரு கம்பில் கட்டி எடுத்துச்செல்லவும் தன் தோள் கொடுத்து உதவுகிறார் பாருங்கள். தோள் கொடுப்பான் தோழன். குரங்காரையும் நன்றாகப் பயிற்றுவித்தால் சோக்கான தோழன்தான்.





## சூப்பர் ஷொட்

மீன்கொத்திப் பறவை என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். பெயருக்கு ஏற்ப அது மீனைக் கொத்திச் செல்வதைக் கண்டிருக்கிறீர்களா?

கடலுக்கு மேலாக பறந்தபடி நோட்டமிடும். மீனின் அசைவு தெரிந்தால் சட்டென்று பதிந்து அலகால் கொத்திக்கொண்டு பறந்துவிடும். தப்பவே முடியாது. அப்படி மீனை அலகால் கவ்விக் கொண்ட தருணத்தில் எடுக்கப்பட்ட அபூர்வமான படம் இது. சூப்பர் ஷொட்.



## முத்துக்கள் மூன்று

ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் முரசு வாசகர்களுக்கு ஆச்சரியமில்லைத்தான். ஆனால் இது கொஞ்சம் வில்லங்கமான பிரசவம்.

எட்டாவது மாதத்திலேயே பிரசவவலி கண்டு மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டார் திருமதி டான். முதலாவது குழந்தை ஆரோக்கியமாக பிறந்தது. டாக்டர்களுக்கு ஆச்சரியம். அந்த ஆச்சரியத்தை மேலும் அதிகப்படுத்துவது போல மேலும் இரண்டு குழந்தைகள் ஒரு நிமிட இடை வெளியில் ஒன்றன் பின் ஒன்றாக பிரசவமாகின.

வழக்கமாக குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளின் எடை குறைவாக இருக்கும். சில சமயங்களில் குழந்தையின் உயிருக்கே ஆபத்து நேருவதும் உண்டு. ஆனால் ஒன்றுக்கு மூன்றாக அதுவும் ஒரு நிமிட இடைவெளி விட்டு பிறந்த மூன்று குழந்தைகளும் படு ஆரோக்கியமாக போதிய எடையுடன் பிறந்தன.

அது மட்டுமல்ல இந்தப் பிரசவம் நடந்தது கடந்த ஜனவரி மாதம் 7ம் திகதி. அதனால் இந்த ஆண்டு ஒரே பிரசவத்தில் பிறந்த முதல் மூன்று குழந்தைகள் இவர்கள்தான் என்ற பெருமையும் சேர்ந்துள்ளது. முத்துக்கள் மூன்று. தாயார் கொட்டட்டும் அன்பை! திருமதி டானுக்கு இது புத்தாண்டு போனஸ்!

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## காதோடு சொல்லுகிறோம்

**பெ**யரில் 'ராம்' உள்ள மூன்றெழுத்து நடிகருடன் படத்தில் மட்டுமல்லாமல், நிஜத்திலும் நெருக்கமாக இருக்கிறாராம் 'கனி' நடிகை. தன்னுடன் நடிக்கும் ஹீரோக்களை ஸ்பெசலாக கவனிப்பது என்ற பொலிசியுடன் முன்னேறிக்கொண்டிருக்கிறார் நடிகை. அதனால்தான் மும்பாய் வரவுகள் மத்தியிலும் மார்க்கெட்டை பத்திரப்படுத்தியிருக்கிறாராம்.

**மு**ன்னாள் அமைச்சர் ஒருவரின் அன்புக்கு அடிமையான 'சகல' நடிகை அதனால் பட்ட சோதனைகள் கொஞ்ச நஞ்சமா? இப்போதுதான் சோதனைகளில் இருந்து ஓரளவு விடுதலை அடைந்துள்ளாராம். விரைவில் திருமணம் நடக்கப்போகிறதாம். அதனால் புதுப்பட வாய்ப்புகளை புறந்தள்ளுகிறாராம். முன்னாள் அமைச்சரின் பெயரைக் கேட்டாலே வேம்பாக கசக்கிறதாம்.

**பா**.. தீப நடிகரின் சிலைப்பக நடிகை என்ன மந்திரம் போட்டாரோ மாயம் பண்ணினாரோ, நடிகர் உருகி வழிகிறாராம். 'காளை' படத்தின் படப்பிடிப்பை தள்ளிவைக்க வேண்டிய சூழ்நிலையாம். நடிகருக்கோ நடிகையை விட்டுப் பிரிய மனமில்லை. அதனால் தன் சொந்த தயாரிப்பிலேயே ஒரு படத்தை தொடங்கி சிலைப்பகவை அதில் நடிக்கவைத்திருக்கிறார். காளையும் பகவும் இப்படியாக இருக்கையில், நடிகரின் மனைவியான முன்னாள் நடிகை மூக்கைச் சிந்துகிறாராம்.

**ம**றுபடி கலைச்சேவை செய்ய வந்துள்ள 'அம்பிக' நடிகை வெற்றிகரமாக கலக்கத் தொடங்கியிருக்கிறாராம். குஷ்புடன் ஜோடியாக நடிக்க கிடைத்தது எத்தனை பெரிய சமாச்சாரம். 'நான் மட்டும் இப்போது கவர்ச்சி காட்டினாலும் இன்றைய நடிகைகள் தொலைந்தார்கள்" என்று மிரட்டுகிறாராம் நடிகை. நடிகைகள் தொலைகிறார்களோ இல்லையோ ரசிகர்கள் மிரண்டு செத்துவிடுவார்கள்.

**'நே**ச'மான படத்தின் தோல்வியால் அரண்டு போயிருக்கிறார் இளம் 'குமார' நடிகர். 'ஹீர' நடிகையுடன் நெருக்கமாக இருப்பது என் ரசிகைகளுக்கு பிடிக்கவில்லை. அதுதான் படங்கள் தோல்வியடைகின்றன" என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் சொல்லியுள்ளாராம் 'காதல் கோட்டை' நாயகன்.

**'வி**னித' நடிகை படப்பிடிப்புக்கு வந்தால் ஒரு பட்டாளமே அவருடன் வருகிறதாம். தயாரிப்பாளர்களை வினித நடிகை கவனிக்க வேண்டிய விதத்தில் கவனிப்பதால் அவர்களும் முகம் சுளிக்காமல் செலவு செய்கிறார்களாம். சமீபத்தில் தான் வளர்க்கும் நாயையும் படப்பிடிப்புக்கு கூட்டி வந்தாராம். அதற்கு சிக்கன், பால், பிரியாணி என்று ஏகப்பட்ட செலவாம்.

## அம்பிகா—சரளா
### யார் கொடுத்த ஐடியா?

'பெரிய மனுஷன்' படத்தில் அம்பிகாவும், கோவை சரளாவும் சத்யராஜின் ஜோடிகளாக நடிக்கின்றனர் என்பது முன்னர் சொன்ன செய்தி.

இங்கே பிரசுரமாகியுள்ள படத்தைப் பாருங்கள். அம்பிகா, கோவை சரளா இருவரும் ஒரே விதமான புடவை, ஒரே விதமான நகைகள் சகிதம் காட்சி அளிக்கிறார்கள் அல்லவா?

இது இயக்குநர் ருத்ரபாவின் சொந்த ஐடியா கிடையாது. பின்னே யார் ஐடியா? ஜெயலலிதா வீட்டை சோதனை செய்யும் போது ஜெயலலிதாவும் உடன் பிறவாவும் இணைந்து எடுத்த படம் ஒன்று சிக்கி பத்திரிகைகளில் பிரசுரமாகியதல்லவா. முரசில் கறுப்பு வெள்ளையில் பிரசுரமாகியிருந்தது! அப்புகைப்படத்தில் இதே கலர் சேலைகளுடன், இதேவிதமான நகைகளுடன்தான் உடன் பிறவாக்கள் போஸ் கொடுத்தபடி இருந்தனர்.

அப்புகைப்படத்தை பார்த்ததும் அதே போல டிசைன் செய்து ஆடை, அணிகலன்களை அணியவைத்தாராம் இயக்குநர் ருத்ரபா!

## சரத் விலகுவாரா?
### 'குட் டை' சொல்லுவாரா?

"சரத்குமாரை நக்மாவிடமிருந்து மீட்டுத் தாருங்கள்" என்று கலைஞர் கருணாநிதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார் சரத்குமாரின் மனைவி.

சரத் அறிந்தால் கோபப்படுவார் என்பதால் அதனை வெளியே சொல்லாமல் மறைத்தாராம் சரத்தின் மனைவி.

கலைஞர் நேரடியாகத் தலையிட்டாலும் தனக்கு வேண்டிய பிரமுகர்கள் ஊடாக சரத்திடம் தனது கருத்தை ஜாடை மாடையாகச் சொல்லி அனுப்பியிருக்கிறார்.

'புத்திசாலித்தனமான மனைவியை ஒரு மும்பாய் நடிகைக்காக பிரிந்துவிடாதீர்கள். மும்பாய் நடிகைகளை எப்படி நம்புவது? ஆற அமர்ந்து காலைவிடுங்கள். பின்னர் தற்போது உள்ள நிம்மதியையும் இழந்து தவிக்காதீர்கள்.' என்ற ரீதியில் கலைஞர் தரப்பில் இருந்து யோசனை சொல்லப்பட்டதாகத் தகவல்.

சரத்குமாரை காதலிக்க ஆரம்பித்த பின்னரும் நக்ம நடிகை இன்னொரு நடிகருடன் நெருக்கமாக பழகிய விவகாரமும், தனது தங்கைக்காக சிபாரிசு செய்த விவகாரமும் சரத் காதுக்கு எட்டும்படி சொல்லப்பட்டதாம். ஆனால் சரத்தோ நடிகைமீது பைத்தியமாக இருக்கிறார். நடிகை பற்றிய செய்திகளை வெறும் வதந்திகள் என்று ஒதுக்குகிறாராம்.

நடிகையுடன் நட்பை முறித்துக் கொள்ளுவதே அவருக்கு நல்லது. ரஜினியிடமும் இந்த விவகாரம் செல்லப்போகிறது. ரஜினி என்ன சொல்லப் போகிறாரோ தெரியவில்லை.

## ஒரே கும்மா

ராஜ்கிரண்-குஷ்பு நடிக்கும் படம் 'பொ
இப்படத்தில் படப்பிடிப்பு தமிழ்நாட்டிலும்
நடைபெற்றது.
படத்தில் நடிக்கும் துணை நடிகைகளு
விடுதியில் தங்கியிருந்த துணை நடிகைகள்
தாங்க முடியவில்லையாம்.
குற்றாலத்திற்கு பொழுதுபோக்க
பிரபலங்களுடன் குடித்துவிட்டு கும்மா
தொழிலும் நடந்ததாம்.
பாடல் காட்சிகளில் கும்ப
லாக நின்று





ராம்கி-குஷ்பு
படம்:-தாலி புதுசு

## தொட்டும் தொடாமல்

'நந்தினி' படத்தில் பிரகாஷ்ராஜ் ஜோடியாக சுகாசினி நடிக்கிறார் அல்லவா. இருவரும் கணவன் மனைவியாக நடித்தாலும் தொட்டும் தொடாதளவுக்கு காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளதாம். சுகாசினி தயாராக இருந்தாலும் அவரைத் தொட்டு நடிக்க கூச்சமும், தயக்கமும் படுகிறாராம் பிரகாஷ்ராஜ்.



அப்பாஸ்
படம்:-வி.ஐ.பி.

## "யாரோடும் பேசக்கூடாது!"

விக்னேஷ்-சுவலட்சுமி நடித்துள்ள படம் 'வாணி மகால்'. நீண்ட காலமாக தயாரிப்பில் இருந்து தற்போதுதான் படப்பிடிப்பு முடிந்துள்ளது.

வழக்கமான கல்லூரிக் காதல் கதைதான். கல்லூரியில் முரட்டு வாலிபன் அமித். அவனது மாமன் மகள் செல்வி. அவளை யாருடனும் பேசக் கூடாது யாரும் அவளுடனும் பேசக்கூடாது என்று விரும்புகிறான் அமித். அவனை எதிர்த்து செல்வியை காதலிக்கிறான் அருணாசலம். பிறகு என்ன, காதல் மோதல் என்று கதை நகருகிறதாம்.

அருணாசலமாக விக்னேஷ், செல்வியாக சுவலட்சுமி, அமித்தாக பப்லு ஆகியோர் நடிக்கின்றனர்.

'சின்ன பட்ஜெட்' படங்களில் நடித்தாலும் பிஸியான ஹீரோவாக பல படங்களில் நடித்துவருகிறார் விக்னேஷ்.

## கரிஷ்மாவின் முன்னேற்றம்

ஹிந்தி நடிகைகளில் 'செக்ஸ் தாரகை' என்று முத்திரை குத்தப்பட்டவர் கரிஷ்மா கபூர். பிரபல ஹிந்தி நடிகர் ராஜ்கபூரின் பேத்தி.

"வாளிப்பான கால் அழகையும், உடல் அழகையும் காட்டுவதை விட்டால் கரிஷ்மா கபூருக்கு வேறு என்ன தெரியும்?" என்று பத்திரிகைகள் கிண்டல் செய்ததும் உண்டு.

இப்போது அதே பத்திரிகைகள் மூக்கில் விரலைவைத்துக் கொண்டு அசந்துபோய் பார்க்கின்றன.

'ராஜா இந்துஸ்தானி' படத்தில் கரிஷ்மாவின் நடிப்பைப் பார்த்தவர்கள் விழுந்து விழுந்து பாராட்டுகிறார்கள். 'செக்ஸ் குயின்' என்றழைக்கப்பட்டவரை நடிப்புராணி என்றழைக்க வைத்தது 'ராஜா இந்துஸ்தானி'. அந்தப் படத்திலும் அமீர்கானுக்கு கொட்டும் மழையில் முத்தம் கொடுக்கிறார் கரிஷ்மா. அதையும் மீறி நடிப்புத் திறமையும் காட்டியிருக்கிறார்.

அதன்பின்னர் மள மளவென்று வாய்ப்புகள் குவிந்தன. இன்றைய தேதியில் ஹிந்தித் திரையுலகில் நம்பர்வன் இடம் கரிஷ்மா கபூருக்குத்தான். மாதுரி தீக்ஷித், கஜோல் இருவரையும் பின்னுக்கு தள்ளியிருக்கிறார் கரிஷ்மா.

கரிஷ்மா கபூர் கமலஹாசனின் தீவிர ரசிகை. 'அமைதிப்பூங்கா' படத்தில் பிரபுவின் ஜோடியாக கரிஷ்மா நடிப்பதாக இருந்தது. ஹிந்தியில் பிஸியாக இருப்பதால் நடிக்க முடியாமல் போய்விட்டது.



நம்பர் 1



கரிஷ்மா கபூர்

ஆட்டம் போடும் துணை நடிகைக்கு குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது. ஒரு பாடல் காட்சிக்கு ஐநூறு வரைதான் சிலருக்கு கிடைக்குமாம். அதனால்தான் இப்படியான நிலைக்கு செல்கிறார்களாம்.

கதாநாயகியாகும் கனவோடு வந்த பலர் துணை நடிகைகளாக இருக்கிறார்கள். அவர்களில் பலர் நடிகைகள் என்ற முத்திரையோடு இரகசியத் தொழில் செய்தால்தான் பிழைக்கமுடியும். இப்படிச் சீரழிபவர்கள் நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள்.




மோகன்லால்
படம்-குரு (மலையாளம்)

# விஜய் சொன்ன காதல் அனுபவம்

## (பத்துக் கேள்விகள்! பட்பட் பதில்கள்)

விஜய் மிக்க மகிழ்ச்சியுடன் இருக்கிறார். விஜய் மிக்க குஷியாக இருக்கிறார். இருக்காதா பின்னே. நடிப்புலக இமயத்துடன் 'ஒன்ஸ்மோர்' படத்தில் நடிக்கிறார் அல்லவா. கிடைக்க முடியாத வாய்ப்பல்லவா கிடைத்திருக்கிறது.

விஜயிடம் கேட்கப்பட்ட பத்துக்கேள்விகளும், அவரது பட் பட் பதில்களும்.

**கே: காதல் நாயகனாக படங்களில் உலாவரும் உங்களின் காதல் அனுபவம்?**

**விஜய்:** என் இளவயதுக்கே உரிய அனுபவங்கள் உண்டு. பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது ஒரு பெண்ணால் கவரப்பட்டேன். தைரியத்தை வரவழைத்துக்கொண்டு என் விருப்பத்தைச் சொன்னேன். மறுத்துவிட்டாள். அவளை மறக்க எனக்கு சில காலம் பிடித்தது.

அடுத்து லயோலா கல்லூரியில் படிக்கும்போது ஒரு மாணவியைக் காதலித்தேன். என் எண்ணத்தை தெரிவிக்கப் பயந்தேன். அது ஒரு தலைக்காதலாக முடிந்தது.

**கே: திருமணத்திற்கு முன்பு 'செக்ஸ்' பற்றி?**

**விஜய்:** திருமணத்தின் பின்தான் அது புனிதமாக இருக்கும்.

**கே: உங்கள் திருமணம் காதல் திருமணமா? அல்லது பெற்றோர்கள் பார்த்து..**

**விஜய்:** அதுபற்றி இப்போது சொல்ல முடியாது. கடவுள்தான் தீர்மானிக்க வேண்டும்.

**கே: உங்களுடன் நடிக்கும் நாயகிகள் உங்களைவிட அதிக வயதானவர்களாக இருப்பதாகத் தெரிகிறதே?**

**விஜய்:** அதில் எல்லாம் நான் தலையிடுவதில்லை. இயக்குநரும், தயாரிப்பாளரும் யாருடன் நடிக்கச் சொன்னாலும் நான் ஓ.கே.

**கே: நடித்த படங்களில் பிடித்தது?**

**விஜய்:** 'பூவே உனக்காக', 'ரசிகன்'.

**கே: நடித்துவரும் படங்கள்.**

**விஜய்:** 'ஒன்ஸ்மோர்', 'லவ்டுடே', 'நேருக்குநேர்' மற்றும் சில படங்கள்.

**கே: முத்தக் காட்சியில் நடிப்பது பற்றி?**

**விஜய்:** படத்தின் கதை அமைப்புக்கு தேவை என்றால் முத்தக்காட்சியில் நடிப்பதில் தவறில்லை. நான் தயங்குவதும் இல்லை.

**கே: திரைப்படத்தில் தந்த முத்தம் பற்றி?**

**விஜய்:** என் முதல் முத்தம் 'செந்தூர பாண்டி' படத்துக்காக யுவராணிக்கு கொடுத்தது. உதட்டோடு உதடுவைத்துக் கொடுத்தது. எனக்கு பதட்டமாக இருந்தமையால் அக் காட்சி பல முறை எடுக்கப்பட்டது.

**கே: எந்த மாதிரி பாத்திரத்தில் நடிக்க ஆசை?**

**விஜய்:** வித்தியாச 'மேக் அப்'பில் கமல் மாதிரி நடிக்க ஆசை.

**கே: சங்கீதம் தெரியுமா?**

**விஜய்:** முறையாகக் கற்றதில்லை. கேள்வி ஞானம்தான்!

## அமெரிக்காவில் ஜீன்ஸ்

சங்கர் இயக்கும் படங்களில் அதிவேகமாக படப்பிடிப்பு நடக்கும் முதல் படம் 'ஜீன்ஸ்'. தற்போது அமெரிக்காவில் அசுர வேகத்தில் படப்பிடிப்பு நடந்துவருகிறது. அங்கு ஒரு மாதகாலம் ஓயாத படப்பிடிப்பு. முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா, சங்கருடன் பூரணமாக ஒத்துழைக்கிறாராம்.

அமெரிக்கப் பெண்கள் ஐஸ்வர்யாவை கண்டதும் அடையாளம் கண்டுகொண்டார்களாம். கட்டியணைத்து உம்மாவும் கொடுத்தார்களாம். நல்லவேளை, ஆண்கள் யாரும் அடையாளம் காணவில்லை.



அஸ்வினி-கோவை சரளா
படம்-பெரியமருது

## மினி விசிட்

### கைவிட்ட ஆசை

தமிழ்ப் படங்களில் நடிக்கவேண்டும் என்று ரொம்ப ஆசையாக இருந்தவர் மோகன்லால். இருவர் படத்தின் தோல்வியால், அந்த ஆசையைக் கைவிட்டுவிட்டாராம்.

'இருவர்' படத்தின் தோல்விக்கு யார் காரணம் என்று கேட்டால், புன்னகையுடன் நழுவுகிறாராம்.

மலையாளத்தில் மோகன்லால் நடிக்கும் படம் 'குரு'. இதன் இசை இளையராஜா. இதன் இசை வித்தியாசமாக இசையமைப்பதற்காக இசைக் கருவிகள் மட்டுமே 25 இலட்சத்துக்கு வாங்கப்பட்டுள்ளன. மோகன்லாலுடன் சுரேஷ் கோபியும் நடிக்கும் படம் 'குரு' படம் வெற்றி பெற்றால் தமிழில் மொழி மாற்றப்படும்.




விக்னேஷ்-சுவலட்சுமி
படம்-வாணிமகால்

## மினி சினி

* பிரேம் நடித்த 'அந்த நாள்' என்ற படத்தை இயக்கியவர் விஷ்ணுப்பிரியன். இவர் விரைவில் பிரபு கதநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்க வுள்ளார்.
* மலையாளத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக 'அங்கிள் பன்' படத்தில் நடித்த குஷ்பு, முதன் முறையாக மம்முட்டியுடன் இணைந்து மலையாளப்படமொன்றில் நடிக்கவிருக்கிறார்.
* தெலுங்கில் வெற்றி பெற்ற 'பெல்லி சந்தடி' தமிழில் 'நினைத்தேன் வந்தாய்' என்ற பெயரில் தயாராகவுள்ளது. இந்தப்படத்தில் விஜய்-தேவயானி-சிம்ரன் ஆகியோர் நடிக்கின்றனர்.
* 'மகாபிரபு' பட இயக்குநர் ஏ.வெங்கடேசன், அடுத்து அரவிந்தசாமி நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இந்தப் படத்திற்கு 'திருநெல்வேலி ஜங்ஷன்' என்று பெயரிடப்பட்டுள்ளது.
* 'மீரா', 'குருதிப்புனல்' ஆகிய படங்களை இயக்கியுள்ள ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம், அடுத்து 'லவ் 97' என்ற படத்தை இயக்கவுள்ளார். இதில் குஷ்பு கதாநாயகியாக நடிக்கிறார்.
* தமிழில் கவர்ச்சி நடனமாடி வரும் விசித்ரா, கன்னடத்தில் மூன்று படங்களில் கதாநாயகியாக நடித்து வருகிறார். இவர் விரைவில் தமிழ்ப் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.
* மம்முட்டி-அரவிந்தசாமி இணைந்து நடித்து வெற்றி பெற்ற 'புதையல்' படத்தை தெலுங்கில் மொழிமாற்றி வெளியிடவுள்ளார்கள். தெலுங்கில் இதற்கு 'கஜானா' என்று பெயரிட்டுள்ளார்கள்.
* மெல்லிசை மன்னர்களான விஸ்வநாதனும், ராமமூர்த்தியும் பிரிந்து பின்னர் 'எங்கிருந்தோ வந்தான்' படம் மூலம் இணைந்தனர். இவர்களைத் தொடர்ந்து தற்போது பிரிந்திருக்கும் சங்கர், கணேஷ் இருவரும் இணையவுள்ளார்கள்.
* இதுவரை தமிழ்ப் படங்களில் மட்டுமே நடித்து வந்த பார்த்திபன் முதன் முறையாக தெலுங்குப் படமொன்றில் நடிக்கவுள்ளார். இந்தப்படத்தில் முன்னணி தெலுங்கு நடிகர் வெங்கடேஷும் நடிக்கிறார்.
* 'மன்னிச்சக்கோ மைடியர்' பிலிம்சேம்பரில் புதிதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஒரு படத்தின் பெயர். குஷ்புவும், கிளின்டனும் இப்படத்தில் ஜோடியாக நடிக்கிறார்கள்.

## 'மச்சமுள்ள ஆளுதான்'

கொஞ்சம் பொறாமை, கொஞ்சம் வியப்பு கலந்து ஒரு நடிகரைப் பற்றித் திரையுலகில் பேசுகிறார்கள் என்றால் அது கார்த்திக் பற்றித்தான்.

படத்துக்குப் படம் தன் இஷ்டப்படி நடிகைகளை சிபாரிசு செய்கிறார். இஷ்டப்படி அவர்களுடன் ஜாலியாக இருக்கிறார். இஷ்டப்படி கழட்டி விடுகிறார். எல்லாமே மச்சம்தான் என்று சொல்கிறார்கள் சில சக நடிகர்கள்.

தற்போது கார்த்திக் தீவிரமாக நட்புக் கொண்டாடுவது நக்மாவின் தங்கை ரோஷினியுடன். அது ஒரு புறம் இருக்க நக்மாவுடன் 'பிஸ்தா' படத்திலும் டூயட் பாடிக்கொண்டிருக்கிறார் கார்த்திக்.

## புஷ்டியாக இருந்தால்தான்...

சூப்பர் குட் பிலிம்ஸ் மூலம் பல வெற்றிப்படங்களை தயாரித்தவர் ஆர்.பி. சௌத்ரி. ரசிகர்களின் நாடித் துடிப்பை அறிந்தவர்களில் ஒருவர் என்று கருதப்படுகிறவர்.

தமிழ்ப்பட ரசிகர்கள் எந்த மாதிரியான நடிகைகளை ரசிக்கிறார்கள் தெரியுமா? சௌத்ரி சொல்வதைக் கேளுங்கள்:

"தமிழ்ப்பட ரசிகர்களுக்கு புஷ்டியாக இருக்கும் நடிகைகளைத்தான் பிடிக்கும். குஷ்பு மாதிரி இருக்கவேண்டும். அதனால்தான் ஷில்பாஷெட்டி கூட எடுபடவில்லை. வேண்டுமானால் பாருங்கள் 'அரசியல்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் ஷில்பா ஷிரோத்கார் தமிழில் எடுபடுவார்" என்று ஆருடம் சொல்லியிருக்கிறார் சௌத்ரி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அடித்தால் மட்டும் போதுமா?



சிறுவர்கள் எப்போதும் துடிதுடிப்பாகவே இருப்பார்கள். காலையில் தூங்கி எழுந்ததும் படு சோம்பேறிகளாகவே தென்படுவார்கள். ஆனால் கதிரவனின் கிரணங்கள் பூமியை நன்றாகத் தொட்டு, வெப்பம் ஏற ஏற சிறுவர்களின் துடியாட்டத்தனம் அதிகரிக்கவே செய்யும்.

சிறிசுகளின் துடியாட்டத்தை இரசித்துச் சுவைத்து இன்புறும் பெற்றோர்களும் இருக்கிறார்கள். அக்குறும்புகளை 'பொல்லாத கொடுமை' என்று கூறித் திட்டவும், அடித்துத் துன்புறுத்தி அடக்கிவிட நினைப்பவர்களும் இருக்கிறார்கள்.

சின்னஞ்சிறுசுகளை அடித்து, உதைத்து, ஏசிப்பேசித் திருத்தலாம் என்பது ஒரு போதும் நடவாத காரியம்.

சிறு பராயத்தில் பிள்ளைகளைத் தண்டித்துத் திருத்திவிட நினைத்தால் அதனால் எதிரிடையான பலனே ஏற்படும். 'அடியாத மாடு படியாது' என்று ஒரு முதுமொழியைச் சாட்டாக வைத்துக் கொண்டு சிறிசுகளை அடிப்பவர்கள் தான் அதிகம் உள்ளனர்.

அடித்து மிரட்டி–அத்தகைய தண்டனைகளால் எங்காவது ஒரு பிள்ளை திருந்தியிருக்கிறதா, என்பதை எமது சுற்றாடலை அவதானித்து ஓர் உதாரணத்தைக் காட்ட முடியுமா?

தகப்பனோ தாயோ அல்லது வீட்டிலுள்ள பெரியவர்களோ பிள்ளைகளைத் தண்டிப்பதன் மூலம் திருத்த முயன்றால்–தண்டனை பெறும் அதே ஒரு கணத்தில் மட்டும் "இனிமேல் அவ்வாறு நடக்க மாட்டேன்..!" என்று பலத்த சப்தத்துடன் அக்குழந்தை ஒப்புக் கொள்ளும்.

இவ்வாறு வாக்களித்து ஒரு சில நிமிடங்களுக்குள் பழைய குறும்பையே செய்து விட்டு மீண்டும் தண்டனைக்கு உட்பட ஆயத்தமாகிவிடும்.

தாய், தகப்பன், சகோதரர்களோடு அண்டிவாழும் குழந்தை தன்னைச் சுற்றியுள்ள உறவினர்கள் செய்யும், பணிகளை அவதானித்து அதே போல் தானும் செய்ய முற்படும்.

தாய் தும்புத் தடியை எடுத்து வீட்டைச் சுத்தம் செய்வதைப் பார்த்துவிட்டு, அதே தும்புத் தடியால் தானும் வீட்டைத் துப்பரவு செய்ய எத்தனிக்கும்.

துணி துவைக்கும் தாயின் அருகே போயிருந்து தானும் துணி துவைக்க ஆயத்தமாகும்.

பெண் குழந்தைகள் தம் தாயார் செய்யும் வேலைகளைத் தானும் செய்யவே விரும்பும். தன்னைத் தன் மடியில் கிடத்திப் பாலூட்டியது போல் தானும் ஒரு பொம்மையைத் தன் மடியில் கிடத்தி பாலூட்டுவது போலவும் தாலாட்டுவது போலவும் பாவனை செய்யும்.

வீட்டில் கணவனும் மனைவியும் சண்டை பிடிப்பதைப் பார்த்துப் பழகிய அவர்களுடைய குழந்தைகளும், சிறு பிள்ளைகளான அயல் வீட்டுப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடும்போது 'அப்பா அம்மா விளையாட்டு' விளையாடுவார்கள். அப்போது 'சண்டையிடும் தம்பதி'யாகவே விளையாடுவார்கள்.

அடித்து உதைத்து அல்லது திட்டியோ உறுக்கியோ வளரும் பிள்ளைகளைத் திருத்த முயன்றால்–தண்டனை கிடைக்கும் அதே வேளையில் மட்டும்தான் பயந்து நடுங்குவது போல் பாசாங்கு செய்துவிட்டு, அடுத்தகணம் "பூ இவ்வளவு தானே! அம்மா இரண்டு தட்டுத் தட்டுவாங்க... இரண்டு அடிபோடு வாங்க...." என்று கூறிவிட்டு "பழைய குருடி கதவைத்திறவடி.....!" என்ற நிலைக்குத் திரும்பிவிடுவார்கள்.

சின்னஞ்சிறுசுகளைத் திருத்த உளவள ரீதியான சில உபாயங்களைக் கையாளலாம். மிருகங்கள், பறவைகளை வைத்து சில கற்பனைக் கதைகளைக் கூறி வசப்படுத்தலாம்.

சற்று வளர்ச்சியடைந்த குழந்தைகளை, அவர்களுடைய மனத்தில் பதிய வைக்கக் கூடிய புத்திமதிகளைக் கூறித்திருத்தலாம். அன்புடன் குழைந்த வார்த்தைகளே இந் நோய் தீர்க்கும் ஔடதம்!.

ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்! பெரியவர்களாகிய நாம், குழந்தைகளாக இருந்த போது இருந்ததைவிட எமது பிள்ளைகள்-பேரப்பிள்ளைகள் அதிக புத்திக் கூர்மை உடையவர்கள். அவர்களுடைய சிந்தனை வேகம் அதிவேகமானது.

இது கொம்பியூட்டர் யுகம்!

# தேயிலை இருந்தால் தேவையில்லை பார்மஸி!



தேயிலை....சுவையான தேநீர் தயாரித்து அருந்த மட்டும்தான் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. தேயிலை மருந்துப் பொருளாகவும், அழகுசாதனப் பொருளாகவும் மற்றும் பல்வேறு வகைகளிலும் நன்மை செய்கின்றது. அவை என்னவென்று பார்ப்போமா?

* தேநீர் தயாரித்த பின்பு வடிகட்டிய சக்கையைத் தூர எறிந்து விடாதீர்கள். நன்றாக வெயிலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும். தலைக்குக் குளிக்கும் நாளில் 2 தேக்கரண்டி காய்ந்த தூளை 1/2 கப் தண்ணீரில் கொதிக்க வைத்து, கறுத்த நீரை வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். தலைக்குக் குளித்த பிறகு கடைசியாகத் தேநீரை தலையில் ஊற்றி அலசி டவலால் கட்டிக் கொண்டு, பிறகு உலர்த்தவும். கூந்தல் வளரவும் கறுத்த நிறமாக மாறவும் இவ்வாறு வாரம் இருமுறை செய்து வரலாம்.
* முகச் சுருக்கமா? வடிகட்டிய தேயிலைச் சக்கையுடன் சிறிது சீனியைச் சேர்த்து முகம் முழுவதும் தடவி 15 நிமிடங்கள் உலர விடவும். பிறகு வெதுவெதுப்பான நீரில் சில துளிகள் எலுமிச்சம்பழச்சாறு கலந்து முகத்தைக் கழுவினால் நாளடைவில் முகச் சுருக்கம் மறையும்.
* வீட்டில் ஓயாத நுளம்புத் தொல்லையா? உலர்ந்த தேயிலைச் சக்கையைப் போட்டு புகை மூட்டினால் நுளம்புத் தொல்லை இருக்காது.
* வாய்வுத் தொந்தரவாக இருக்கிறதா? காலை தேநீருடன் இஞ்சித்துண்டை தோல் நீக்கித் தட்டிப் போட்டு தேநீர் தயாரித்து அருந்த வாய்வு உபத்திரவம் இருக்காது. பசி மந்தமாக உள்ளவர்களுக்கும் இந்த இஞ்சித் தேநீர் ஏற்றது.
* உடல் பருமனா? அதிகாலை வெறும் வயிற்றில் 2 கப் தண்ணீர் குடித்துவிட்டு, ஒரு மணி நேரம் கழித்து பால், சீனி சேர்க்காமல், தேன் சேர்த்த தேநீர் ஒரு கப் அருந்தினால் அதிகப்படி பருமன் குறைந்து உடல் சீராகும்.
* தொண்டை வலியா? தேயிலைச் சக்கையை சிறிது உப்புப் போட்டுத் தண்ணீருடன் கொதிக்க வைத்து வடிகட்டி மிதமான சூட்டில் வாயில் ஊற்றி தொண்டையில் நனையுமாறு கொப்பளித்தால் தொண்டை வலி குணமாவதோடு, நெஞ்சுச்சளியும் கரையும்.
* தேயிலைச் சக்கையை ரோஜாச் செடியின் வேர்ப்பகுதியில் தூவி மண்ணுடன் கலந்தால் ரோஜாச்செடி செழிப்பாக வளர்வதோடு பெரிய அளவில் பூக்கள் பூக்கும்.
* தீக்காயம் பட்ட இடத்தில் தோலின் நிறம் மாறாமல் இருக்கிறதா? கெட்டியான தேயிலைச் சாயத்தில் துணியை நனைத்துத் தோல் பகுதியில் பரவலாகப் போட வேண்டும். ஒரு நாளைக்கு மூன்று முறை அரை அரை மணிநேரமாகப் போட, தோலின் இயற்கை நிறம் விரைவில் வந்துவிடும்.
* விருந்தில் ஒரு பிடி பிடித்து விட்டீர்களா? வயிறு கனமாக இருப்பதாக உணர்கிறீர்களா? பால் சேர்க்காத தேநீருடன் குறைவான சீனி போட்டுப் பருகிப் பாருங்கள். வயிறு கனம் குறையும்.

# உலகில் பெண்கள்



* ஐ.நா. செயலகத்தில், சிறப்புத்துறைகளில் தேர்ச்சி பெற்ற பெண்கள் 38% ஆவர். இதில் 19.4% உயர் மேலாண்மைத் துறைகளில் உள்ளனர்.
* கி.பி. 2000 ஆம் ஆண்டில் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஆண்களுக்குச் சமமான எண்ணிக்கையில் பெண்கள் பணிபுரிவர்.
* ஆண்களை விடப் பெண்களின் ஆயுள் சிறிது அதிகம்.
* 100 ஆண்களுக்கு 98.6 பேர் பெண்கள் என்பது உலகப் புள்ளி விபரம்.
* வளர்ச்சியடைந்த நாடுகளில், கடந்த இருபது ஆண்டுகளில் திருமணமின்றிக் குழந்தை பெறும் பெண்களின் எண்ணிக்கை 50% அதிகரித்துள்ளது.
* பெண்ணைத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள் உலகில் நான்கில் ஒரு பங்கு ஆகும்.
* 1970ல் வளரும் நாடுகளில் பெண்களின் சராசரி வயது 53.7 ஆக இருந்தது.1992ல் இது 62.9 ஆக உயர்ந்துள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளில் 1970ல் பெண்களின் ஆயுள் 74.2 ஆக இருந்தது. 1990க்குப் பின் 79.4 ஆக உயர்ந்துள்ளது.
* பெண்கள் தான் எச்.ஐ.வி. கிருமியால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவர்களில் 42% பெண்கள். இந்நோயால் பீடிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 2000 ஆவது ஆண்டில் 15 மில்லியன் ஆக அதிகரிக்கும். அதாவது 1 1/2 கோடி.
* உலகில் ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்கள் செய்யப்படுகின்றன. இதனால் 70,000 மகளிர் உயிரிழக்கின்றனர்.
* கர்ப்பம், மகப்பேறு தொடர்பான நலக் குறைவினால் 5,85,000 பெண்கள் ஒவ்வொரு வருடமும் இறக்கின்றனர். ஆபிரிக்காவில் 13 பெண்களில் ஒரு பெண் என்னும் விகிதத்தில் பெண்கள் இறக்கிறார்கள். அமெரிக்க ஐரோப்பிய நாடுகளிலோ இத்தகைய நலச்சிக்கல்களினால் 3300 பெண்களில் ஒரு பெண் தான் உயிரிழக்கிறார்.
* உலக அளவில் 43% பெண்களும், கர்ப்பிணிப் பெண்களில் 51% பெண்களும் இரும்புச் சத்துக் குறைவான இரத்தச் சோகை நோயினால் பாதிக்கப்படுகின்றனர்.
* 21% முதல் 50% வரையான பெண்கள் ஏதோ ஒரு வகையான குடும்ப வன்முறையால் திருமணமானதும் கொடுமையை அனுபவிக்கிறார்கள்.
* போர்களில் பாலியல்வதை என்பது ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது. 1994 ஏப்ரல் முதல் 1995 ஏப்ரல் வரை ருவாண்டாவில் நடந்த பாலியல் குற்றங்களின் எண்ணிக்கை 15,700 முதல் 2,50,000 வரை இருக்கும்.
* யூகோஸ்லாவியாவிலும், ருவாண்டாவிலும் நிகழ்ந்த பாலியல் பலாத்காரங்கள், 'போர்க்குற்றங்கள்' எனத் தீர்மானிக்கப்பட்டு ஐ.நா. மன்றத்தின் அனைத்துலக விசாரணைக் குழுவால் 'மானிடத்திற்கு எதிரான குற்றங்கள்' என நோக்கப்பட்டு ஆராயப்படுகின்றன; தண்டிக்கப்படுகின்றன.

# சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது – சுகந்தினி

## வேர்க்கடலை முறுக்கு

**தேவையானவை:**

| | |
|---|---|
| பச்சரிசி | - 3 கப் |
| வேர்க்கடலை (வறுத்துப் பொடித்தது) | -1/2 கப் |
| எள் | - 1 தேக்கரண்டி |
| ஓமம் | - 1/2 தேக்கரண்டி |
| பெருங்காயம் | - 2 சிட்டிகை |
| நெய் | - 2 தேக்கரண்டி |
| உப்பு | - அளவாக |
| எண்ணெய் | - தேவையான அளவு |

**செய்முறை:**

பச்சரிசியை 1/2 மணிநேரம் தண்ணீரில் ஊறவைத்து, ஈரம்போக உலரவைத்துப் பிறகு மாவாக அரைத்துக் கொள்ளவும். 1/2 டம்ளர் நீரில் பெருங்காயத்தைக் கரைத்து வைத்துக் கொள்ளவும். பச்சரிசி மாவு, பொடித்த வேர்க்கடலை இவற்றுடன் எள், ஓமம், மிளகாய்த்தூள், உப்பு, பெருங்காயக் கரைசல் அனைத்தையும் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். மாவு கெட்டியாக இருக்க வேண்டும். பிசைந்த மாவில் நெய் சேர்த்து 5 நிமிடம் வைக்கவும்.

பின்னர் வாணலியில் எண்ணெய் ஊற்றிக் கொதித்தவுடன், மாவை முறுக்கு உரலில் இட்டு முறுக்குப் பிழிந்து பொரித்து எடுக்கவும். இதுதான் வேர்க்கடலை முறுக்கு. இந்த முறுக்கு எண்ணெயை அதிகம் உறிஞ்சாது. அத்துடன் மிகவும் சத்துள்ளது.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

ச. ரோசினி,
1/¼, ரட்ணம் வீதி, கொழும்பு-13.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# இளநரையை ஒழித்துக் கட்டுங்கள்!



உணவில் நிறைய பச்சைக் காய்கறிகளையும், கீரை வகைகளையும் சேர்த்துக் கொள்ளவும்.

* ஷாம்பூ உபயோகிப்பதைத் தவிர்த்து, சீயக்காய் தூள் அல்லது மூலிகை ஷாம்பூ உபயோகித்து கூந்தலை அலசவும்.
* சுத்தமான தேங்காய் எண்ணெயில், சிவப்பு நிற, ஒற்றைச் செம்பருத்திப் பூவின் இதழ்களைக் காய வைத்துப் போட்டு, தினசரி கூந்தலுக்குத் தடவி வரவும்.
* கூந்தலை அலசுவதற்கு முன் செக்கு நல்லெண்ணெய் அல்லது விளக்கெண்ணெயைத் தலையில் தடவி, சிறிது நேரம் ஊறவிடவும்; அல்லது இரண்டு டேபிள் ஸ்பூன் நல்லெண்ணெய், அரை டேபிள் ஸ்பூன் விளக்கெண்ணெய் மற்றும் அரை டேபிள் ஸ்பூன் வேப்ப எண்ணெய் ஆகிய மூன்றையும் கலந்து தடவி ஊறவிட்டபின் குளிக்கலாம்.
* கூந்தலை அலசுவதற்கு முன், ஒரு சுத்தமான டவலை சுடுநீரில் நனைத்துப் பிழிந்து, தலையில் போட்டு எடுக்கவும். இதனால் நீராவி பட்டு மண்டையில் உள்ள துவாரங்கள் சுத்தமாகும்.
* தலையைப் பின்னுவதற்கு முன், கூந்தலை குறைந்தபட்சம் ஐம்பது முறைகளாவது அழுத்தி வார வேண்டும். இது மண்டையோட்டின் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும்.
* நுனிகள் தலையில் படும்படி அழுத்தி வட்டமாக (Rotary movement) மசாஜ் செய்யவேண்டும்.
* ஒவ்வொருவரும் தனித்தனி சீப்பு மற்றும் டவலை உபயோகிப்பது நல்லது. தவிர, அடிக்கடி சீப்பையும், டவலையும் சுத்தப்படுத்த வேண்டியதும் அவசியம். உடலுக்கும் தலைக்கும் ஒரே டவலை உபயோகிக்கக் கூடாது.
* கூரிய முனைகளைக் கொண்ட சீப்புகளை உபயோகிக்கக் கூடாது. அகலமான பற்களைக் கொண்ட சீப்புக்களே சிறந்தவை.
* ஈரமான கூந்தலை உலர்த்த 'ஹெயார் டிரையர்' உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும். கூந்தலை எப்போதும் வெயிலில் உலர்த்திக் கொள்வதே நல்லது.
* கூந்தலுக்கு ஹெயார் ஸ்பிரே, ஹெயார் ஜெல் போன்றவற்றை உபயோகிப்பதையும் தவிர்க்க வேண்டும்.
* முட்டையும், ஆரூட் பவுடரும் கலந்து தலையில் தடவிக் குளிப்பது, கூந்தலின் வேர்க் கால்களைப் பலப்படுத்தும்.
* ஒரு கேரட், சிறிதளவு முட்டை கோஸ் மற்றும் ஒரு கப் பச்சைக் காய்கறிகள் ஆகிய அனைத்தையும் நறுக்கி, சிறிது தண்ணீர் சேர்த்து வேகவைத்து, உப்பும், மிளகுத் தூளும் தூவி, தினமும் காலையில் உண்டு வந்தால் கூந்தல் வளர்ச்சி அதிகரிக்கும்.
* அதே போல தினமும் காலையில் வெறும் வயிற்றில் பச்சை கறிவேப்பிலையை மென்று தின்று வருவதும் கூந்தல் ஆரோக்கியத்திற்குப் பெரிதும் உதவும்.
* ஒரு கிலோ சீயக்காய், 200 கிராம் வெந்தயம், கால் கிலோ பச்சைப் பயறு, இரண்டு கைப்பிடியளவு அரிசி, ஆரஞ்சு அல்லது எலுமிச்சம் பழத்தோல் சிறிதளவு, நெல்லிக்காய்ப் பொடி 200 கிராம் ஆகிய அனைத்தையும் வெயிலில் காயவைத்து, அரைத்து வைத்துக் கொள்ளவும். வாரம் ஒருமுறை இந்தப் பொடியில் சிறிதளவு எடுத்து, சாதம் வடித்த கஞ்சியில் கலந்து மூன்று நிமிடங்கள் அடுப்பில் வைத்து, இறக்கிக் குளிரச் செய்து, தலையில் தடவிக் குளித்து வந்தால் கூந்தல் உதிர்வது நின்று, இளநரையின்றி செழிப்பாக வளர ஆரம்பிக்கும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை BM

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 26-04-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும்

தினமுரசு– அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 07

தங்கமாலை பரிசுப் போட்டி

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

# தேன் கிண்ணம்

## இதயம் இருப்பவர்களுக்கு!

இன்றுவரை
காதலை அனுபவிக்காத
இளைஞர்களே...!
நீங்களென்ன
எலும்பாலும் தசையாலும் ஆன
இயந்திரங்களா?
***
இல்லை–
நீங்கள்
கேளிக்கைக்குப் போய்
விருந்துண்ணாமல்
வந்த விருந்தாளிகள்!
***
உப்பில்லாத உணவுக்கு
உதாரணம் தானப்பா
காதலற்ற வாழ்க்கைக்கும்!
***
தோழா!
கண்ணீரிலும்
விந்தின் சுகம் தருவது
காதல் ஒன்றுதான்!
***
போருக்குள்ளும் இன்னும்
பூமி வாழ்ந்து கொண்டிருப்பது
காதலர்களுக்காகத்தான்!
***
காதல்–
இதயத்தோடு தொடர்பானது;
இனிமையான;
உணர்வுகளால் உருவாக்கப்படுகிறது!
உண்மைக்காதலுக்கு
உதாரணம்
எதுவுமில்லையப்பா!
***
ஏமாந்து போன ஒரு கூட்டம்.....
தம்மைப் போலவே என்று
எல்லோரையும்
எண்ணும் ஒரு கூட்டம்....
காதல் பொய்யென்று சொல்லும்.......
காதலிக்காதே என்று சொல்லும்–
நம்பாதே!
***
தோற்றுப் போனவர்கள்
எல்லாமே இப்படித்தான்...!
துணிவோடு புறப்படு!
இதோ– ஒரே ஒரு
தோற்றுப் போனவனின்
நல்லாசிகள்....!!

அ. டக்ளஸ் ஜெயசேகரன்,
வவுனியா.

## நான் ஒரு 'சிபி'



முரண்பாடுகள் பற்றிய
சம்பாஷணையில்
நீ தோற்றுப் போனாய்!
நான்
வாழ்க்கையில்...!
**
எதிரியின்
பாதத்தினுள்
மிதிபட்டுப்போவது
பரவாயில்லை–
உன் பிரிவை விட!
**
உன்னைப் பற்றி
எந்தக் கரும்பலகையில்
எழுதிவைக்க?
கற்களில் பொறிக்க
முடியாது;
ஏனெனில் என் உளி
கண்ணீர்!
**
உன் அறையும்
உன் வாசமும்
உன் அன்பும்
என்றைக்கு
இல்லாமல் போகும்
என் இதயத்தில்...!
**
புதிய சுமைகளை
இன்னும் என்னால்
அள்ளிப் போட
முடியவில்லை!
**
ஒரு வெண்புறாவுக்கு
என் இதயத் தசையை
அறுத்துப்போட்ட
'சிபி' நான்!
போதும்!
**
இன்னும் கொஞ்சக்
காலம்
வாழவேண்டுமானால்,
அன்பானவளே!
ஒரு கடிதமெழுதேன்...?

மானுடபுத்ரன்.

## காதல் கவி!

இளைஞனே, காதலி!
பிரசவம் போல் வேதனை வரும்
பெற்றுக்கொள்!
காதலின் சோகமும் சுகமானது!!
❤✍
பசித்தும் பட்டினி கிடப்பது;
உறங்கியும் விழித்திருப்பது;
விழி திறந்து–கனவுலகில் வசித்திருப்பது;
வான வீதியில் வெண்ணிலவு பார்த்து,
விண்மீன்கள் எரித்து,
பனி கொட்டும் பொட்டல் வெளியில்
படுத்துறங்குவது....
எவருக்குக் கிடைக்கும்
இந்த சுகம்?
❤✍
சுற்றம் எதிர்க்கலாம்;
நண்பர்கள் எதிரிகளாகலாம்;
காதலி கூட கவனியாது போகலாம்;
நெஞ்செரியும்–தொண்டை வறளும்,
மூளையும் வாயும் தடுமாறும்;
மனது கடல் அலைபோல் ஆட்டம் போடும்;
நீர் குடிப்பாய்! நெருப்பாய் எரியும்!
ஆனாலும் இளைஞனே– நீ காதலி!
காதலின் சுகம்– எவருக்குக் கிடைக்கும்?
❤✍
உடலும் உயிரும்
அவளுடையதாய் இருக்கும் போது,
மனது மட்டும் மறுத்தென்ன?
இளைஞனே, நீ காதலி!
இந்த சுகம் எவருக்குக் கிடைக்கும்??

அகன் கபிலன்-வவுனியா.

காதல் காதல்
காதல் காதல்
காதல் காதல்

## ஆறுதல் கிடைக்காத அழுகை

எனது பொறுமையின் மீது
நெடுங்காலமாகவே
புயலொன்று
தவம் புரிந்து வருகிறது!
–o–
நிராசைகள் நிரம்பிய
நாளைகளை
நினைக்கும் வேளை
அழுகை வெள்ளம்
அலைமோதி
உள்ளத்தைக் கழுவி
வெறுமைப்படுத்துகிறது!
–o–
உன்னையன்றி–நான்
வெற்றிபெறுவதற்கு
வேறெவரும் இல்லையென்றேன்!
பிறிதொரு வாழ்வைப்
பிரார்த்தித்துப் பெறும்
பாக்கியம்கூட இல்லையென்றேன்!
என்னைப் பிரிய வேண்டாமென
கண்ணீர்க் கோடுகளால்
உன் உள்ளத்தில்
ஆழமாய் எழுதினேன்!
–o–
என் காயங்களால் சிந்திய
குருதிச் சுவடுகளை–உன்
பாதங்களில்
படியவைத்துக் கொண்டு
இன்னொரு வாழ்வுக்குள்
நுழைந்து கொண்டாய்!
–o–
எனது அன்பைப்
பணயம் வைத்து–நீ
உருவாக்கிக் கொண்ட
வாழ்வுக்கு
ஆயுள் அதிகமில்லையென்பதை
எதிர்காலம் உனக்கு
எடுத்துரைக்கும்!
–o–
உனக்கான நேசங்கள்
உள்ளத்திலே
ஊமையாய்க் கிடக்க,
உரிமையற்ற அன்புக்காக
அவதிப்படுவதில்
அர்த்தமில்லையென
ஒதுங்கிக் கொண்டேன்!
–o–
காதலின் பயங்கரங்களையெல்லாம்
கண்டுகொண்ட பின்னர்
என்னை இனிமேல்
எந்தக் காதலுக்காகவும்
அர்ப்பணிக்கமாட்டேன்!
–o–
இன்னொரு நிழலில்
இன்னொரு உறவில்
என் இதயமினி
இளைப்பாறப் போவதில்லை!
–o–
எனது கண்ணீருக்கு
ஆறுதல் தேடி
எவரிடமும் நான்
அடைக்கலம் கோரமாட்டேன்!
–o–
நீ தந்த
துயரங்களையெல்லாம்
கைவிட்டுவிட்டு
புதிய வாழ்வொன்றினுள்
பிரார்த்தனைகளுடன்
போய்ச்சேர
என்னால் முடியாது!
–o–
எத்தனை தடவைகள்
என்னிடம் பலரும்
எடுத்துச் சொன்னாலும்
மனதின் ரணங்களுக்கு
மருத்துவ மேது?

செல்வி பஹீமா ஜஹான்,
மெல்சிரிபுர.

## காத்திருக்கும் சிலுவைகள்!

பூட்ஸ்
காலோசையின்
பூபாளம்
பொழுதைப்
புலரவைக்கும்!
†
ஏன் விடிந்தது?
இன்(று)னும்
வேதாளம்
முருங்கை
மரத்தில்தான்!
†
கால் விரலிடுக்கில்
தன்
முழுப்பலத்தையும்
பிரயோகித்து
எறும்பொன்று
மல்லுக்கு நின்றது.
†
அதன்
சுதந்திரமான
சுறுசுறுப்பைக்
கண்டு
மனம்
பேதலித்தது!
அளவில் சிறிய
உயிரானாலும்
அந்தஸ்தில்
உயர்ந்தது! †
இன்னும்
நாம்
ஒரு 'யேசுவின்'
பிறப்பிற்காய்
ஏங்கும்
'சிலுவைகள்' தானா...???

மாரிமுத்து யோகராஜன், அக்கரைப்பற்று–08.



## அந்த நாள் ஞாபகம்

→ சுட்டும் சுடர்விழிகள் கொண்ட இச் சிறுமியை பல தமிழ்ப் படங்களில் பார்த்திருப்பீர்கள். கதாநாயகியாக வராவிட்டாலும், உங்கள் கவனத்தை கவரத்தக்க பாத்திரங்களில் தோன்றியிருக்கிறார்.


↓ சிறுமியாக நடிக்க ஆரம்பித்து பிரபல நடிகையாகி, இப்போது ஒரு நடிகரின் மனைவியாக மாறிவிட்டார். சமீபத்தில் ரூபவாகினியில் ஒளிபரப்பான மேஜர் மீனாட்சி படத்திலும் சிறுமியாக நடித்திருக்கிறார்.





↓ தொப்பியுடன் காணப்படும் இந்த நடிகர் யார் என்று தெரிகிறதா? என்றும் இளமை முகத்தில் தெரிகிறதா?





← இவர் ஒரு புதுநடிகர். ஒரு பிரபல தமிழ் நடிகரின் வாரிசு. முக ஜாடையை வைத்து ஊகியுங்கள் பார்க்கலாம். விடைகள் பக்கம் 12 இல்.

# இந்த வாரம் உங்கள் பலன்

(20.04.1997 தொடக்கம் 26.04.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், வெள்ளி. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |
| மகரம் | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது, புதன் (வக்கரகம்) |

★ சந்திரன்– கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, காரிய சித்தி. | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 4 மணி |
| வியாழன்- கடன் தொல்லை, மனக் கவலை. | பகல் 11 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, பணக் கஷ்டம். | பி.ப. 3 மணி |
| சனி- காரிய சித்தி, கடன் தொல்லை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பண வரவு. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- காரியசித்தி, தொழில் உயர்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் நன்மை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் பேறு, பண வரவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, வீண்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| சனி- பெரியோர் உதவி, தொழில் உயர்ச்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பண இழப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, குடும்ப சுகம். | பி.ப. 2 மணி |
| புதன்- காரியத் தடை, அந்நியர் நட்பு. | பகல் 11 மணி |
| வியாழன்- வீண் முயற்சி, மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பலவித பேறு. | பி.ப. 1 மணி |
| சனி- கடன் தொல்லை நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பிரயாண மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- பெரியோர் பகை, தேகசுக நன்மை. | பி.ப. 3 மணி |
| வியாழன்- காரியானுகூலம், பயனுள்ள செயல். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், பண வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், பலவித பேறு. | பகல் 11 மணி |
| திங்கள்- உயர்ந்த நோக்கம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, பண வரவு. | பகல் 12 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனப் பயம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 4 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், கௌரவக் கேடு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- ஆடம்பரச் செலவு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, காரிய சித்தி. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- மனக் கலக்கம், பயனுள்ள செயல். | பகல் 12 மணி |
| புதன்- உறவினர் பகை, கடன் சுமை. | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், புதிய முயற்சி. | பி.ப. 4 மணி |
| சனி- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் பகை, கெரவக் கேடு. | பி.ப. 1 மணி |
| புதன்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. 4 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பகல் 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பண வரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- கடன் சுமை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 3 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், மனப் பயம். | பி.ப. 4 மணி |
| வியாழன்- பலவித பேறு, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| சனி- காரியக் கேடு, மனக் குழப்பம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் மந்தம், காரியக்கேடு. | பி.ப. 3 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, செல்வாக்கு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மனப் பயம். | பகல் 12 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், காரியத்தடை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, மனப் பயம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| புதன் - பெரியோர் பகை, வீண் முயற்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், பண வரவு. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- கடன் சுமை, உறவினர் பகை. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, பலவித பேறு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பண வரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- எதிர்பார்த்த நன்மை, கௌரவம். | பி.ப. 1 மணி |
| சனி- புதிய முயற்சி, தொழில் சிறப்பு. | பி.ப. 4 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மேன்மை, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| புதன்- காரியத்தடை, மனப் பயம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வீண் துயர் நீங்கும், தேகசுக நன்மை. | மு.ப. 10 மணி |
| சனி- அந்நியர் உதவி, பலவித பேறு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5





## ஆசிரியர்!

பாடம் சொல்லித் தந்திடுவார்!- உயர்
பண்பை விளக்கிச் சொல்லிடுவார்
வாடும் மாணவர் மனத்திற்கு- சுவை
வண்ணக் கதைகள் படைத்திடுவார்!

ஒப்பு உயர்ந்த நெறி புகட்டி- இளம்
உள்ளம் மகிழச் செய்திடுவார்!
தப்புச் செய்தால் திருந்திடவே- நீள்
தடியை உயர ஓங்கிடுவார்!

அறிவுப் பாதையைக் காட்டிடுவார்!-நல்
அறிஞராக்க விழைந்திடுவார்!
செறிவு நூலைக் கற்றிடவே-அவர்
தூண்டு கோலாய் இருந்திடுவார்!

கண்ணைத் திறக்கும் ஆசானை-நற்
கடவுளாக மதித்திடணும்!
மண்ணில் சிறந்த நிலை பெற்று- இம்
மாநிலம் போற்ற வாழ்ந்திடணும்!

எம். முத்துக்கிருஷ்ணன்

அறிவு கொண்ட மனித உயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தராம்;
நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்
நேர்மை கொண்டுயர் தேவர்க ளாதற்கே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# வாயுள்ள பிள்ளை!



அரண்மனைப் பூந்தோட்டத்தில் விதவிதமான செடிகளும் மரங்களும், கொடிகளும் காட்சியளித்தன. பூத்துக் குலுங்கும் மலர்களோ கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன.

ஒருநாள் தென்னாலிராமனின் மகன் காவலர்களுக்குத் தெரியாமல் பூந்தோட்டத்திற்குள் புகுந்து விட்டான். அங்கு அழகான ரோஜா மலர்களைப் பார்த்தான். ஆசையோடு சில மலர்களைப் பறித்து எடுத்து வந்து விட்டான்.

மறுநாளும் அந்தச் சிறுவன் பூந்தோட்டத்திற்குள் சென்று ரோஜா மலர்களைப் பறித்தான். அப்போது அங்கே வந்த காவலாளிகள் அவனைக் கையும், களவுமாகப் பிடித்து விட்டனர்.

மகனைக் காணாமல் தேடிக் கொண்டு பூந்தோட்டப் பக்கமாக வந்த தென்னாலி ராமனிடம் எதிரில் வந்த பூந்தோட்டக் காவலாளிகள்,

"உம்முடைய மகன் ரோஜாப் பூக்களைத் திருடி, மடியில் கட்டி வைத்திருக்கிறான். அவனைத் தோட்டத்தில் உள்ள அறையில் அடைத்து வைத்திருக்கிறோம். சிறிது நேரத்தில் அரச சபைக்குக் கொண்டு செல்லப் போகிறோம். அங்கே அரசரால் விசாரிக்கப்பட்டுத் தண்டனை பெறுவான்!" என்றனர்.

தென்னாலிராமன் தோட்டத்திலுள்ள அறையை எட்டிப்பார்த்தான். மகன் பயத்தோடு நின்று கொண்டிருந்தான்.

"காவலாளிகளே! என் மகன் வாயுள்ள பிள்ளையானால் பிழைத்துக் கொள்வான். நீங்கள் நினைப்பது போல் அவன் ரோஜா மலர்களைத் திருட வந்திருக்கமாட்டான். தன் தாய்க்கான மருந்துச் செடிகளைப் பறித்து மடியில் கட்டிக் கொண்டிருப்பான்!" என்று உரத்த குரலில்- மகன் காதில் கேட்கும்படியாகக் கூறினான் தென்னாலி ராமன்.

அவன் தென்னாலிராமனின் மகனல்லவா? தந்தை கூறிவை காதில் விழுந்ததும், மடியில் இருந்த ரோஜாமலர்களை எல்லாம் மென்று தின்றான். அவன் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறைக்கு வெளியே கைக்கு அகப்பட்ட சில செடி, கொடிகளைப் பறித்து மடியில் கட்டிக் கொண்டான்.

சிறிது நேரத்தில் அவன் அரசர் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.

"தென்னாலிராமனின் தந்திரம் இதில் பலிக்காது. இது அவனுக்குப் பெரிய அவமானம் அல்லவா?" என்று சபையில் இருந்தவர்கள் பலர் கிசுகிசுத்தனர்.

"சிறுவனே! அரண்மனைப் பூந்தோட்டத்தில் உள்ள மலர்களைப் பறிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று தெரிந்தும் நீ மலர்களைப் பறித்திருக்கிறாய். எங்கே மடியில் உள்ள ரோஜா மலர்களை வெளியே எடு!" என்றார் அரசர்.

"ராஜாவே! என் தாய்க்கு ஒரு மூலிகைச் செடியைத் தேடிப் போனேன். காவலாளிகள் தூங்கிக் கொண்டிருந்தனர். நான் மூலிகைகளைப் பறித்துத்தான் மடியில் வைத்திருக்கிறேன். ரோஜா மலர்களை நான் பறிக்கவே இல்லை," என்று கூறி மடியை அவிழ்த்தான். உள்ளே சில செடி, கொடிகள்தான் இருந்தன. ரோஜா மலர்கள் இருக்கவில்லை.

சபையோர் வியப்படைந்தனர். காவலாளிகள் திடுக்கிட்டனர். தென்னாலிராமன் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அரசர் கோபமடைந்து, காவலாளிகளைக் கண்டித்து அவர்களை எச்சரித்து அனுப்பினார். தென்னாலிராமனின் மகனை விடுதலை செய்தார்.

தனது மகனின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டி, அவனைக் கட்டித் தழுவிக் கொண்டான் தென்னாலிராமன்.

## வாரம் ஒரு நாடு
## தூவலு

| | |
|---|---|
| தலைநகர் | - ஃபுனாஃபுதி |
| பரப்பு | - 26 சதுரகிலோ மீட்டர் |
| மக்கள் தொகை | - 10,000 |
| மொழி | - தூவலூவன், ஆங்கிலம் |
| எழுத்தறிவு | - 96% |
| சமயம் | - கிறிஸ்தவம் |
| நாணயம் | - அவுஸ்திரேலிய டொலர் |
| தனிநபர் வருமானம் | - 500 டொலர். |

**அமைவிடம்:**

மேற்கு பசிபிக் கடலில் பரவலாக அமைந்துள்ள ஒன்பது சிறு தீவுகளடங்கியது தூவலு. இது முன்னர் எல்லிஸ் தீவுகள் என்று அழைக்கப்பட்டது. இது ஃபிஜிக்கு வடக்கிலும், சொலமன் தீவுகளுக்குக் கிழக்கிலும் அமைந்துள்ளது.

**வரலாறு:**


முன்னர் பிரிட்டிஷ் கொலனியாக இருந்தது. 1978ல் சுதந்திரமடைந்தது. பாராளுமன்றத்திற்குத் தேர்வு செய்யப்படும் 12 உறுப்பினர்களில் இருந்து பிரதமரும், நான்கு அமைச்சர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர். பிரிட்டிஷ் மகாராணியின் பிரதிநிதியே கவர்னர் ஜெனரல்.



**பொருளாதாரம்:**

வளம் குறைந்த நிலமாகையால் தென்னை மட்டுமே பயிரிடப்படுகிறது. தேங்காய் முக்கிய ஏற்றுமதிப் பொருள். பிறநாடுகளில் பணிபுரிவோர் அனுப்பும் பணம் முக்கிய வருமான மூலமாகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.04.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 189
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 187

பரிசுக்குரியவர்:
செல்வி எஸ்.அருந்ததி,
கல்பிட்டி வீதி, புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பாத்திமா முபாசா,<br>பாத்திமா முஸ்லிம் பெண்கள் பாடசாலை, கொழும்பு-12. | சி.நவராஜ்,<br>சென்ஜோன் பொஸ்கோ பாடசாலை, ஹட்டன். |
| எஸ்.ரதீஸ்குமார்,<br>புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | இர்ஷான் இர்பான்,<br>சாஹிரா கல்லூரி, கொழும்பு-10. |
| ஏ.நிறோஷினி,<br>நல்லாயன் கல்லூரி, கொழும்பு-13. | தவராஜா ராஜாஜீ,<br>கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்தியாலயம். |
| செல்வி ஹேமதர்ஷி ஜெயராஜ்,<br>கல்லடி, மட்டக்களப்பு. | எம்.சர்ஹான்,<br>நேகம, கம்பஹா. |
| எஸ்.மின்னா,<br>சென்னல் கிராமம், சம்மாந்துறை. | கயான் குமார,<br>அனுக்கன, குளியாபிட்டிய. |

## யூரி ககாரின்



விண்வெளியில் தாவி முதன் முதலில் பூமியை வலம் வந்து சாதனை படைத்து சரித்திரத்தில் இடம் பிடித்தவர் யூரி அலெக்ஸிவிச் ககாரின். சந்திரமண்டலத்தில் மனிதன் காலடி பதிப்பதற்கு முன் விண்வெளியில் வெகுதூரம் வரை விரைந்து சென்ற முதல் மனிதரும் இவரே! பூமியிலிருந்து 340 கிலோ மீட்டர் உயரத்தில் மணிக்கு 28, 090 கிலோ மீட்டர் வேகத்தில் பறந்து 89.34 நிமிடங்களில் ககாரின் பூமியை ஒரு முறை வலம் வந்து விட்டுப் பத்திரமாகப் பூமியை வந்தடைந்தார். 'முதலாவது விண்வெளிவீரர்' என்ற மதிப்பையும் பெற்றார்.

சோவியத் யூனியனில்-ரஷ்யாவில் யூரி ககாரின் ஒரு கிராமத்தில்-1934ல் பிறந்தார். எந்திரவியலில் நாட்டம் கொண்ட ககாரின், இள வயதிலிருந்தே அத்துறையிலேயே கற்றுத்தேறினார். கடும் உழைப்பாளியான அவர் விமானவியல் பள்ளியில் சேர்ந்து படித்து ரஷ்ய விமானப் படையில் சேர்ந்தார்.

விண்வெளி ஆராய்ச்சியில் 1950ம் ஆண்டுகளின் ஆரம்பத்திலிருந்தே சோவியத் ரஷ்யா தீவிரமான ஆராய்ச்சிகளைச் செய்ய ஆரம்பித்தது. உயிர்கள் எதுவுமற்ற 'ஸ்புட்னிக்' விண்கலங்களை விண்வெளிக்கு ஏவி ரஷ்யா பல பரிசோதனைகளைச் செய்தது. இவை அளித்த வெற்றியின் பயனாக, அண்டவெளி- உயிர்கள்மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதனை ஆராய்ந்தறிய 'லைகா' என்ற பெயருடைய நாயை விண்கலத்தில் வைத்து ஏவியது. இப்பரிசோதனை வெற்றி அளிக்கவே, 1961 ஏப்ரல் 12ம் திகதி காலை 9.07க்கு 'வொஸ்டொக்-1' என்ற விண்வெளிக்கலத்தில் யூரி ககாரின் அனுப்பி வைக்கப்பட்டார். பூமியையே விண்ணிலிருந்த வண்ணம் வலம் வந்தார்; பத்திரமாக பூமிக்குத் திரும்பினார்.

இந்தப் பயங்கரமான பயணத்தை மேற்கொள்ள ஆரம்பத்தில் எவருக்கும் மனத் துணிவு ஏற்பட்டிருக்கவில்லை. பல ஆண்டுகள் தீவிரமான பயிற்சிகளை மேற்கொண்ட யூரி ககாரின் இப்பயணத்தில் துணிந்து இறங்கி உலக வரலாற்றில் உன்னதமானதோர் இடத்தைப் பிடித்துக் கொண்டார், விண்வெளி ஆராய்ச்சியில் புதியதோர் அத்தியாயத்தைத் தொடக்கி வைத்த வீரர் ககாரின்; 1968 மார்ச் 27ல் ஒரு விமான விபத்தில் சிக்கி மரணமானார். சாகும் போது இவருக்கு வயது 34 மட்டுமே!

## விசித்திர தவளைகள்

உலகிலேயே மிகவும் பெரியதவளை மேற்கு ஆபிரிக்காவில் உள்ள 'கோலியாத்' தவளைகள் தான். சுமார் 80 சென்டிமீட்டர் நீளம் இருக்கும். இதன் நிறை 30 இறாத்தல். இவற்றின் உணவு என்ன தெரியுமா? எலிகள், பாம்புகள்.



கோலியாத் தவளை சுமார் 1 1/2 மீட்டர் நீளமுள்ள பாம்பைக் கூட விழுங்கி விடும். முதலில் பாம்பின் தலைப்பகுதியை வயிற்றுக்குள் செலுத்திவிடும். அந்தத் தலைப்பகுதி ஜீரணமானதும் மற்றப்பகுதிகளையும் இப்படியே கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கி விடும். அது விழுங்கி முடிக்க 36 மணிநேரம் ஆகிறது:

போர்ணியோவில் உள்ள 'வால்பேஸ்' என்னும் மரத்தவளையின் கால் விரல்களில் இறக்கை போன்ற தோல் அமைப்பு இருக்கின்றது. அதன் உதவியால் அந்தத் தவளை ஒரு மரத்தின் உச்சியில் இருந்து அடுத்த மரத்தின் உச்சிக்குத் தாவிச் சென்று விடும்.

தவளைகளில் மிகச் சிறியது 'டார்வின்' தவளை. அது முழுவளர்ச்சி அடைந்தால் கூட 2 சென்டிமீட்டர் நீளம்தான் இருக்கும்.

அவுஸ்திரேலியாவில் உள்ள 'நீர்த் தவளை' உடலில் நிறைய நீரைச்சேமித்து வைத்துக் கொள்ளக்கூடியது. அவுஸ்திரேலியா ஆதிவாசிகள் நீர் கிடைக்காத காலங்களில் இந்தத் தவளையைப் பிடித்து, பிழிந்து அந்த நீரைப் பருகுகிறார்கள்.


தென் அமெரிக்காவில் 'அம்பு விஷத் தவளைகள்' இருக்கின்றன. அங்கே உள்ள செவ்விந்தியர்கள் இந்தத் தவளையின் அடித்தாடையில் உள்ள விஷத்தை எடுத்து அம்பில் தடவி பிராணிகளைக் கொல்லப் பயன்படுத்துகின்றனர்.

தென் ஆபிரிக்காவில் உள்ள 'காளைத் தவளைகள்' கத்தும்போது ஒரு காளை மாடு கத்துவது போல் இருக்கும்.

'நெருப்பு வயிறுத் தவளை' ஐரோப்பாவில் இருக்கிறது. சுமார் 4 சென்டிமீட்டர் நீளம் இருக்கும். இதன் வயிறு நெருப்பு நிறத்தில் இருக்கும். இது தன் எதிரியைக் கண்டால் அப்படியே மல்லாந்து படுத்து விடும். பார்ப்பதற்கு தவளை மாதிரித் தெரியாது. எதிரி பேசாமல் சென்றுவிடும்.

## பறக்கும் தட்டுக்கள்


பல ஆண்டு காலமாக உலகத்து விஞ்ஞானிகளைக் குழப்பத்தில் ஆழ்த்தி வரும் விஷயம் இது. 1947ல் முதன் முறையாக கெனத் ஆர்னோல்ட் என்ற விமானி, பறக்கும் தட்டுக்களைக் கண்டதாக பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். தேநீர் கோப்பையின் கீழ்ப்பகுதியான ஸோஸரின் வடிவில் அது அமைந்திருந்ததாக அவர் கூறினார்.



இதைத் தொடர்ந்து முதன் முறையாக 'பறக்கும் தட்டுக்கள்' (FLYING SAUCERS) என்னும் வார்த்தையைப் பத்திரிகைகள் பயன்படுத்தின. அன்றிலிருந்து இன்றுவரை பறக்கும் தட்டுக்கள் தொடர்பாக ஏறக்குறைய 70,000 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஆனால் பறக்கும் தட்டுக்கள் இருப்பதை விஞ்ஞானிகள் இன்றுவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# அங்கம் 05






**இதுவரை** பஸ்மய புத்தகக்கடையில் அந்த நோட்டுப் புத்தகம் கிடைக்கிறது. கையெழுத்தில் தனது கதையை எழுதியிருக்கிறாள் காயத்ரி. கதையைப் படித்துவிட்டு வந்து தன்னைக் காப்பாற்றும்படி எழுதியிருக்கிறாள். கதை விரிகிறது.

காயத்ரி-ரத்னா என்பவனை மணக்கிறாள். அவன் வீட்டுக்கு செல்கிறாள். ரத்னாவின் நடவடிக்கைகள் புதிராய் உள்ளன. ரத்னாவின் சகோதரி சரசு விதவை. அவளது செயல்கள் சந்தேகம் தருகின்றன.

வீட்டு சமையற்காரன் மகள் இந்திராவை உடலில் நகைகளை மட்டும் அணிவித்து நிறுத்தியிருக்கிறாள் சரசு. சிகரெட்டால் இந்திராவின் உடலை சுடுகிறான் அவள் தந்தையான சமையற்காரன்.

கதவு இடுக்கு வழியாக அக் காட்சியைக் காண்கிறாள் காயத்ரி. ரத்னாவிடம் தான் கண்டதை காயத்ரி சொல்கிறாள். சரசை வீட்டை விட்டுப் போகச் சொல்கிறான் ரத்னா. **இனி...**

அவள் கையெழுத்து கொஞ்சம் கொஞ்சமாக அவசரம் காண்பித்து மோசமாகும் பக்கங்கள் இனி.

-1-

சரஸுவின் அறையில்தான் அந்தக் குரல்கள் கேட்கின்றன. ரத்னாவின் குரல் கேட்கிறது. முன் ராத்திரி நடந்த நிகழ்ச்சிகளுக்காக சரஸுவைத் திட்டிக் கொண்டிருக்கிறார் என்று எதிர்பார்த்து அருகே செல்கிறேன். எட்டிப்பார்க்கிறேன். நல்ல வேளை, உள்ளே நுழையவில்லை, சரஸு படுக்கையில் உட்கார்ந்திருக்க ரத்னா ஏறக்குறைய அவள் மடியில் படுக்காத குறை. வெறும் அண்டர்வேரை மட்டும் போட்டுக்கொண்டு படுத்திருக்கிறார். இந்திரா ரத்னாவுக்குக் கால் பிடித்து விடுகிறாள். பக்கத்தில் அய்யர் ஒரு கண்ணாடி டம்ளரில் மஞ்சளாக ஏதோ கலந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.

அவர்கள் பேசுவது மெதுவான குரலில்- இருந்தும் தெளிவாகக் கேட்கிறது.

"....ம்ப அடம் பிடிக்கிறாள். என்ன செய்யலாம்? ரத்னா."

"ரத்னா, உனக்கு உடம்பு எல்லாம் இப்படித்தான் மயிர் வளர்ந்திருக்குமா?" -இந்திரா.

"பார்த்ததில்லை? சொல்லு பார்த்ததில்லை?"

"ம்ஹூம்....சத்தியமா நான் கண்ணை மூடிக்கொண்டுவிடுவேன்."

எனக்குத் திடும் திடும் திடும் என்று இதயம் வெடிக்கிறது.

"இன்னும் வேலைபாக்கி இருக்கிறது. இப்போ இவளைத் துரத்தி விட்டால் தொடர்ச்சி போய்விடும்."

"கொஞ்ச நாள் அது சொல்கிறதைக் கேட்க வேண்டும்."

"நாளைக்கே சரஸு வீட்டை விட்டுப் போக வேண்டும் என்று சொல்கிறதே!"

"இந்த வீடு யாருது என்று சொன்னாயா?"

"இல்லை சரஸு."

"ஒரு பெண் வந்து என்னை- என் வீட்டை விட்டு வெளியே போ என்கிறாள். கேட்டுக் கொண்டிருந்துவிட்டு அதட்டுகிறாயா?"

"என்ன சரஸு இது! உனக்குத் தெரியாதா, எல்லாம் விளையாட்டு என்று?"

"அவளைச் செருப்பால் அடிக்க வேண்டும்?

"அடிக்கலாம்."

"எனக்கு முன்னால் அடித்துக் காட்டவேண்டும்."

"நான் அடிக்கிறேனே." இந்திரா.

"காரியம் முடிய வேண்டுமே? எவ்வளவுபணம் விரயமாகிவிடும்!" என்கிறது அய்யர்.

"அதற்காகத்தான் இந்தக் கழிசடையைப் பொறுத்துக் கொண்டிருக்கிறோம்."

"எல்லாவற்றையும் திருப்பிச் செய்ய என்னால் ஆகாது. அதுவும் approval (அங்கீகாரம்) ஆகிவிட்ட பிற்பாடு." அய்யர்.

"நான் வருகிறேனே! காயத்ரிக்குப் பதில்."

"ஷட் அப். உன்னைப் பார்த்துப் பார்த்து அலுத்துவிட்டது கறுப்பு நாயே!"

தக்கத்தை, தையத்தை என்று இரண்டு பரதநாட்டிய முத்திரைகள் செய்து விட்டு இந்திரா சிரிக்கிறாள்.

"நான் சொல்றதைக் கேள் ரத்னா. கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்து விட வேண்டியதுதான்." என்கிறாள் சரஸு.

"செத்துக் கித்து விடப்போகிறது. ஒன்று கிடக்க ஒன்று ஆகிவிடப் போகிறது. நிர்மலா மாதிரி!"

"ரொம்பக் குறைவாக ஆரம்பித்துப் பார்க்கலாம். என்ன அய்யர்?"

"சரி, நாளைக் காலை ஆரம்பித்து விடுகிறேன்."

"கதவுப் பக்கம் ஓசை கேட்கிறது, கொஞ்சம் இரு!"

நான் பறந்தடித்துக்கொண்டு ஓடிவந்து படுக்கையில் விழுகிறேன்.

"காயத்ரி! காயத்ரி!" என்று கீழேயிருந்து குரல் கேட்கிறது. மூச்சை அடக்கிக்கொள்கிறேன். பயம் ஒரு சுமைபோல் மார்பு முழுவதும், வயிற்றில், உடம்பில் இறங்கி இருக்கிறது. பாவிகளா! பாவிகளா! இந்த வீட்டில் என்ன நடக்கிறது!

மூச்சு சற்று சமனமானதும் நிதானித்து நான் கண்டதையும் கேட்டதையும் யோசித்துப் பார்க்கிறேன். சில விஷயங்கள் குழம்புகின்றன.

1. இந்தப் பாவிகள் எல்லோரும் ஒரே கட்சி!
2. என்னை என்னவோ செய்து இருக்கிறார்கள். என்னவோ செய்யப் போகிறார்கள். நாளை என்னவோ ஆரம்பிக்கப் போகிறார்கள்.
3. அதற்குள் நான் ஏதாவது செய்தாக வேண்டும். இந்த வீட்டை விட்டு ஒழிய வேண்டும்.

யார் அவர்கள் ராட்சச ஜன்மங்களா? ரத்னா! ரத்னா தான் எனக்கு மிகப் பெரிய அதிர்ச்சி! வீடு உன்னுடையது இல்லையா? சம்பாத்தியம் உன்னுடையது இல்லயா? அவள் உன் அக்காவா? அவள் மடியில் படுத்திருக்கிறாயே! அன்பில்லாத கணவனே! என் அப்பாவை ஏமாற்றினீர்களே! அப்பாவி அப்பா! சரியாக விசாரித்துக் கொண்டு என்னைக் கொடுக்கக்கூடாதா! இப்படி இங்கே கொண்டு தள்ளிவிட்டீர்களே! கணவன், விதவை அக்கா, சமையற்காரர், சமையற்காரர் பெண்... அவர்கள் எல்லாம் பிரத்தியேகமாக என் முன் நடத்தப்படும் நாடகத்தின் பாத்திரங்களா? உண்மையில் அவர்கள் யார்? இவர்களுக்குள் என்ன உறவு கடவுளே எனக்குப் புரியவில்லையே!

-2-

ரத்னா திரும்பி வந்து படுத்து என்னைத் தொட்டுப் பார்க்கிறார். என் உடல் கூசுகிறது. பட்டென்று விளக்கைப் போடுகிறார். கண்களுக்குள் ஊசி குத்துகிறது. "காயத்ரி! காயத்ரி" என்று என்னை உலுக்கி எழுப்புகிறார் ரத்னா. நான் தூக்கத்திலிருந்து கலைந்தது போல் எழுந்திருக்கிறேன். என் நாடகமும் ஆரம்பித்தாகிவிட்டது!

"ஒரே ஒரு வாரம் பொறுத்துக் கொண்டிரு....சரஸு வேறு வீடு பார்த்துக் கொண்டு போய் விடுவாள். அவள் ரொம்ப அழுதாள் என்ன செய்வது? புருஷன் இல்லாதவள்...வயசு நாற்பது கூட ஆகவில்லை. அவளுக்கு உணர்ச்சிகள் கிடையாதா என்ன! நீயும் நானும்தான் இனிமேல் இந்த வீட்டில். ஒரே ஒரு வாரம் பொறுத்துக்கொள் என் கண்ணில்லையா?"

என்னைப் புரட்டி, சட்டையைக் கழற்ற ஆரம்பிக்கிறார். எனக்கு அழுகை பிரவாகமாக வருகிறது. அந்தக் கயவனின் விரல்கள் என்மேல் நடனம் ஆடுகின்றன. நான் விசித்து விசித்து அழுகிறேன். உடம்பை அப்படியே Silk worm (பட்டுப் பூச்சி) போலச் சுருட்டிக் கொள்கிறேன்.

"ரத்னா! என்னை ஒரே ஒரு ராத்திரி தனியாக விட்டுவிடு ப்ளீஸ் ப்ளீஸ்" என்று திரும்பத் திரும்பச் சொல்கிறேன்.....

விட்டு விடுகிறான்.

நான் ஒருத்தி, இவர்கள் நான்கு பேரையும் எப்படிச் சமாளிக்கப் போகிறேன்? எதிரிகளின் நிஜ ரூபம் தெரியவில்லை.

'செத்து கித்து விடப்போகிறது.'

'ரொம்பக் குறைவாக ஆரம்பித்துப் பார்க்கலாம்.'

'அய்யர் கொடுப்பது எதையும் சாப்பிடாதே! இந்த வீட்டை விட்டு வெளியே போகிற வரைக்கும் தண்ணீர் கூடக் குடிப்பதில்லை.'

காயத்ரி ராட்சசர்கள் வீட்டில் வாழ்க்கைப் பட்டு விட்டாள். வஞ்சிக்கப்பட்டு விட்டாள். ஒருநாள் தங்க மாட்டேன். கோயம்புத்தூருக்கு ஓடி விடப்போகிறேன். பொழுது விடிந்ததும், என்று தூங்காமல், தூங்காமல், தூங்காமல் வெளிச்சம் வரக் காத்திருந்தேன்.

என் உடம்பெல்லாம் Criss Cross (குறுக்கு நெடுக்காக) ஆக சன்னமான ஊசிகள் ஜாக்கிரதையாகக் குத்திக் கொண்டிருக்கிறாள் சரஸு. "இதுதான் கடைசி ஊசி, வைர ஊசி வலிக்கவே வலிக்காது. இதை எங்கே குத்தப் போகிறேன் தெரியுமா? எழுந்து நில்!"

"வேண்டாம் வேண்டாம்" என்று மௌனமாக அலறுகிறேன். விழித்துக் கொண்டேன். எதிரே அய்யர் மிகவும் பவ்யமாக காத்திருக்கிறார். "காப்பி சாப்பிடுங்க. சின்னம்மா!" என்றார். எவ்வளவு சாந்தம்! எவ்வளவு வேலைக்காரத்தனம்! மேஜையைத் தன் துண்டால் துடைத்து ஆவி பறக்க அதை ஆற்றி.....உயர்தரமான நடிகர்கள்.

"வைத்துவிட்டுப் போங்கோ அய்யர். நான் சாப்பிட்டுக் கொள்கிறேன்."

"ஆறிப் போயிடுத்து...."

"பரவாயில்லை. பல்தேய்ச்சுட்டு சாப்பிடுகிறேன்."

"அப்ப இருக்கட்டுமா?"

"வேண்டாம், போகலாம்!"

"உங்க இஷ்டம்."

காப்பியை Sink (பாத்திரங்கள் கழுவுமிடம்) கொட்டினேன். மூஞ்சியை அலம்பிக் கொண்டேன். புடவையை மாற்றிக் கொண்டேன். என் பர்ஸில் நாற்பது ரூபாய் பணம் இருந்தது. அதை எடுத்து மார்பில் செருகிக் கொண்டேன். பேனா ஒன்று குத்திக் கொண்டேன். கிளம்பினேன். ரத்னா இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான்.

அய்யர் சப்தம் சமையலறையில் கேட்டது! மரப்படியில் மெல்ல நிதானமாக இறங்கினேன். அவர்கள் எல்லோரும் ஒன்பது மணிவரை தூங்குவார்கள். காலைப் பட்சிகள் மட்டும்தான் சப்தம். மெதுவாக மர நிழல்களில் ஒதுங்கி ஒதுங்கி அந்த வட்டவடிவமான பாதையைத் தாண்டி வாசல் கேட்டுக்கு வந்துவிட்டேன். கூர்க்கா நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்துச் சிரித்தேன். நீ கூட உண்டா?

"மேம் ஸாக் இத்னி ஜல்தி?"

"சும்மா வாக் போகிறேன்!" என்றேன்.

தெருக்கோடி வரை மெதுவாக நடந்தேன். முதலில் அப்பாவுக்கு டெலிஃபோன் செய்ய வேண்டும். இல்லை, தந்தி அடித்து விட வேண்டும். டெலிகிராப் ஆபீஸ் எங்கே இருக்கிறது? ஏதோ ஒரு இடத்தில் இருபத்து நாலு மணிநேரமும் திறந்திருக்குமே! எங்கே அது?

அதுவரை நடந்தே சென்றிராத அந்தத் தெருக்கள் எல்லாம் எனக்கு Strange (புதுமையாக) ஆக இருக்கிறது. யாரையோ விசாரிக்கிறேன். தந்தி ஆபீஸ் எங்கே என்று! தந்தி ஆபீஸில் அந்த ஆள் உள்ளேயிருந்து வர, தந்தி பாரம் கேட்டு அதை வாங்கி அதில் எழுத ஆரம்பிப்பதற்கும் வாசலில் கார் கதவு சாத்தப்படுவதற்கும் சரியாக இருந்தது. பைஜாமாவைப் போட்டுக் கொண்டு ரத்னா! "கூர்க்கா சொன்னான் எங்கேயோ அவசரமாகப் போனாய் என்று. எனக்குக் கவலையாகிவிட்டது. என்ன? தந்தி? யாருக்கு?"

"அப்பாவுக்கு."

"எதற்கு? இப்படிக் கொடு. தந்தி வேண்டாம். டிரங்கால் போட்டுப் பேசலாம்."

"எனக்கு உடனே அப்பாவை வரவழைத்தாக வேண்டும்...!"

"வரவழைத்தால் போயிற்று. சின்ன விஷயத்துக்கெல்லாம் பெரியவரை டிஸ்டர்ப் பண்ண வேண்டுமா? நீ முதலில் வீட்டுக்கு வா. அப்புறம் பேசிக் கொள்ளலாம்."

ரத்னாவின் கை என் மேல் அழுத்தமாகப் பற்றியிருந்தது. தந்தி கிளார்க் என்னை ஒரு மாதிரியாகப் பார்க்க "ஒன்றுமில்லை சின்ன மனஸ்தாபம்," என்கிறான். என்னை ஏறக் குறைய இழுத்துக் கொண்டு பலி ஆடுபோல் செல்கிறேன்.

-3-

இந்த வீடு எப்படிப்பட்ட சிறை என்பதை இப்போதுதான் உணர்ந்து கொள்கிறேன். கருங்கல் சுவர் கண்ணாடி பதித்த காம்பவுண்டுச் சுவரை என் போலப் பெண்கள் எகிறிக் குதிக்க முடியாது. வாசல் கதவு வழியாகத் தான் செல்ல வேண்டும். எப்போதும் கூர்க்கா நிற்கிறான். விசுவாசமாக உடனே ரிப்போர்ட் செய்து விடுவான். உடனே காரை எடுத்துக் கொண்டு டிரைவரோ, இல்லை ரத்னாவோ வந்து விடுவார்கள். என்னால் இந்த வாசல் வழியாகத் தப்பிக்க முடியாது. இரண்டு நாளாக, ரத்னா வீட்டிலேயே இருக்கிறான்.



## நவீன எழுத்துலக வேந்தன் — சுஜாதா

"ரத்னா உனக்கு ஆபீஸ் கிடையாதா?"

"ஆபீஸ் கிடக்கிறது. உன்னுடனேயே இருக்கப்போகிறேன். உன் மனசு ரொம்பக் கலங்கி இருக்கிறது அல்லவா?"

இரண்டு நாட்களாக கோயமுத்தூருக்கு டிரங்க்கால் STD (வெளியூர் தொலைபேசி அழைப்பு) அடிக்கிறார் Line (தொலைபேசி அழைப்பு) கிடைக்கவே இல்லையாம். பொய்!

இருந்தும் இவர்கள் சந்தேகப்படும் படியாக நான் நடந்து கொள்ளக்கூடாது. இவர்கள் அசந்திருக்கும் சமயம் தான் என்னால் தப்பிக்க முடியும். நாள் முழுவதும் வாசல் கேட்டைக் கண்காணிக்க வேண்டும். ஒரு பத்து நிமிடமாவது கூர்க்கா டீ குடிக்கப் போகமாட்டானா? நாள் முழுவதும் என் ரூம் ஜன்னலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.

மத்தியானம் இரண்டு மணி சுமாருக்கு அவன் அந்தக் கூண்டை விட்டு விலக மெதுவாகத் தெருவில் நடந்து செல்வது தெரிந்தது. அதுதான் சமயம் என்று மொட்டை மாடிக்குச் சென்று பின் பக்கத்து இரும்புப்படி வழியாக இறங்கி ஏறக்குறைய வாசல் பக்கம் வந்து விட்டேன். பாழாய் போகிற கூர்க்கா பீடி பற்ற வைத்துக் கொண்டு திரும்பி வேகமாக வந்து கொண்டிருந்தான். அந்த இடத்திலேயே அடுத்து சந்தர்ப்பம் வரும் வரை மறைந்திருக்கத் தீர்மானித்து ஓரத்தில் அவுட் ஹவுஸின் பின்னால் போய் ஒளிந்து கொண்டேன். வந்ததிலிருந்து இந்த அவுட் ஹவுஸை உள்ளே போய்ப் பார்த்ததில்லை. இதில்தான் அய்யரும் அந்தப் பெண்ணும் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அவுட் ஹவுஸ் குப்பையாக இருந்தது. நீளமாக ஓடு போட்டு மூன்று ரூம்கள் இருக்கும். அதில் ஒன்றின் வாசலில் கோலம் போட்டிருந்தது. ஒன்று பூட்டியிருந்தது. அந்த ரூமில் எட்டிப் பார்த்தேன். என் ரத்தம் உறைந்தது. ஒரு பெண் தரையில் உட்கார்ந்திருந்தாள். தலையில் அப்படிப்பட்ட தூசி. ரவிக்கை புடவை எல்லாம் கிழிந்திருந்தது. பக்கத்தில் ஒரு அலுமினியத் தட்டு வைத்திருந்தது. எனக்கு அதெல்லாம் அதிர்ச்சி தரவில்லை. சுவர் எல்லாம் கரித் துண்டில் குழந்தை எழுத்துக்களில், 'நிர்மலா ராஜரத்தினம், நிர்மலா ராஜரத்தினம்' என்று எழுதியிருந்தது!

நிர்மலா! அந்தப் பேரை எங்கே கேட்டிருக்கேன்? ஆம், அன்று இரவு பேசிக் கொண்டிருந்தார்களே!

"ஒன்று கிடக்க ஒன்று ஆகிவிடப் போகிறது, நிர்மலா மாதிரி".

நிர்மலா ராஜா.

என் சகல சக்திகளும் இழந்து அப்படியே அங்கேயே இடிந்து உட்கார்ந்து விட்டேன்!

கடவுளே! இந்த இடத்திலிருந்து எப்படித் தப்பிக்க போகிறேன்!

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கே.மோகன்ராஜ்.
வயது: 18
முகவரி: 26, கல்லூரி வீதி, திரு மலை.
பொழுது போக்கு: கிரிக்கெட், பாடல்கள்.



பெயர்: எம்.ரஜப்தீன்.
வயது: 20
முகவரி: 189/1, மருதானை, பேருவளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: ஏ.பாலன்.
வயது: 32
முகவரி: P.O.BOX-30291, AL-BIDAH, DOHA, QATAR.
பொழுது போக்கு: நண்பர் தொடர்பு, பத்திரிகை.



பெயர்: ஏ.இல்யாஸ்.
வயது: 28
முகவரி: 251,ஹெந் தனிய, பேராதனை.
பொழுது போக்கு: நண்பர் தொடர்பு.



பெயர்: எஸ்.மீரா.
வயது: 21
முகவரி: P.O.BOX-63, KAFARCIMA, BEYRUT, LEBANON.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.



பெயர்: ஏ.அப்துல் ஹமீத்.
வயது: 25
முகவரி: P.O.BOX - 7681, RIYADH - 11472, K.S.A.
பொழுதுபோக்கு: கிரிக்கெட்.

பெயர்: ஆர்.இத்ரிஸ்.
வயது: 19
முகவரி: பாலநகர், மூதூர்.
பொழுதுபோக்கு: உதைபந்து, பேனாநட்பு.

பெயர்: எஸ்.ரகு.
வயது: 25
முகவரி: REUSSGASSE-14, 5620 BREMGARTEN, SWITZERLAND.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எஸ்.திலகேஸ்வரன்.
வயது: 19
முகவரி: 71,பிரதான வீதி, லுணுகலை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ரி.சுரேஷ்.
வயது: 23
முகவரி: 273, பசறை வீதி, பதுளை.
பொழுது போக்கு: வானொலி.

பெயர்: எம்.அனிஸ்.
வயது: 22
முகவரி: 54.ஏ.பி.எச்.லேன், காத்தான்குடி-6.
பொழுது போக்கு: வானொலி.

பெயர்: எம். நாஸர்.
வயது: 20
முகவரி: 373/பி, அல்-ஹிலால் வீதி, சாய்ந்தமருது-11, கல்முனை.
பொழுது போக்கு: பத்திரிகை, நாவல்.

# கனவு மெய்ப்பட வேண்டும்

புதுமைத் தொடர்

அத்தியாயம் 07

தமிழகத்தின் புதுமை எழுத்தாளர் பிரபஞ்சன் படைத்த சிறந்த கதைகளில் ஒரு முத்து இது! பெண் என்பவள் வெறும் ஜடமல்ல உணர்ச்சிகள் உள்ள மனுஷி என்பதை உணர்வுபூர்வமாக— அற்புதமான நடையில் தரும் படைப்பு இது!

பிரபஞ்சன்

**இதுவரை**

**சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்துவைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப்பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்து சேர்கிறாள். கணேஷனும் தேடி வருகிறான். கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள். உயிர்த் தோழி கல்பனாவிடம் வந்து சேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள். சுமதி பழையதை நினைக்கிறாள்.**

**இனி.....**

"உங்கள் குடும்பத்துக்கு அவர் உதவியாய் இல்லையா?"

"எதற்கு இருக்க வேண்டும்? நான் உழைக்கிறேன், சம்பாதிக்கிறேன். அம்மாவும் சம்பாதிக்கிறார். அப்புறம் என்ன? அவர் குடும்பத்துக்கு அவர் சம்பாதித்தால் போதாதா? சுமதி, உறவுகளோடு நாம் பிறந்தாலும், இருந்தாலும், நம் பாட்டை நாம்தானே பார்த்துக் கொள்ள வேண்டும். வாயும், வயிறும், வேறு வேறு என்பார்களே, அதன் அர்த்தம் இதுதான்..!"

"ரொம்ப ஆரோக்கியமாக இருக்கிறீர்கள்!" என்றாள் சுமதி.

வசந்தி சிரித்தாள். அதற்குள், சுவரில் இருந்த சிவப்பு விளக்கு எரிந்து, மணியும் அழைத்தது.

"இருங்கள். பேஷண்ட் அழைக்கிறார்" என்று கூறி விட்டு வசந்தி எழுந்து போனாள். சுமதியும், கணேசன் இருந்த அறைக்குத் திரும்பினாள். அவன் தூங்கி எழுந்திருந்தான்.

"எங்கே போய்வீட்டீர்கள்?"

சொன்னாள்.

"வந்த இடத்தில் ஒரு சிநேகிதியைப் பிடித்து விட்டீர்கள். நீங்கள் முயற்சிக்கவே வேண்டாம்-உங்களுடன் கைகுலுக்க, தாமாகவே கைகள் உங்களை நோக்கி நீளும்...."

"அது ஏன் அப்படி?"

"அது அப்படித்தான். சில விஷயங்கள் எந்தக் காரணமும் இன்றி மனிதர்களை ஈர்க்கும். பூவாகப் பூத்து, பழமாகப் பழுத்த குழந்தையைக் கைநீட்டி வாங்கிக் கொள்ளாதவர் யார்? நிலாவை வேண்டாம் என்று வெறுப்பவர்கள் யார்? அது மாதிரி.."

"அது மாதிரி.."

"உங்களைப் போன்ற நிதானமான, பனிமாதிரி அமர்ந்த குரலில் பேசுகிற, திட்டமும், தீர்மானமுமான அளவாகக் காரியமாற்றுகிற பெண்ணிடம் பேச விருப்பம் இல்லாதவர்கள் யாரும் இருக்க முடியாதே!"

கல்யாண வாசலில் யாரும் எதிர்பார்க்காத தருணத்தில் மேல் வந்து சிதறும் பன்னீர் தெளிப்பு மாதிரி, ஒரு கணம் மனம் துள்ளியது சுமதிக்கு. அந்தப் பரவசம் முகத்தில் அதிகம் தெரியா வண்ணம் மிக ஜாக்கிரதையாக மறைத்து, அவள் சொன்னாள்.

"ஏதேது... ஜுரம் அடிப்பது கூட நல்லதைத் தரும் போலிருக்கே!"

"நல்லதையா?"

"நன்றாகப் பேச்சு வந்து விடுகிறதே கவி மாதிரி எனக்குப் பேச வராது. ஜுரம் வந்து, நாலு நாள் இந்த மாதிரி ஆஸ்பத்திரியில் இருந்தால், நானும் உங்களைப் போல பேசுவேனோ, என்னவோ!"

கணேசன் அவள் சொன்னதை ரசித்துச் சிரித்தான்.

நோயாளிகளுக்கான இரவு உணவை ஒரு வண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டு வெள்ளுடை அணிந்த ஏவலர் ஒருவர் வந்தார். உடன் வசந்தியும் அறைக்குள் நுழைந்தாள்.

கணேசனைப் பார்த்து 'ஹலோ சார்' என்றவள், தொடர்ந்து, "நீங்கள் சீக்கிரமாகவே குணமாகிவிட்டீர்கள் சார். அதிகம் போனால், இன்னும் இரண்டு நாட்கள் மாத்திரமே நீங்கள் இருக்க வேண்டியிருக்கும்."

வசந்தி திரும்பி, சுமதியைப் பார்த்துச் சொன்னாள்.

"சுமதி. உங்களுக்குச் சாப்பாடு? நீங்கள் ஒன்றும் சாப்பிட்டிருக்க மாட்டீர்கள்! கணேசன், அவர் உணவைச் சாப்பிடட்டும், நாம் இருவரும் கேண்டீனில் சாப்பிடுவோம் என்ன?"

சுமதி, அந்த மருத்துவமனைக்கு, மதியம் வந்தவள், வாட்சைப் பார்த்தாள். மணி ஏழரை ஆக இருந்தது. சுமார் ஏழுமணி நேரம், அவள் அங்கு இருந்திருக்கிறாள். மனத்துப் பரபரப்பு காரணமாக, வேறு ஒன்றுமே அவள் சாப்பிட்டிருக்கவில்லை. இதற்குள் இரண்டு டீயும் ஒரு காபியும் சாப்பிட்டிருப்பாள், அலுவலகத்தில் இருந்தால். வசந்திக்கு அவள் உணவைக் குறித்து ஏற்பட்ட பரிவு, கணேசனுக்கு ஏன் ஏற்படவில்லை என்று லேசான வருத்தம் கூட சுமதிக்கு ஏற்பட்டது.

கணேசனை உணவருந்தச் சொல்லி விட்டு, சுமதியும், வசந்தியும் கேண்டீனுக்குச் சென்றார்கள்.

"நீங்கள் தினம் கேண்டீனில்தான் சாப்பிடுகிறீர்களா?"

"இல்லீங்க, வீட்டிலே இருந்து சாப்பாடு கொண்டு வந்து விடுவேன். இன்னிக்கு எங்க வீட்டுக்கு நிறைய விருந்தினர்கள். அவங்களுக்காக மீன் சமைச்சோம். மீனை எடுத்துக்கிட்டு, ஆஸ்பத்திரிக்கு வர வேண்டாம்னுதான் கொண்டு வரலை. இரவுக்கு புதுசா சமைக்க நேரம் இல்லை. என்னோட நண்பர் ஒருத்தர் மாலை வந்துட்டார். சாப்பிட்டுக் கொண்டிருக்கிறபோது, டாக்டர்களிடமிருந்தோ, நோயாளிகளிடமிருந்தோ அழைப்பு வந்து விடும். கையைக் கழுவிக் கொண்டு போனாலும் மீன் வாசனை வந்து விடும். நம் வாசனையை பிறர் மூக்குக்கு எட்ட வைப்பது அநாகரீகம் அல்லவா?"

சுமதியை மறுத்துவிட்டு, வசந்தியே உணவுச் ன பணத்தைச் செலுத்தினாள்.

நர்ஸ்களின் அறைக்குத் திரும்பினார்கள்.

"படுக்கை கொண்டு வந்திருக்கிறீர்களா?"

"இல்லை. அவசரமாகப் புறப்பட்டு வந்துவிட்டேன்."

"கவலை வேண்டாம். என்னுடைய படுக்கை இருக்கிறது தருகிறேன்."

"உங்களுக்கு?"

"நான் படுக்கை போட்டுத் தூங்க முடியாது. சும்மா இருக்கட்டும் என்று ஒரு செட் படுக்கையை கைவசம் வைத்திருப்போம். அவ்வளவுதான்..."

படுக்கை விரிப்பும், எண்ணெய்க் கறை, மற்றும் அழுக்கோ, துர்நாற்றமோ இல்லாத வெள்ளை வெளேரென்ற உறையிட்ட தலையணை ஒன்றையும் தந்தாள் வசந்தி.

ஒருவர் மட்டுமே இருக்கத்தக்க அந்த அறையில் இருவர் தங்குவது அசௌகர்யம் தான். இருந்தும், கட்டிலுக்குக் கீழே, தரையில் படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டாள் சுமதி. புது இடம் எனவே உறக்கம் வரச் சற்று சிரமமாகத்தான் உணர்ந்தாள். ஒரு அன்னியன் சற்றுத் தூரத்தில் படுத்திருக்கத் தான் அருகாகப் படுத்திருப்பது புதிது. எனினும், கணேசன் தனக்கு அந்நியனா என்கிற கேள்வியைத் தனக்குள் எழுப்பிக் கொண்டாள். மனம் முழுக்க இல்லை, இல்லையென்ற பதிலே கிடைத்தது. புதிதாக ஏற்பட்டிருக்கும் இந்தச் சொந்தத்தை நினைத்தவாறே உறங்க முனைந்தாள். அப்பாவுக்குத் தெரியவந்தால், என்ன நினைப்பார் என்று இருந்தது. அவரிடம் பொய் சொல்ல நேர்ந்தமைக்காக மிகவும் வருந்தினாள். சீக்கிரம் அவரிடம் சொல்லி மன்னிப்புக்கேட்க வேண்டும் என்று மனசுக்குள் முடிச்சிட்டுக் கொண்டாள்.

மறுநாள் வைகறையில், மருத்துவமனையின் மரங்களை அண்டி வாழ்ந்திருந்த புள்ளினங்களின் குரலோசை கேட்டே கண் விழித்தாள். எழுந்து, அறைக்கு வெளியே வந்து மாடி கைப்பிடிச்சுவரைப் பிடித்தபடி வெளியே பார்த்தாள். கார்களின் தலைப்புறமும், வருவோர் போவோரும் தெரிந்தார்கள். வெயிலற்ற இளங்காலை மிக அழகாக இருந்தது. கணேசன் உறங்கிக் கொண்டிருந்தான். அவன் அருகில், கப்போர்டில் இருந்த பிளாஸ்கை எடுத்துக் கொண்டு, அவனுக்கு காபி வாங்கிவர நினைத்தாள். பிளாஸ்க்கை எடுத்துக்கொண்டு நர்ஸின் அறையைக் கடக்கையில், வசந்தியையும் அழைத்துக் கொண்டு போகலாம் என்று விரும்பினாள். வசந்தி, மேசையின் மேல், கைகளைக் குறுக்காக வைத்துக்கொண்டு, அவைகளின் மேல் தலையைச் சாய்த்து வைத்துக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தாள். அவளை எழுப்பலாமா கூடாதா என யோசித்துக் கொண்டு நின்றாள் சுமதி. இரவு முழுக்க கண்விழித்து பின் உறங்குபவளை எழுப்புவது பாவம் என்றுகூட அவள் நினைத்தாள். வசந்தியின் தோளைத் தட்டக்கையை அவள் தோள் அருகில் எடுத்துச் சென்றவள், தயங்கிக் கையைப் பின்வாங்கிக் கொண்டாள். மனிதர்க்குச் சூட்சும உணர்வு உண்டு. தன் அருகில் நிழலாடியதை உணர்ந்து, வசந்தியே திடுக்கிட்டு எழுந்து கொண்டாள். சுமதியைப் பார்த்து "குட்மார்னிங்" சொன்னாள்.

"சாரி! உங்களை எழுப்பிவிட்டேன்!"

"எழும் நேரம்தான். உறங்கினால் அல்லவா, எழுவதற்கு? சற்று நேரத்துக்கு முன்தான் கண்ணை மூடினேன். காபிக்கா! இருங்கள். நானும் வருகிறேன்."

அங்கிருந்த வாஷ் பேசினில், வாயைக் கொப்பளித்து விட்டு வசந்தி சுமதியுடன் கிளம்பினாள்.

வசந்திக்குக் காலை எட்டு மணி வரைக்கும் தான் பணிநேரம். இன்னும் இரண்டு மணி நேரம் மட்டுமே அவள் இருப்பாள், மீண்டும் மாலைதான் மருத்துவமனை திரும்புவாள்.

"சுமதி, நீங்கள் வீட்டுக்குப் போய்க் குளித்துவிட்டு வர வேண்டியிருக்குமா?"

சுமதி யோசிக்க வேண்டியிருந்தது. வீட்டுக்குச் செல்வது சாத்தியப்படாது. அதற்குள் கோவைக்குச் சென்று மீண்டது எப்படி என்று அப்பா கேட்பார். பொய், தேவை அற்ற நேரத்தில் வெளிப்பட்டு, ரசா பாசம் ஆகும். ஆனாலும் குளித்துத் துணி மாற்றவும் வேண்டும்.

"ஒன்று செய்யுங்களேன்... என்னுடன் என் வீட்டுக்கு வாருங்களேன். எங்கள் வீட்டிலேயே குளித்து விடலாம். நீங்கள் காலை உணவையும் அங்கேயே முடித்து விடலாம்..."

பதில் சொல்லவில்லை, சுமதி. அவள் மௌனத்தையே தனக்குச் சாதகமான பதிலாக எடுத்துக் கொண்டாள் வசந்தி. அவர்கள் திரும்புகையில், ரிஸப்ஷனைக் கடந்துதான் அவர்கள் தங்கள் இருப்பிடத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது.

"என்னம்மா, சுமதி. எங்கே இப்படி?" என்று ஒரு குரல்.

சுமதி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அப்பா, ரிஸப்ஷனில் அமர்ந்திருந்தார்.

அப்பாவை மருத்துவமனையில் பார்த்ததும், அவருக்குத்தான் உடம்புக்கு வந்து விட்டதோ எனப் பயந்தாள் சுமதி. அது இல்லையெனத் தெரிந்ததும், அடுத்தபடியாக அவளுக்கு ஏற்பட்டது பயம். பயம் அவமானத்தைத் தந்தது. பொய், மனிதர்களின் ஆயுளைக் குறைக்கும். சந்தோஷத்தைக் குலைக்கும்.

அப்பா, அவள் முகத்தை இன்னும் ஆச்சரியமாகவே பார்த்துக் கொண்டிருந்தார். அவரே சொன்னார். அவர் நண்பரும், அடுத்த தெருக்காரரும் ஆன நமசிவாயம் மாமாவுக்குத் திடீரென்று ஏற்பட்ட நெஞ்சு வலி காரணமாக அவரை மருத்துவமனையில் சேர்ப்பிக்கத்தான் வந்ததாகக் கூறினார் அவர்.

"அப்பா... ஒரு அஞ்சு நிமிஷம் இருங்கள். இந்தக் காபியைக் கொடுத்து விட்டு வந்துவிடுகிறேன். உங்களிடம் பேச வேண்டியிருக்கு."

"பொறுமையா வா. எனக்கொரு வேலையும் இல்லை. வீட்டுக்குத்தான் போகணும்...."

கணேசன் விழித்திருந்தான். சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தான்.

"கணேசன்! காபியைச் சாப்பிடுங்கள், பலகாரம் சாப்பிட்டு விட்டு இருங்கள். அப்பா வந்திருக்கிறார். அவருடன் பேச வேண்டியிருக்கிறது. பேசிவிட்டு, வீட்டுக்குப் போய்க் குளித்து உடை மாற்றிக் கொண்டு உங்களுக்கு மத்தியானம் உணவு எடுத்துக் கொண்டு வந்துவிடுகிறேன்... வரட்டுமா?"

"நிச்சயம் வருவீர்கள், அல்லவா? வராமல் இருந்து விடாதீர்கள்!"

**(தொடர்ந்து வரும்)**





# "இனியெல்லாம் சோகமே...."



கமலினி நடராஜா – கோட்டைக்கல்லாறு

__இன்று:__

*"ஈழத்துப் போர் ஓய்ந்து தேன்முல்லைப் பூப்பூத்து நீ சூடத்தர வேண்டுமே...."* - பொங்கும் பூம்புனல் வழியாக வந்த உன்னி கிருஷ்ணனின் அமைதியான, ஆழமான குரலை இரசிக்க மனமின்றி சட்டென்று வானொலியை நிறுத்துகிறாள் ஸ்வேதா.

"அம்மா ஸ்கூலுக்குப் போயிட்டு வரட்டே...டாட்டா"- புத்தகப் பையை முதுகில் அழுத்தவிட்டு புறப்படுவதற்கு ஆயத்தமாய் அருகில் வந்து நின்ற மகன் விதுவை அணைத்து உச்சியில் இதழ்பொருத்துகையில், அவளையறியாமல் இரு சொட்டுக் கண்ணீர் விதுவின் பிஞ்சுக் கரங்களில் பட்டுச்சிதற நிமிர்ந்தவன்- "ஏம்மா அழுறீங்க?"-கேட்டுவிட்டு அவள் பதிலுக்காய் காத்திருக்க-

"ஒண்டுமில்ல விது. கண்ணுல தூசி விழுந்துட்டுது....அதான்"- இவள் மழுப்பலாய்ச் சொன்ன பொய்யை மெய்யென்று நம்பி அவள் கன்னத்தில் செல்லமாய் ஒரு 'இச்' பதித்துவிட்டுத் துள்ளியோடிய விதுவைப் பார்க்க முடியாமல் கண்களைத் திரை போட்டு மறைத்தது கண்ணீர்.

★-★-★

__நேற்று:__

எண்பத்தியேழாம் வருஷம். இனிய ஏப்ரல் மாதத்தின் ஒரு பொன் மாலைப் பொழுது.

"ஹாய் ஸ்வேதா!"- யாழ் மருத்துவபீடத்திலிருந்து இளம் வைத்தியனாய் வெளியேறி, ஸ்டெதஸ்கோப்பும், கையுமாய், கண்களில் சிரிப்போடு, அழகாய்- உயரமாய்- கம்பீரமாய் வந்து நின்ற காதலனை- நவீனனை கண்கொட்டாது பெருமையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஸ்வேதா.

"ஏய் மண்டு...! இதென்னது பேயறைஞ்ச மாதிரி என்னையே பார்த்துக் கொண்டிருக்கிற?"

"......."

"என்ன...மௌனவிரதமா?"

"ஆமா!"

"அதெப்படி ஆமான்னு பதில் சொல்லிப் போட்டு மௌனவிரதம் இருக்கமுடியும்?" நவீனன் சொல்ல, தன்னை மறந்து சிரித்த ஸ்வேதாவை அள்ளி கட்டிலில் கிடத்தி- "நீதான் எண்ட முதல் பேஷன்ட்"- கண்டிப்பாய் கூறி, வெகு சீரியஸாய் ஸ்டெதஸ்கோப்பை வைத்துப் பார்த்து, "என்ன ஸ்வேதா... உன்ட இதயம் 'லப்-டப்' என்கிறதுக்குப் பதிலா "நவீன்-நவீன்" எண்டு துடிக்குதே?"- கிண்டலாய் மொழிந்து- "இதுக்கு என்ன மருந்து தெரியுமா?...கெதியில எங்களின்ர கலியாணம் நடக்கிறதுதான்!"- புன்னகையோடு கூறி அவள் கரம்பற்ற சிலிர்த்து, அந்த வலிய கரங்களின் அன்புப்பிடியிலேயே காலம் முழுவதும் கரையப் போகும் மகிழ்ச்சியில் திளைத்து.... ஆண்டவா! எத்தனை எதிர்பார்ப்புக்கள், கனவுகள், கற்பனைகள்.... அத்தனையும் பின் வரப்போகும் சில மாதங்களிலேயே சிதைந்து விடக்கூடுமென்று அவள் சத்தியமாய் எண்ணியிருக்கவில்லை.

**"ஸ்வேதா எனக்கு யாழ்ப்பாண ஹொஸ்பிட்டலுக்கு ஓர்டர் வந்திருக்கு" என்றவன் தன் முடிவில் உறதியாய் இருந்தான்.**

★-★-★

"ஸ்வேதா- எனக்கு யாழ்ப்பாணம் ஹொஸ்பிட்டலுக்கு ஓர்டர் வந்திருக்கு!"- என்ற தகவலோடு வந்த நவீனன் அவள் எவ்வளவு தடுத்தும் கேளாமல், தன்முடிவில் உறுதியாயிருந்தான். "பிறந்த நாட்டுக்கும், பிறந்த மண்ணுக்கும் தொண்டு செய்யாதவன் மனிசனே இல்ல எண்டு அடிக்கடி நீதானே சொல்லுவே ஸ்வேதா! இஞ்ச பாரு! நான் பிறந்தது, வளர்ந்தது, படிச்சது...எல்லாமே யாழ்ப்பாணத்தில, அந்த மண்ணில பிறந்த சனங்களின்ற உயிரக்காப்பாத்த வேண்டிய கடமை எனக்கிருக்கு...." இப்படிச் சொல்லிச் சொல்லியே அவளையும் திசை திருப்பி தன்னோடு அழைத்து பிறர் உயிர் காக்க வந்த டாக்டர் நவீனனால் தன்னுயிரைக் காத்துக் கொள்ள முடியாமல் போனது துரதிஷ்டந்தான்.

அக்டோபர் மாதத்தின் கடைசிப் பகுதிகளில் யாழ். மருத்துவமனை வளவுக்குள் இந்திய அமைதிப்படை நடத்திய படு மோசனமான மனித வேட்டையில் சல்லடையாக்கப்பட்ட பலநூறு உடல்களுள் நவீனனும் ஒருவனாய் ஆன சேதி கேட்டபோது விது அவள் வயிற்றில் மூன்று மாத சிசுவாய்....!

திருமணமான கால் ஆண்டுகளிலேயே கணவனை இழந்து- விதவை அந்தஸ்துப் பெற்ற அவள் அன்று துடித்த துடிப்பு.... அனுபவித்த வேதனை.... சோகம்- துயரம்- துன்பம்- தனிமை- வெறுமை- ஆண்டவா! எந்தப் பெண்ணுக்குமே வரக்கூடாது.

★-★-★

__இன்று:__

டொக்....டொக்...டொக்...- கதவில் விழுந்த தட்டல் காதில் ஒலித்து, சிந்தனையைக் கலைக்க விரைந்து சென்று கதவு திறந்தவளுக்கு மஞ்சு ரீச்சரை- விதுவின் வகுப்பாசிரியையைக் கண்டதும் ஏனோ மூளைப் பிரதேசத்தில் பரவிய 'திக்' என்ற உணர்வு முழு உடலையும் ஆக்கிரமிக்க, ரீச்சரை உபசரிக்கக் கூடமறந்து "விது... விதுவுக்கு ஒண்டும் ஆகலயே?"- பரிதவிப்பாய் வினவி, பதில் சொல்லாது கண்கள் கலங்க நின்றிருந்த மஞ்சு ரீச்சரை பலங்கொண்ட மட்டும் உலுக்கி- "என்ட பிள்ளைக்கு என்ன நடந்தது?"- ஆவேசங் கொண்டவளாய் கத்திய ஸ்வேதாவிடம்-

"வந்து....வந்து....பள்ளிக்கூடத்தில இன்ரர்வெல் பீரியட். எல்லாப்பிள்ளைகளும் வெளியில போட்டுதுகள். விது...விதுரன் மட்டும் ஏதோ எழுதிட்டு க்ளாஸ் ரூம்ல இருந்திருக்கான். அந்த நேரம் பார்த்து... ஸ்கூல் கட்டிடம் இடிஞ்சு விழுந்து...அந்த இடத்திலேயே விதுரன் இற...."-ரீச்சர் சொல்லி முடிக்குமுன்-

"விதூ....ஊ....ஊ...."- உள்ளக்குமுறல் கதறலாய் வெளிப்பட பாடசாலை நோக்கி ஓடியவள் புத்தகப்பையுடன் சிதைந்து... சிதிலமாகிக் கிடந்த அருமை மகனை- அவள் வாழ்வின் இலட்சியமாய் இருந்தவனை, அள்ளி அணைத்துக் கதறுகிறாள். அன்புக் கணவன், அருமை மகன் இருவரையும் அகாலமாய்ப் பறி கொடுத்த சோகம் விழிவழியே கண்ணீராய்ச் சொரிய தன்னிலை மறந்து, விறைத்து, சிலையாய் அமர்ந்திருக்கிறாள் ஸ்வேதா.

வெளியே பலத்த மழையொன்றுக்கான கட்டியமாய் வானம் இருண்டு கறுக்க ஆரம்பிக்கிறது, அவள் வாழ்வைப் போலவே!

# தீர்வு

“ஏனக்கா கண்கள் சிவந்திருக்கு?” “இல்லையே, அப்படியில்லையே!” மறைக்க முயன்றாள் மைதிலி.

களுவாஞ்சிக்குடி யோகன்–சுவிஸ்

மைதிலி சந்தோஷமாக இல்லை; அவள் சுவிசுக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தியாகி விட்டது.

இந்த ஒரு வருட கல்யாண வாழ்க்கையில் ஒரு மாதமென்றாலும் அவள் சந்தோஷமாக வாழ்ந்தது கிடையாது.

இருமனம் இணைவதுதான் திருமணம் என்பார்கள். மைதிலியின் விஷயத்தில் மனங்கள் இணையாமல் தான் திருமணம் நிகழ்ந்திருக்கிறது.

‘இந்த நான்கு சுவருக்குள் இப்படியொரு வாழ்க்கை தேவைதானா? இதைவிட உயிரை விடுவதே மேல்!’

என நினைத்தபோது அவளுக்குக் கண்கள் குளமாகி நீரைச் சொரிந்தன. விம்மலுடன் அழுதாள். தன்னிலை உணர்ந்து அழத் தொடங்கினாள் மைதிலி.

அழைப்பு மணி அவளை அழைத்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து சென்று கதவைத் திறந்தாள். கதவருகில் சாத்தி நின்றிருந்தான்.

சாத்தி, மைதிலியின் கணவனான இளங்கோவின் சினேகிதன். அவள் இங்கு வருவதற்கு முன்னால் இளங்கோவும், சாத்தியும் ஒரே வீட்டில் வசித்த உற்ற நண்பர்கள். அவர்களின் கல்யாணத்தின் போது சாத்தி ஒருவன் தான் ஓடியோடி உதவிகள் புரிந்தவன். திருமணம் முடிந்த கையோடு வீடு மாறிக் கொண்டு வேறு இடத்தில் வசிக்கிறான். இப்பொழுது அந்த சாத்தி வாசலில் நின்றிருந்தான்.

“வாங்கோ சாந்தி!” அழைத்தாள்.

அவளை நிமிர்ந்து பார்த்தவன், “ஏனக்கா கண்கள் சிவந்திருக்கு?” கேட்டான்.

“இல்லையே அப்படியில்லையே!” மறைக்க முயன்றாள் மைதிலி.

“நிச்சயமாக எனக்குத் தெரியும்; நான் இங்கு வரும் போதெல்லாம் நீங்கள் குழப்பத்தில் தான் இருக்கிறீர்கள். நான் ஏனென்று கேட்பதும் இல்லை; நீங்கள் சொல்வதும் இல்லை. ஆனால் இன்று கேட்க வேணும் போல் இருக்கிறது. நானும் உங்களுக்கு ஒரு சகோதரன் தான்! என்ன பிரச்சினை சொல்லுங்கோ? முடிந்தால் தீர்த்து வைக்கிறன்!” உருக்கமாகக் கேட்டான் சாத்தி.

அவன் கேட்ட விதம் மைதிலியை உண்மை பேச வைத்தது. “சாத்தி! இதுவரை காலமும் நானும் இளங்கோவும் சந்தோஷமாக குடும்பம் நடத்தவில்லை. கல்யாணம் நடந்த காலத்திலிருந்து ஒருநாள் கூட அவர் அன்பான கணவனாக நடந்துகொண்டது கிடையாது.”

“அக்கா நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?” சாத்தி அதிர்ச்சியுடன் கேட்டான்.

“காலையில் ஆறுமணிக்குப் புறப்பட்டுப் போவார். இரவு இரண்டு மணிக்குத்தான் வீடு திரும்புவார். அதுவும் கிழமைக்கு இரண்டு மூன்று நாட்கள் வீட்டுக்கே வரமாட்டார். எதையும் கேட்க முடியவில்லை. கேட்கிற மாதிரி அவர் நடந்து கொள்வதும் இல்லை. போகப்போகச் சரிவரும் என்று நினைத்தேன். ஆனால் அது நடக்கிற காரியமாகத் தெரியேல்லை. இப்படி அர்த்தமில்லாமல் வாழ்வதில் என்ன சுகமிருக்கிறது? இதைவிட நாட்டிலே கிடந்திருக்கலாமில்லையா?”

மைதிலி சொல்லி முடிக்கும் போது மறுபடியும் கண்களில் நீர் தேங்கிவிட்டது.

சாத்தி ஆச்சரியப்பட்டுப்போனான். அவனுக்கு எதுவும் சொல்லத் தோணவில்லை. விடைபெற்றுக்கொண்டு வெளியேறினான். அவனது மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது.

‘அப்போ இளங்கோ இன்னும் மாறாவின் சிநேகிதத்தை விடவில்லையா?’ தனக்குத் தானே கேட்டுக்கொண்டான்.

மாறா சுவிஸ் நாட்டைச் சேர்ந்தவள். பலவருடங்களாக இளங்கோவிற்கும் அவளுக்கும் நட்பு இருந்து வந்தது. இளங்கோ மாறாவைத்தான் திருமணம் செய்வதாக இருந்தான். இது எப்படியோ நாட்டிலுள்ள அவனின் வீட்டுக்குத் தெரிய வேண்டி வந்தது. அவனின் பெற்றோர் தாங்கள் பார்க்கும் பெண்ணைத்தான் திருமணஞ் செய்ய வேண்டும், இல்லையேல் தங்கள் பிணத்தைத்தான் பார்க்க வேண்டிவரும் என்று கடிதம் எழுதினார்கள்.

ஒரேயொரு மகனான இளங்கோ மிரண்டு போய்ச் சம்மதித்தான். அதன் படிதான் மைதிலி அவனுக்கு மனைவியாக வந்து சேர்ந்தாள். அப்போதே “மாறாவின் தொடர்பை விட்டுவிட்டேன்” என்றுதான் இளங்கோ சொன்னான்.

இப்பொழுது அது பொய்போல் சாத்திக்குத் தோன்றியது. சாத்தி நேரத்தைப் பார்த்தான். மாலை ஆறு மணியாகிக்கொண்டு



வந்தது. உடனடியாக ‘ட்றெயின்’ எடுத்து மாறாவிடம் புறப்பட்டான்.

“வா! சாத்தி!” மாறா வரவேற்றாள்.

“மாறா உன்னிடம் கொஞ்சம் பேச வேணும்!” சாத்தி கேட்டான், “இரு வருகிறேன்” என்றவள் தேனீருடன் வந்து அமர்ந்தாள்.

“இளங்கோவிற்கு திருமணம் நடந்தது உனக்குத் தெரியுமா? அவனுக்கு இங்கொரு மனைவி இருக்கிறாள் என்றாவது உனக்குத் தெரியுமா மாறா?” சாத்தி கேட்டான்.

மாறாவின் நீலக்கண்கள் அகல விரிந்தன எதுவும் தெரியாததுபோல் புருவங்கள் மேலே உயர்ந்தன.

“மாறா நீ ஐரோப்பிய நாட்டுக்காரி! நீ எப்படிப்போனாலும் உன்னைத் திருமணம் செய்ய எத்தனையோ பேர் முன்வருவர். ஆனால் இளங்கோவின் மனைவிக்கு அப்படியில்லை. அவளுக்கு அவனை விட்டால் வேறயார் துணை? அதனால் நீ இளங்கோவின் சினேகிதத்தை விட்டிடவேணும்!”

நியாயத்தைக் கேட்டான் சாத்தி.

அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த மாறா சற்று ஆவேசமாகச் சொன்னாள்.

“சாத்தி! என்னை நீ கல் நெஞ்சக்காரி என்று எண்ண வேண்டாம். உண்மையில் எனக்கு எதுவும் தெரியாது. இன்றிலிருந்து இளங்கோவின் நட்பை நான் துண்டித்துக் கொள்கிறேன். நீ பயப்படாமல் போய்வா!” என்றாள்.

சாத்தி நிம்மதிப் பெருமூச்சுடன் விடை பெற்று நடந்தான். அந்தக் கிழமை மறைந்து அடுத்த கிழமை தொடங்கியது. சாத்தி ‘ஏசியன்’ கடைக்குப் போயிருந்தான். இளங்கோ மைதிலி தம்பதியினர் சந்தோஷமாகச் சாமான் வாங்கிக் கொண்டிருந்தனர். சாத்தியை கண்ட இளங்கோ அவனை வற்புறுத்தி வீட்டுக்கு அழைத்துக் கொண்டிருந்தான்.

“மைதிலி அக்கா எப்படியிருக்கிறீர்கள்?” கேட்டான் சாத்தி. மைதிலி ஒரு முறை அவனை நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையிலுள்ள கனிவும் நன்றியுணர்வும் அவனுக்கு மட்டுமே புரிந்து கொண்டன.

# கண்டதும் காதல்

‘எப்போது நானும் அர்ச்சனாவும் மணக்கோலத்தில் சேர்ந்திருப்பது....?’



யாழ். மு.கலை

கோயில் பூசையினை முடித்துக் கொண்டு, வழமையாக உட்காரும் கோயில் கல்யாண மண்டபத்துக்கு அருகிலுள்ள மரநிழலுக்கு மாறன் வந்தான்.

கோயிலில்’ அமைதி பெற்றுச் செல்பவர்கள் மத்தியில், மாறன் மன அமைதியினைத் தொலைத்த நிலையில் இருந்தான்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அர்ச்சனா வரும் நேரத்தைத் தாண்டி மணிக்கம்பி நகர்ந்து கொண்டிருந்தது. இன்னும் அர்ச்சனா கோயிலுக்கு வரவில்லை.

சனத்திரள்களுள் அவன் கண்கள் சல்லடையிட்டு அர்ச்சனாவைத் தேடின. ஆனால் அர்ச்சனா அவன் கண்களுக்குள் சிக்கவில்லை.

மனச் சோர்வில் துவண்டு போனவன், கல்யாண மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த கல்யாண ஏற்பாடுகள் மீது கவனத்தைத் திருப்பினான்.

அது அவன் மனதை மேலும் சோர்வடைய வைத்துவிட்டது. ‘எப்போது நானும் அர்ச்சனாவும் மணக்கோலத்தில் சேர்ந்து இருப்பது? இன்னும் அவளிடம் எனது விருப்பத்தைத் தெரிவிக்கவில்லையே?’ என அவன் மனம் ஒரு நிலைப்படாமல் சலனப் பட்டுக்கொண்டிருந்தது.

மீண்டும் தன் பார்வையைச் சனத்திரள்களுக்கிடையில் செலுத்தினான். அப்போதும் அவள் தரிசனம் அவனுக்குக் கிடைக்கவில்லை.

மாறன் வாரந்தோறும் கோயிலுக்கு வருவது அம்பாளின் தரிசனத்துக்கு என்பதைவிட அர்ச்சனாவின் தரிசனத்துக்காக என்பதுதான் பொருத்தமாகும்.

அவன் ஆறு மாதங்களுக்கு முன் ஒரு வெள்ளிக்கிழமை இக்கோயிலில் முதன்முதலாக அர்ச்சனாவைச் சந்தித்துக் கொண்டான்.

மாறனின் மனதிலிருந்த எதிர்கால மனைவியின் அம்சங்களுடன் அவள் இருந்தமையினால் சந்தித்த அந்த நிமிடத்திலேயே அர்ச்சனா அவனைக் கவர்ந்து விட்டாள்.

இதுவரை எந்தப் பெண் மீதும் விருப்பங்கொள்ளாதவன் கண்டதும் காதல் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டான்.

தொடர்ந்தும் அவளைப் பார்க்க வேண்டும் என்ற உந்துதலால் அவன் தொடர்ந்தும் வெள்ளிக்கிழமைகள் தவறாது கோயிலுக்கு வந்தான்.

அவளைச் சந்திக்கும் ஒவ்வொரு வெள்ளியும் ஒவ்வொரு படி அர்ச்சனா மீதுள்ள விருப்பம் உயர்ந்து கொண்டே வந்தது.

அவளுடன் கூட வந்த தோழி அவளை அழைத்ததன் மூலம் அவளின் பெயர் அர்ச்சனா என்பதனை அறிந்து கொண்டான். ஒருநாள் கோயிலிலிருந்து அவளைப் பின் தொடர்ந்து சென்று அவளின் வீட்டையும் தெரிந்து கொண்டான்.

தனது விருப்பத்தை வெளிப்படுத்தத் தயங்கியவன், கோயிலில் அவள் உட்காரும் இடத்திற்கு அருகிலேயே இவனும் ஒவ்வொரு முறையும் அமர்ந்து கொள்வான். அவள் வீட்டுக்குப் புறப்படும் நேரம் இவனும் அவள் பின்னாடியே செல்வான்.

அர்ச்சனா மீது எல்லைமீறிய ஆசையை வளர்த்துக் கொண்டிருந்தான்.

இன்று எப்படியாவது அர்ச்சனாவுடன் கதைத்துவிட வேண்டும் என்ற ஆவலுடன் வந்தவனுக்கு அவள் கோயிலுக்கு வராதது பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

அவளின் வரவை எதிர்பார்த்து அலைந்து கொண்டிருந்த கண்கள் கார்கள் வந்த திசைக்குத் திரும்பின.

அக் கல்யாண மண்டபத்தில் நடைபெற இருக்கிற திருமணத்துக்கு வந்தவர்கள் கார்களிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

இராஜகுமாரன் போல மாப்பிள்ளை இறங்கி நடந்துவந்துகொண்டிருந்தான். ஒரு கணம் தனது மாப்பிள்ளைக் கோலம் எப்படி இருக்கும் என மாறன் நினைத்துக்கொண்டான்.

கல்யாணத்துக்கு வந்தவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த மாறனின் கண்கள் மணப்பெண்ணின்மீது பதிந்தது.

அவன் இதயம் வெடித்துச் சிதறியது.

அவன் தன் இதயத்தில் குடியேற்றிய அர்ச்சனா மணக்கோலத்தில் வந்து கொண்டிருந்தாள். இரண்டு வருடக் காதல் இன்று கைகூடப்போகிற சந்தோசத்தில் மணமேடையை நோக்கி அர்ச்சனா நடந்து கொண்டிருந்தாள்.

மாறன், ஆறுமாதங்களுக்கு முன் அவள் அனுமதியைப் பெறாமல் கட்டிய காதல் கோட்டை இடிந்து விழுந்த வேதனையில் நின்று கொண்டிருந்தான்.

# ஏன் சிரித்தாய் என்னைப்பார்த்து...

ரூபராணி

பத்மாவின் காருக்கு நேர் எதிரே மற்றொரு கார் அசைய மறந்து கிடந்தது. முன் ஆசனத்தில் விஜய்.

பத்மா வெகு லாவகமாகக் கார் ஓட்டுவதை அருகிலிருந்து ஓரக்கண்ணால் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான் ரவி. இவ்வளவு சீக்கிரம் தன் மனைவி கார் ஓட்டக் கற்றுக் கொள்வாள் என்று அவன் சற்றுமே எதிர்பார்க்கவில்லை. நினைத்த போது பெருமையாக இருந்தது அவனுக்கு. பத்மாவைக் கரம்பற்றி மூன்று மாதங்கள்கூட ஆகவில்லை.

“உன்னை நான்....சந்தித்தேன்....நீ ஆயிரத்தில் ஒருவன்...” பத்மா முணுமுணுத்த பாட்டு ரவிக்குக் கிளுகிளுப்பை உண்டு பண்ணியது. ஆகாயத்தில் அவளோடு கை கோர்த்து மிதப்பது போலிருந்தது அவனுக்கு.

பத்மா, “என்னங்க....” என்றாள்.

புருவத்தை உயர்த்திப் புன்னகையுடன் அவளைப் பார்த்தான் ரவி.

“எனக்கு ஐஸ்கிறீம் வேணும்!” ரவியின் தோளில் முகம் பதித்துக் குழைந்தாள் பத்மா.

ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த தளிர்க் கரத்தைப் பற்றினான் ரவி.

கார் அதி வேகமாகச் சென்று விபுலானந்த வீதி ஓரம் பிறேக்போட்டு நிமிர்ந்தது.

ரவி ஐஸ்கிறீம் கடையைத் தேடி நடந்தான். கொட்டாவி விட்டு நிமிர்ந்து உட்கார்ந்த பதமாவுக்கு அவளுடைய முதலிரவு ஞாபகம் வந்து குறுகுறுத்தது. ரவி முகமூடி போட்டுத் திருடனைப் போல் வந்து படுக்கையறையில் பயங்காட்டியதை எண்ணிச் சிரித்தவளுக்கு எதிரே ஆச்சரியம் காத்திருந்தது.

பத்மாவின் காருக்கு நேர் எதிரே மற்றொரு கார் சத்தமின்றி அசைய மறந்து கிடந்தது. அதன் முன் ஆசனத்தில் தனிக்காட்டு ராஜாவாக வீற்றிருந்தான் விஜய். அழகான ஓர் இளம்பெண்ணின் சிணிசிணிச் சிரிப்பு தன்னை நோக்கியதைக் கண்ட விஜய் பதில் சிரிப்புடன் பத்மாவைப் பார்த்தான்.

பத்மாவுக்கு எரிச்சலூட்டியது ‘என்ன இவன் கொஞ்சங்கூட மெனஸ் இல்லாமல் என்னைப் பார்த்துச் சிரிக்கிறான் இடியட்.’ கடு கடுப்புடன் அவனைப் பார்த்தாள் பத்மா.

விஜய் குழம்பினான். ‘ஒருவேளை தெரிஞ்ச பொண்ணோ, ஊருக்குப் புதுசோ?’ கேள்விகள் குத்திட்டு நின்றன: சிந்தனை வயப்பட்ட விஜய் பத்மாவையே உற்றுப் பார்த்தான். அவளுக்கு இதயம் படபடத்தது.

‘ஐஸ்கிறீம் வாங்க இவ்வளவு நேரமா? சே...ஒரு பெண் தனியா உட்கார்ந்தால் அவ்வளவுதான்!’ அலுத்துக்கொண்ட பத்மா அந்த விஜய் இன்னும் தன்னைப் பார்க்கிறானா என்று அறியும் ஆவலில் பார்வையை அவன் பக்கம் வீசினாள். அவனுடைய பார்வையை மீண்டும் சந்தித்த பத்மாவுக்கு அதிர்ச்சி. பொல்லாத கோபம் அவள் முகத்தில் புகுந்து விளையாடியது.

நல்லவேளை....கையில் ஐஸ்கிறீம் உருகி வழிய ரவி வந்து சேர்ந்தான். “என்ன ரவி இவ்வளவு லேற், என்னை மறந்துட்டீங்களா?” பத்மா சிணுங்கினாள்.

“நோ, டியர் உனக்காக ஐஸ்கிறீம் தேடி எவ்வளவு தூரம் நடந்தேன் தெரியுமா? அதுக்காக அற்லீஸ்ற் ஒரு கிஸ் தரக்கூடாதா?” ரவியின் வார்த்தைகளில் காதலின் தீவிரம் தெரிந்தது.

“ஒன்னும் வேண்டாம்!” பத்மா முகத்தைத் திருப்பினாள்

“ஏய்... உனக்கென்ன ஆச்சு?” ரவி அவசரப்பட்டான்.

“பின்னே என்னங்க...கண்ட கண்ட காவாலிகளெல்லாம் என்னைப் பார்த்துப் பல்லைக் காட்டுதுகள்.” என்று சொன்ன பத்மா எதிர் வாகனத்திலிருந்த விஜயை அடையாளங் காட்டினாள்.

வந்ததே கோபம் ரவிக்கு. ஐஸ்கிறீம் விசப்பட்டு நிலத்தில் அனாதையாக அழுது வடிந்தது. பாய்ந்து சென்ற ரவி காருக்குள்ளிருந்த விஜயின் சேட்டைப் பற்றி இழுத்தான். என்ன ஏது என்று அறியாத விஜய் கார்க் கதவைத்திறந்து கலவரத்துடன் வெளியே வந்தான்.

“ஏண்டா ராஸ்கல்! பொண்ணுகளைப் பாத்து பல்லிளிக்கிறதுதான் உங்கட தொழிலோ?” ரவி கூச்சலிட்டான்; விஜய்யின் கன்னத்திலறையக் கை ஓங்கினான்.

விஜயின் முகம் சிவந்து இறுகியது. ஓங்கிய கையை இரும்புப்பிடியாகப் பிடித்தான்.

வீதிவழியே சென்ற சிலர் வேடிக்கை பார்க்கக்கூடினர்.

“மிஸ்டர்! யாரைப் பார்த்து யார் பல்லிளித்தது? என்ன கதையளக்கிறீர்?” விஜய் ரவியின் கழுத்துப் பட்டியை இறுக்கிக் கேட்டான்.



“யாரைப் பார்த்தா? என்ர மனைவியைப் பார்த்துத்தான்!” காருக்குள் பயந்தபடி இருந்த பத்மாவைச் சுட்டிக்காட்டினான் ரவி. விஷயம் சட்டென்று புரிந்தது விஜய்க்கு.

“ஏய் முதல்ல என்னப் பார்த்தது, சிரித்தது உன்னோட வைப்தான். அங்கே போய்க் கேள்?” படபடத்தான் விஜய்.

“நோ,..நீயே தான்!” ரவி கர்ச்சித்தான். இருவருக்குமிடையே நடந்த காரசாரமான வாக்குவாதத்தைக் கவனித்து ஒருசாறன் ஆசாமி கூட்டத்திலிருந்து வெளியேவந்து ரவியிடம் சொன்னான்:

“யோவ் உன்னைத்தான்யா! பாத்தாப் படிச்சவனாத் தெரியிற? கால்சட்ட சேட்டு வேற! ஒனக்கு அறிவிருக்கா? இந்த ஆளு மொதல்ல உன்னட சம்சாரத்தப் பார்த்தார் சிரிச்சார் என்றியே! அதெப்பிடி ஒன் சம்சாரத்துக்குத் தெரிஞ்சது? அவ பார்த்தபடியாகத்தானே? பார்க்காம இருந்திருந்தா இந்தச் சண்டையும் வந்திருக்காது. ஒண்ணு செய்! நீ போய் உன்ர சம்சாரத்துக்குக் கன்னத்தில குடு!” வேடிக்கை பார்த்த கும்பல் ‘கொல்’ என்று சிரித்தது.

ரவி பத்மாவை நோக்கி நடந்தான்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இருந்தும் இல்லாதது

தருவது - ரசிகன்



## இலக்கிய நயம்

இரவுகள் யாவும் பகலாய் தெரிந்தன
உறவில் கலந்து கனிந்திருந்தபோது!
பகலும்கூட இரவாய் தெரிகிறது
உறவைப் பிரிந்து தனித்திருக்கும்போது!
ராஜகுமாரியும் இப்போது
தனித்திருக்கிறாள்.

"பசியாய்-வெறியாய்
பாய்ந்து புசித்த புலியே! புலியே!"
மான் நானாக-புலி நீயாக
மறுபடி புசிக்க வருக புலியே!

இரவை உறவால் குறுகச் செய்தோம்
உறவால் உயிரை விரியச் செய்தோம்
வரவாய் இன்பம் பெருகிட வைத்தோம்
துறவாய் தடைகள் விலகிடச் செய்தோம்

புலியே வருக! புசிக்க வருக!
இன்ப வலையை விரிக்க வருக
பேரின்ப நதியில் குளிப்போம் வருக!
புவியிடை சுகத்தில் நனைவோம் வருக!

நூலிடைமீதில் நுன் இசை மீட்டு
பூவிதழ் மீதில் உன் இதழ் பூட்டு
தேனிடை ஊறிய மாங்கனி என்று
தாவியணைத்து புது மெருகூட்டு!

ராஜகுமாரி மனதில் ஏக்கம்.
ஏங்கிய மனதில் நிரந்தரப் புலம்பல்!

இணைந்தே இருந்தால்
மஞ்சமும் கெஞ்சும்!
பிரிந்தே இருந்தால்
நெஞ்சம்தான் கெஞ்சும்!

இணைய வா என அழைக்கும்
கனவிலாவது வா எனத் துடிக்கும்
உறவைத் தா என நினைக்கும்
பிரிவைப் போ என விரட்டும்!

ஒருநாள் சொன்னான்
கவிதை ஒன்று.
இதுநாள் வரைக்கும்
மனதில் உண்டு!

"எத்தனை அழகு உன்னிடத்தில்
கணைகள் யாவும் ஏன் இரண்டு?
தனித்துப் படைத்தால் தவிக்கும் என்று
இணைத்தே படைத்தானோ பாவம் என்று?"

இரண்டென சொன்னதில் குறும்புண்டு
தெரிந்தும் கேட்டாள் தெரியாததுபோல்;
"என்னது இரண்டு கண்டுவிட்டீர்
ஏன் பொய்யைப் புகழாய் சூட்டுகிறீர்?

"இதழ் இரண்டு, தோள் இரண்டு
மொட்டு இரண்டு, மோகவிழி இரண்டு
சுமக்கும் வாழைத் தண்டிரண்டு
கட்டுடல் காக்கும் கரமிரண்டு
நகை இரண்டு, நடை இரண்டு
மனம் இரண்டு, மௌனம் இரண்டு!"

புரிந்தது பாதி புரியாதது மீதி
குறும்பாய் கேள்வி விரித்தாள் ராணி

"நகை இரண்டு என்றீரே
என்ன நகை?"

"பொன்நகை ஒன்று;
விலை உண்டு
மற்றொன்று புன்னகை;
பூவுலகெங்கும் விலையில்லை!"

"நடை ஒன்றுதானே
இரண்டென்ன?"

"உள்ளம் துள்ள கால் துள்ளும்
அதற்குப் பெயர்தான் துள்ளல் நடை
இடை நூல் மெலிய கனி துள்ள
காளை மனதில் களி துள்ளும்.

பள்ளியறையில் உடல் நுழைய
கிள்ளும் வெட்கம் கால் இடற
கள்ளி குனிந்து அசைந்துவரும்
மெள்ள நடைதான் வெட்க நடை!"

"ஓஹோ பெரிய ஆராய்ச்சி
மனதில் என்ன இரண்டு வகை?"

"உறவில் இனிக்கும் மனம் ஒன்று
பிரிவில் கசக்கும் மனம் ஒன்று!"

"மௌனம்
எப்படி இரண்டு வகை?"

"தித்திக்கும் முத்தத்தில் உதடுகள்
சந்திக்கும் போதும் மௌனம் வரும்,
கொதிக்கும் கோபத்தை உதடுகள்
மறைக்கும் போதும் மௌனம் வரும்!"

நினைத்தாள் நெஞ்சம் நிறைந்தாள்
இதழில் புன்னகைப்பூ பூத்தது!

"என்னடி தனிமையில்
புன்னகைப்பு?"
தோழி வந்தாள் துள்ளலுடன்!

பதிலாய் எழுந்தது பெருமூச்சு
மழுப்பலாய் விரிந்தது குறும் சிரிப்பு.

"சீறும் புலியையும்
வெல்லும் சிரிப்படி!- கூறடி
உனக்கென்ன மனக்கவலை!"

"சொன்னால் தீராதது
உன்னால் ஆற்ற முடியாதது!"

"மருந்தாலும் தீராதோ-நல்
விருந்தாலும் மாறாதோ?

"மருந்தும் வேண்டாமடி
விருந்தும் வேண்டாமடி- அந்த
பருந்தை வரச் சொல்லடி
என்னை விருந்தாய் பெறச் சொல்லடி!"

"ஏனிந்த துடிப்பு என் தோழி
அறியாத சுகமோ சொல்தோழி
புரிந்தபின்னரும் ஏன்தான் அவசரமோ?
பொறுத்திருந்தால் என்ன புயல்வருமோ?"

"மோக சுகம் கண்ட மேனி துடிக்கிறது
தேக நரம்பெங்கும் வெப்பம் அடிக்கிறது
தாகம் மேலெழுந்து தேகம் தவிக்கிறது
மேகம் கொட்டும் வரை பூமி தணியாது

கூந்தல் பாயாக, கூதல் போயாக
கூடல் நாடகத்தில் இருவர் ஒன்றாக
தேடல் முடியாத தேக யாத்திரையில்
பாதிக் கடல் கூட தாண்டவில்லையடி"

தோழி கேட்டாள்;
"அறிந்தது எவ்வளவு
அறியாதது எவ்வளவு?"

"அறிந்தது கையளவு
அறியாத பரடங்கள் கடலளவு.
கல்விப் பள்ளிக்கும், கலவிப் பள்ளிக்கும்
பொருந்தும் அந்த விதி!"

"கடலாய் ஆசை கொண்டுவிட்டாய்
கலையை அறிய ஆவலுற்றாய்.
கொலையா இல்லை கலைதானே
அறிய அச்சம் ஏன் கொண்டாய்?
கடலில் இறங்கு கலை அறிய
கரையில் இருந்து கலங்காதே!"

"கடலில் இறங்க முடியாது,
கலையை அறிய முடியாது!
முடிந்தால் ஏன் நான் கலங்குகிறேன்?"

"எல்லாம் உண்டு உன்னிடத்தில்
வண்டு மயங்கும் தளிர் மேனி
வண்ணப் பந்துகளாடும் இள மேனி
கன்னம் ரெண்டும் மதுக் கிண்ணம்
கனியிதழ் ரெண்டும் கலை வண்ணம்

எண்ணம் முழுக்க இன்ப மயம்
என்ன இல்லை உன்னிடத்தில்?"

தோழி கேட்டாள்
புரியாமல்!

ராஜகுமாரி
பதில் சொன்னாள்;

"எல்லாம் உண்டு என்னிடத்தில்;
கடல்போல்
காமம் விரிந்தாலும்
கடக்க ஆசை
நெஞ்சில் அலையாய் எழுந்தாலும்

கடலைக் கடக்க வாகனமாய்
தோணி எனக்கு வேண்டாமோ?
கண்டேன் தோழி கடல் கண்டேன்
நீந்திக் கடக்க மனம் கொண்டேன்
தோணி இன்றித் தவிக்கின்றேன்!

கடலாய் விரிந்த காமத்தை
நீந்தி மேனி கரைசேர
ஏந்திச் செல்லும் வாகனமாய்
தோணி தேடித் துடிக்கின்றேன்!"

பிரிந்துபோன காதலனை
ராஜகுமாரி மட்டுமா
தோணிக்கு ஒப்பிடுகிறாள்;
திருவள்ளுவரும் ஒப்பிட்டிருக்கிறார்;

"காமக் கடல்மன்னும் உண்டே
அது நீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்"

குறள்:- 1164 அதிகாரம்- 117

---

ஸ்போர்ட்ஸ்

## இறுதிப்போட்டி ஆரம்பம்



அன்டிகுவாவில் மேற்கிந்தியத்தீவு-இந்திய அணிகளுக்கிடையில் நடைபெற்ற நான்காவது டெஸ்ட் போட்டி ட்ரோவில் முடிவடைந்துள்ளது.

மழை காரணமாக முதல் மூன்று நாட்கள் போட்டி நடைபெறவில்லை. நான்காவது நாள் போட்டி தொடங்கியது. இந்தப் போட்டிக்கும் லாராவே தலைமை தாங்கினார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவு அணி 9 விக்கெட் இழப்பிற்கு 333 ஓட்டங்களை எடுத்தது. லாரா அபாரமாக விளையாடி 103 ஓட்டங்களை எடுத்தார். ரோலன்ட் ஹேறால்டர் 56 ஓட்டங்கள் எடுத்தார். இந்திய அணித்தரப்பில் கும்ளே, ஜோஷி தலா இருவிக்கெட்டுக்களையும், குருவில்லா, பிரசாத் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

ஐந்தாவது நாள் உணவு இடைவேளைக்குச் சற்று முன்னதாக தனது முதல் இன்னிங்ஸை துவக்கிய இந்திய அணி, ஆட்ட முடிவில் இரு விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களை எடுத்தது. அஜய் ஜடேஜா 96 ஓட்டங்களை எடுத்து 4 ஓட்டங்களால் தனது முதல் சதத்தைத் தவறவிட்டார். ஜடேஜாவுக்கு இது ஒன்பதாவது டெஸ்ட் போட்டி. இவரது ஓட்டங்களில் 7 பவுண்டரிகளும், 2 சிக்ஸர்களும் அடங்கும். வி.வி.எஸ். லக்ஷ்மன் 56 ஓட்டங்கள் எடுத்தார்.

போட்டி ட்ரோவில் முடிவடைந்தது. சதமடித்த லாரா ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

5 டெஸ்ட் கொண்ட இத்தொடரில் 1-0 என்ற நிலையில் மேற்கிந்தியத்தீவு அணி முன்னணியில் உள்ளது. 5 வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி இம்மாதம் 17-21 வரை குயானாவில் நடைபெறுகின்றது.

## 4 நாடுகள் போட்டி

இந்தியாவில் நான்கு நாடுகள் கலந்து கொள்ளும் 'சுதந்திரக்கோப்பை' கிரிக்கெட் போட்டிகள் வரும் மே மாதம் தொடங்குகிறது.


இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து ஆகிய நான்கு நாடுகள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

நியூஸிலாந்து அணியில் கிரேய்க் மக்மில்லன் என்னும் புதிய வீரர் இடம் பெறுகிறார். 20 வயதான மக்மில்லன் சமீபத்தில், தான் விளையாடும் கேண்டர்பரி பிராந்திய அணிக்காக ஒரு போட்டிக்கு 73 ஓட்டங்கள் வீதம் 809 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

## இவர்கள்தான் அவர்கள்


மீரா


ரோஹிணி


சிவகுமார்

அவர் சிவகுமாரின் மகன் சூர்யா.

---

## சிந்தியா பதில்கள்

✉ டியர் சிந்தியா! திருக்கோணமலையில் தன் மனைவியைப் புதைத்த ஐயரைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

எம்.விஜய், கொழும்பு-06.

✍ "கோயிலை இடித்தேன்- கோயில் கூடாது என்பதற்காக அல்ல, கோயில் கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக் கூடாது என்பதற்காக!" என்று பராசக்தியில் கலைஞர் தீட்டிய வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

✉ யாழ் சென்ற பத்திரிகையாளர்களுக்கு பிரபாகரனின் வீட்டையும் காண்பித்தார்களாமே?

ஆ.புவனேஸ்வரன், கொழும்பு-09.

✍ அதன்மூலம் யாருக்குப் பெருமை? பிரபா குடியிருந்த வீட்டுக்கா? படையினருக்கா? என்பதுதான் கேள்விக்குரியதாகிறது.

✉ டியர் சிந்தியா! நக்மாவின் வயது என்ன?

எஸ்.பிரசாத், சாஞ்சமலை.

✍ ஓய்ந்திருக்கும் வயதல்ல.

✉ இசைஞானி இளையராஜாவும்-வைரமுத்துவும் மீண்டும் இணைவார்களா?

செல்வி எம்.ரோசினி, பதுளை.

✍ "கண் தெரியாத ஒருவன்: அந்தி மழை பொழிகிறது, ஒவ்வொரு துளியிலும் உன்முகம் தெரிகிறது" என்று பாடுவதாக கோணங்கித்தனமாக பாட்டெழுதுகிறார்கள்" என்று கண்ணதாசன் விழாவில் பேசியிருக்கிறார் இளையராஜா. விரிசல் பெரிதாகிறது!

✉ சிந்தியா! நடிகைகள் ஏன் வயதைச் சொல்வதில்லை?

கி.தவச்செல்வன், கண்டி.

✍ சில விஷயங்களை வெளியே சொன்னால் சுவாரசியம் கெட்டுப் போகும். ஒரு குட்டிக்கதை- கோ.சுவாமிநாதன் சொன்னது:

"வணக்கம்மா! நான் ஒரு பத்திரிகை நிருபர். உங்களைப் பேட்டி காணவந்திருக்கேன்."

"அப்படியா! உக்காருங்க!"

"நான் உங்கள் ரசிகன். உங்கள் நடிப்பைவிட எனக்கு அதிகமா பிடிச்சிருக்கிறது உங்க சிரிப்புத்தான்! அந்த முத்துப்பல் வரிசையைப் பார்த்து மயங்காதவங்களே இருக்க முடியாது!"

"ரொம்ப நன்றி!"

"உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? மனுஷ உடம்பு அழிஞ்சு போனாலும் கடைசி வரைக்கும் நிலைச்சு இருக்கக்கூடியது கடைவாய்ப்பல்தானாம்!"

"அப்படியா?.. சரி, இனிமே நம்ம பேட்டியை ஆரம்பிக்கலாமா?"

"ஆரம்பிக்கலாம்!"

"என்ன கேக்கப்போறீங்க?"

"முதல் கேள்வி: நீங்க உங்க பல் அழகை எப்படிப் பாதுகாக்கறீங்க? பராமரிக்கறீங்க?"

"அதுவா? ரொம்ப சிம்பிள்! காலையிலே ஒரு தரம், மாலையிலே ஒரு தரம் பல்லைச் சுத்தப்படுத்தறேன்! ராத்திரி படுக்கறதுக்கு முந்தி தினமும் மறக்காம..?"

"மறக்காமே..?"

"பல் செட்டைக் கழட்டிப் பத்திரமாக பெட்டியிலே வச்சுடறேன்!"

✉ வாய் இருந்தால் பிழைக்கலாம்; ஒரு உதாரணம் சொல்ல முடியுமா?

திருமதி ஜெ.நிர்மலா, அப்புத்தளை.

✍ ஒரு மன்னரும், மந்திரியும் காட்டுக்கு வேட்டையாடப் போனார்கள். அங்கிருந்த நரிகள் ஊளையிட்டன.

"நரிகள் ஏன் ஊளையிடுகின்றன," என்று கேட்டார் மன்னர்.

"நரிகள் குளிரில் நடுங்குகின்றன. மன்னரே போர்வை வேண்டும் என்கின்றன," என்றார் மந்திரி.

"சரி, அரச செலவில் நரிகளுக்கெல்லாம் போர்வை வாங்கிக் கொடுத்துவிடுங்க!" என்றார் மன்னர். கஜானாவில் பணத்தை எடுத்து தன் பையில் சுருட்டிக்கொண்டார் மந்திரி.

மறுமுறை காட்டுக்குப் போனபோதும் நரிகள் ஊளையிட்டன.

"நாம்தான் போர்வை கொடுத்துவிட்டோமே! இப்போது ஏன் ஊளையிடுகின்றன?" என்று கேட்டார் மன்னர்.

உடனே புத்திசாலியான மந்திரி என்ன சொன்னார் தெரியுமா?

"மன்னர் செய்த உதவிக்கு நன்றி தெரிவித்து ஊளையிடுகின்றன. இனிமேல் அரசர் எப்போது வந்தாலும் இப்படித்தான் நன்றி தெரிவிக்கும்!" என்றார் மந்திரி.



✉ டியர் சிந்தியா! சித்திரைப் புத்தாண்டு கவியரங்கம் (சன்.ரி.வி.யில்) பார்த்தீர்களா?

சி.ரகு, வவுனியா.

✍ முழுமையாகப் பார்க்கவில்லை. கவியரங்கம் நடக்கிறதாம் என்று கேள்விப்பட்டு ஓடிப்போய் பார்த்தால் கவிஞர் வாலி கிலோக் கணக்காக ஐஸ் வைத்து கலைஞர் கருணாநிதியை குளிர்வித்துக் கொண்டிருந்தார். இதே வாலிதான் ஆட்சி மாறுவதற்கு சில மாதங்கள் முன்னர் ஜெயலலிதாவை 'ஆதி பராசக்தி' என்று சூப்பர் ஐஸ் வைத்தவர். சரி, அன்று நடந்தது கவியரங்கமா? கலைஞர் புகழரங்கமா?

✉ இரகசியத்தை யாரிடம் சொல்லக்கூடாது?

என்.அப்துல்லா, புத்தளம்.

✍ அது சொல்லப்படுகிறவர் எப்படிப் பட்டவர் என்பதைப் பொறுத்தது.

தனது காதலியிடம் ஒரு இரகசியத்தை சொன்னான் காதலன்.

"என்னுடைய அப்பா மூன்று வாரத்தில் இறக்கப்போகிறார். அதுவரைக்கும் காத்திரு கண்ணே! அவரது 15 கோடி சொத்தும் எனக்குத்தான். நாம் திருமணம் செய்து கொண்டு சுகமாக இருக்கலாம்" என்றான் காதலன்.

ஒரு வாரத்தில் என்ன நடந்தது தெரியுமா?

அவனுடைய காதலி... அவனுக்கு அம்மாவாக மாறிவிட்டாள். அப்பா இறந்த பின்னர் அம்மாவுக்கு பின்னர்தான் சொத்து வாரிசுக்குச் சேரும்!

✉ ஆளும் கட்சிக்கும்-எதிர்க்கட்சிக்கும் இடையே சமரசம் செய்துவைத்த பிரிட்டிஷ்காரர் கில்லாடிதானே?

ஏ.சசிதரன், குருநாகல்.

✍ பின்னே என்னவாம்! இல்லாவிட்டால் இப்படி ஒரு விளம்பரம் கிடைத்திருக்குமா? முன்னர் இந்திய அரசியலுக்குத்தான் நம் பிரச்சனை பயன்பட்டது, இப்போது பிரிட்டிஷ் அரசியலுக்கும் பயன்படத் தொடங்கி விட்டதல்லவா?! இது ஒரு திருப்பம்தானே(?!)

✉ டியர் சிந்தியா! திருப்பமான கதை ஒன்று சொல்லுங்கள் பார்க்கலாம்?

செல்வி சிவகௌரி, ஹட்டன்.

✍ "வீட்டில் வேறு யாரும் இல்லையா?"

"இல்லை, இப்போது நான் மட்டும்தான் இருக்கிறேன்!"

"எ.. என்ன இது கத்தியை காட்டுகிறாய்?"

"யோவ்! திருடவந்திருக்கிறேன். கத்தியைக் காட்டாமே கருணையைக் காட்டச் சொல்லுறியா? எடு பெட்டிச் சாவியை!"

"அதைத்தான் நானும் தேடிக்கிட்டிருக்கேன்!"

"என்ன சொல்றே நீ?"

"நானும் உன்னை மாதிரி திருட வந்தவன்தான்!"

✉ சார்ஜாவில் ஸ்ரீலங்கை அணி பெற்ற வெற்றிக்கு யார் காரணம்?

சி.ஹரிகரன், கொழும்பு-06.

✍ இரண்டு காரணங்கள்! ஒன்று: அரவிந்தாவின் நிதானமான ஆட்டம். இரண்டு: அதற்கு முன்னர் பல கிண்ணங்களை தவறவிட்டு வாங்கிய திட்டுக்கள்!

✉ 'புதையல்' படத்தில் அரவிந்த சாமியின் நடிப்பு எப்படி?

எம்.பெர்ணாண்டோ, தெகிவளை

✍ ஆஹாசாமி!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இராமாயணம் அங்கம் 79

## விபீடணன் அறிவுரை

இராமபிரான் தென் கடற்கரையை வந்தடைந்த அடுத்த நாள் அமாவாசையுடன் ரேவதி நட்சத்திரமும் கூடிய நாளாகும். தம் தந்தையை நினைத்து இராமபிரானும் இளைய பெருமாளாகிய இலக்குவனும் கடற்கரையை அடைந்து தர்ப்பணம் என்னும் கிரியையைச் செய்து முடித்தனர்.

அன்றிரவு இராமபிரான், இலக்குவன், அனுமன், சுக்கிரீவன், வாலிமகன் அங்கதன் மற்றும் கரடிகளுக்கரசன் ஜாம்பவன் ஆகியோருடன் வானரப் படையின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த தளபதிகள் ஆகியோர் மகேந்திரமலை உச்சியில் ஒன்று கூடினர்.

தென்கடலைக் கடந்து இலங்கைக் கரையை பெரும் தொகையான வானர சைனியங்களுடன் எவ்வாறு சென்று அடைவது என்பதைப் பற்றியே எல்லோரும் சிந்திக்கலானார்கள். அனுமன் தான் எவ்வாறு கடலைக் கடந்து சென்றார் என்பதனை விபரித்தார். அவருடைய ஆற்றலினால் அவருடன் ஒரு தடவையில் மேலும் ஒரு சிலரை மட்டுமே தூக்கிக் கொண்டு பறந்து செல்ல முடியும். ஆனால் சமுத்திரம் போலவே திரண்டிருந்த அனைவரையும் அக்கரைக்குக் கொண்டு சேர்ப்பது முடியாத காரியம். அதுதவிர, எதிரியின் பிரதேசத்தில் சிறு சிறு குழுக்களாகப் போய்ச் சேர்வது அபாயம். இக்காரணத்தினால் சிறு சிறு குழுவாகச் செல்வது சரியல்ல வென்றும் எல்லோரும் ஒன்றாகவே செல்ல வேண்டும் என்றும் முடிவெடுத்தனர். ஆகவே, கடலைக் கடப்பதற்கு என்ன வழி என்பதையிட்டே அனைவரும் சிந்திக்கலானார்கள்.

### கோபமும் தாபமும்

இராவணனின் மந்திராலோசனை மண்டபத்தில் பல்வேறு அபிப்பிராயங்களும் ஒன்றன் பின் மற்றொன்றாக எழுந்தன. காரசாரமான விவாதங்களும் இடம்பெற்றன.

கும்பகர்ணன், தன் நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்தினைக் கூறிக்

இராஜகுமாரன்



கொண்டு வந்தமையினால் கோபம் கொண்ட இலங்கையர்கோன், கும்பகர்ணன் தன் கருத்தினை இராவணனுக்கு இசைவாக மாற்றிப் பேசியமையினால் சீற்றம் தணிந்து காணப்பட்டான்.

சீதாப்பிராட்டியாரிடம் எப்போது தன் மனதைப் பறிகொடுத்தானோ, அப்போதே இராவணேசன் தன் இயல்பான



குணங்களையெல்லாம் இழந்து விட்டான். சீதையைப் பற்றிய சிந்தனையில் புதைந்து கிடந்தமையினால் தர்ம நியாயங்களையெல்லாம் மறந்து போய்விட்டான். தெளிவான சிந்தனையைக் கைவிட்டான். எனவே சீதைமீதுள்ள தனது ஆசையைக் கைவிடுமாறு எவர் கூறினாலும், அவர்கள் தனக்கு விரோதமானவர்களே என்று கருதத்தலைப்பட்டான். இதனால் தான் கும்பகர்ணன் மீது முதலில் கோபமுற்றவன்- அவன் தன் சார்பாகப் பேசத்தலைப்பட்டதும். அவன் முன்கூறிய கருத்துக்களை முற்றாக மறந்து போய்விட்டான். கும்பகர்ணனை "குமரா" என்று அழைத்து "நல்லுரை கூறினாய்," என்று பாராட்டினான்.

நன்றுரை செய்தாய் குமர
நான் அது நினைத்தேன்!
ஒன்றும் இனி ஆய்தல் பழுது
ஒன்னலரை எல்லாம்
கொன்று பெயர்வோம் நாம்
கொடிப்படையை எல்லாம்
இன்று எழுக என்க என
இராவணன் இசைத்தான்.
(யுத்த காண்டம்-68)

பொருள்:

*"குமரா!" என்று கும்பகர்ணனை அழைத்த இராவணனன், "நீ கூறிய கருத்துக்களையே நானும் நினைத்தேன். இனிமேல் இங்கு கூடியிருந்து எதையும் ஆராய்வதில் பயனில்லை. உடனடியாக எமது பகைவர்களை எல்லாம் அழித்துவிட்டுத் திரும்புவோம். உடனடியாக எமது படைகளைத் திரட்டுங்கள்!" என்று கட்டளையிட்டான்.*

### இந்திரசித்து சீற்றம்

இவ்வாறு இராவணன் கூறியதும் அவன் மகன் இந்திரசித்து எழுந்தான். அவன் முகத்தில். கடும் சினம் கொப்பளித்தது. "பேராற்றலுள்ள பெருந்தகையே! உம்முடைய சபையில் எண்ணற்ற வீரர்கள் நிறைந்திருக்கின்றனர். அவர்களில் மிகவும் வலுவிழந்தவர்களைக் கொண்டே எமது எதிரிகளை நிர்மூலமாக்கிவிடலாம். இத்தகைய மிக எளிய பணிக்கு, மூவுலகங்களையும் வென்றவரும் மும்மூர்த்திகளின் அருளைப் பெற்றவருமான தாங்கள் படை நடத்திச் செல்வது இழுக்கு. என்னுடைய வீரத்தைப் பற்றி நானே எடுத்துரைக்க வேண்டியதில்லை. இச்சபையோர் நன்கறிவார்கள். தாங்களும் அறிவீர்கள்.

எமது பகைவர்களிடம் நால்வகைப் படைகள் எவையுமில்லை. வளைந்த முதுகுகளை உடைய வானரங்களுடன் வரும் இரு மனிதர்களால் எமது வலிமை மிக்க பெரும் படையை என்ன செய்துவிட முடியும்? எனக்கு விடை கொடுங்கள்! அந்தக் குரங்குகளின் தலைகளனைத்தையும் கொய்து இவ்வுலகத்தின் தரை அனைத்தும் பரப்பி விடுகிறேன்!" என்று கூறி தன் தந்தையின் தாள் பணிந்து வேண்டி நின்றான்.

### விபீடணன் கூற்று

இராவணனின் தம்பிமார்களுள் விபீடணனும் ஒருவன். கல்வி கேள்விகளில் சிறந்தவன். தர்ம நீதிகளை உணர்ந்தவன். தெய்வ பக்தியில் அதிக ஈடுபாடுடையவன், நல்லது கெட்டது தெரிந்தமையினால், தானாகச் சென்று எந்தச்சிக்கலிலும் தலையிடாதவன்.

சீதாப்பிராட்டியாரை இராமபிரானிடமிருந்து இராவணன் சிறைப்பிடித்து வந்த காலத்திலிருந்தே தன் நாடான இலங்கைக்குக் கெட்ட காலம் பிடித்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்டான். தன் அண்ணனை அணுகி, தனது கருத்துக்களைக் கூறத் தயங்கியவனாகவே விபீடணன் காணப்பட்டான். காமவெறி தலைக்கேறி, தன்னைத் தானே அழித்துக் கொள்ளக் கங்கணங்கட்டிக் கொண்டிருந்த தன் தமயனுக்கு, இன்றுள்ள நிலையில் எதைச் சொன்னாலும் ஏறப்போவதில்லை என்பதனைத் தெரிந்து இதுவரை அமைதியாகவே தன் கடமைகளைச் செய்து கொண்டிருந்தான். மந்திராலோசனையில் கலந்து கொள்ளும்படி இராவணன் கேட்டுக் கொண்டமையினால் அங்கு சமுகமளித்தான். அச்சபையில் பேசப்பட்ட கருத்துக்கள் யாவும் இராவணனைத் திருப்திப் படுத்துவதற்காகவே கூறப்பட்டவை என்பதனையும் உணர்ந்தான். சற்றுமுன் தனது சகோதரன் கும்பகர்ணன் கூறிய கருத்துக்களைக் கேட்ட இராவணனின் முகங்கள் தெரிவித்த அதிருப்தியைக் கண்டு பயந்த கும்பகர்ணன், நொடிப் பொழுதில் முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களைக் கூறத் தலைப்பட்டதையும் அவதானித்திருந்தான். இருப்பினும், எத்தகைய பின்விளைவுகளையும் பற்றிக் கவலைப்படாமல் தனது நேர்மையான கருத்துக்களைக் கூறத் தலைப்பட்டான்.

தனக்கு முன் பேசிய தன் அண்ணன் மகன் இந்திரசித்து தெரிவித்த கருத்துக்கள் விபீடணனைச் சினங்கொள்ள வைத்துவிட்டது. எதிர்கால விளைவுகளைச் சீர்த்தூக்கிச் சிந்திக்க முடியாத இளமைப் பருவத்தவன் இத்தகைய கருத்துக்களைக் கூறுவது தகாது என்பதனை முதலில் சுட்டிக் காட்டினான் விபீடணன். "தேவலோகம் வரை படையெடுத்துச் சென்று தேவேந்திரனையே கைது செய்து விட்டமையினால் மமதை கொண்டுவிட்டாய். தேவர்களை நோக்கித் தவமிருந்து, அவர்கள் அளித்த வரத்தின் மகிமையினால்தான் அத்தகைய அநீதியான செயல்களில் நீ ஈடுபடலானாய்! அது உனது பலத்தினாலோ அல்லது உனது சொந்த ஆற்றல்- திறமையினாலோ ஏற்பட்ட வெற்றியல்ல! வீண் வார்த்தைகளை விடுத்து ஒதுங்கி நில்!" என்று கூறி இந்திரசித்தை அடக்கினான்.

பின்னர் இலங்கேஸ்வரனைப் பார்த்து, "எல்லையற்ற வலிமை பொருந்திய தலைவனே! நீ தர்மநெறிகளைக் கைவிட்டு தகாத செயல் புரியத் தலைப்பட்டுவிட்டாய்! கற்புக்கு உறைவிடமான சீதையைச் சிறைப்பிடித்தமையினால் இன்றுவரை நிகழ்ந்தவை, உனக்கு முன்பு கிடைத்த சாபம் நிறைவேறும் காலம் நெருங்கி வருகிறதோ என்ற ஐயத்தைத் தருகிறது. சிவபிரான் உறையும் திருக்கைலாய மலையை நீ பெயர்த்தெடுக்க முனைந்த போது, நந்தி தேவர் உனக்கிட்ட சாபத்தை நீ மறந்து விட்டாய் போலும். **"கூலவான் குரங்கினால் குறுகும் கோள்....."** என்பது தான் நந்திதேவனின் சாபம். அதன்படி வாலி எனும் ஒரு குரங்கின் வலிமையால் நீ அவனிடம் தோல்வி கண்டாய். அத்துடன் முடிவுறாமல் இந்நகர் புகுந்த மற்றுமொரு குரங்கு பல அனர்த்தங்களைப் புரிந்து விட்டுச் சென்றது. அதே போன்று எண்ணற்ற வானரங்கள் இராமரின் சேனையில் சேர்ந்து உன்னுடன் போராட வருகின்றன. உன்னை வென்ற வாலியையே தன் ஒரே அம்பினால் வீழ்த்தியவன் இராமன். ஆகவே, போரை விடுத்து சமாதானம் நிலைபெற உரிய வழி முறைகளைக் கைக்கொள்ள வேண்டுகிறேன்!" என்றவாறு விபீடணன் கூறினான்.

**(தொடர்ந்து வரும்)**

**இராமாயணப் போட்டி: 77**

**சரியானவிடை:- மயன்.**

1. செல்வி த.லக்ஸ்மணரஜனி, மட்/சத்துருக்கொண்டான்.
2. எஸ்.சசிகலா, திற்கிலுப்பைக் குளம், வவுனியா.
3. ந.த.அருணாசலம், 262/15, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15.
4. செல்வி எம்.யோகேஸ், உப தபால் நிலையம், கண்ணியா, திருமலை.
5. க.சுமித்திரா, 85 கட்டுவ றோட், ஏத்துக்கால, நீர்கொழும்பு.

**போட்டி இல. 79** கேள்வி:- **இராவணன் தம்பிமார் இருவரின் பெயர்கள் தருக?**

ஏப்ரல் 26 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி–இல.79, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# இதுதான்(டா) இணக்கம்

**காதிலை பூ கந்தசாமி**

## ஐயா சிவத்தார் அவர்களை சந்திக்கிறார் காதிலை பூ கந்தசாமி

**கா.பூ.க:** ஐயா வணக்கம்! நீங்கள் பெரிய ரொம்பப் பெரிய தலைவர்! மூத்தவர், முதுபெரும் தலைவர். நான் சிறியோன், அடியேன் சின்னவன். என் பிழைப்பில் நீங்கள் மண் அள்ளிப்போடலாமா? எனக்குப் போட்டியாக மாறலாமா? இது முறையோ, தகுமோ, தர்மந்தானோ?

**சிவத்தார்:** பொறும் மிஸ்டர் கந்தசாமி. கதைக்க என்றுசொல்லி வந்துபோட்டு, பட்டுப் பட்டென்று அவை சுட்ட மாதிரி, நீரும் படபடவென்று பொழிஞ்சு கொண்டிருக்கிறீர்! விஷயத்தை சொல்லிப் போட்டுப் பொழியும் ஐசே!

**கா.பூ.க:** ஐயா! காதிலை பூ என்று சொல்லித் தான் நான் பூவைக்கிறேன் ஐயா, ஆனால் நீங்களோ சொல்லாமல் கொள்ளாமல் சூப்பர் பூ எல்லாம் வைக்கிறீர்களே ஐயா!

**சிவத்தார்:** ஐசே கந்தசாமி இந்த நேரம் பார்த்து மிஸ்டர் சீலனும் இங்கே இல்லை, இருந்தாலாவது சட்டப்படி உம்மை என்ன செய்யலாம் என்று யோசனை கேட்டிருக்கலாம். ஒன்றில் விஷயத்தை புட்டுப்புட்டு வையும், இல்லாதுபோனால் இடத்தைக் காலி செய்யும்.

**கா.பூ.க:** ஐயா! ஐயா! புட்டுப் புட்டு வைக்கலாம் என்றால், அது சாணக்கியம் இல்லையன்றோ? பார்சலுக்குள் புட்டு இருக்குதோ, இடியப்பம் இருக்குதோ, உழுத்துப்போன தோசை இருக்குதோ என்று அவிழ்த்துப் பார்க்காமலேயே, ஆஹா ஓஹோ என்று பாராட்டுவதுதானே ஐயா சாணக்கியம்! புட்டுப் புட்டு வைப்பது சாணக்கியமில்லையன்றோ, ஐயா காட்டும் பாதை அதுதானே! ஐயா எவ் வழி அடியேனும் அவ்வழி!

**சிவத்தார்:** மிஸ்டர் கந்தசாமி மறுபடி எச்சரிக்கிறேன். என் பொறுமையைச் சோதிக்க வேண்டாம்.

**கா.பூ.க:** அகிம்சைவாதிகள் கோபப்படலாமா? அங்கம் பிளந்து விழுந்து துடிக்க அடிகள் கொடுத்தாலும் அசையாமல் இருக்கும் உறுதி வேண்டாமா?

**சிவத்தார்:** வம்பு செய்வதற்கு என்றே வந்தீரோ?

**கா.பூ.க:** நான் எங்கே வம்பு செய்தேன்? தாங்கள் அன்றோ என் வழியில் குறுக்கே நின்று போட்டி போடுகிறீர்கள்.

**சிவத்தார்:** ஆதாரம் உண்டா?

**கா.பூ.க:** ஏராளமாக உண்டு!

**சிவத்தார்:** உதாரணமாக ஒன்று சொல்லும்?

**கா.பூ.க:** கடிதப் பரிமாற்றத்தை ஒப்பந்தம் என்று உருவகப்படுத்தி சமீபத்தில் தாங்கள் விடுத்த அறிக்கை! ஐயா! எனக்கொரு சந்தேகம்?

**சிவத்தார்:** அது என்னவோ?

**கா.பூ.க:** (சிவாஜியின் ஸ்ரைலில் பேசுகிறார்) இரண்டு துருவங்கள் எதிரும் புதிருமாக சந்தித்துக் கொள்ளும்போது, போனால் போகட்டும் என்று ஹலோ சொல்லிக் கொண்டால் உடன்பாடு, கடிதம் மூலம் பேசிக்கொண்டால் ஒப்பந்தம்! அது தானே உங்கள் புது அகராதி?

**சிவத்தார்:** ஒப்பந்தமோ இல்லையோ, ஏதோ ஒரு பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

**கா.பூ.க:** பந்தத்தை வைத்து என்ன செய்ய உத்தேசம்?

**சிவத்தார்:** தீர்வுப் பொதிக்குள் தேடுதல் நடத்த வெளிச்சம் வேண்டாமா? அதனால்தான் பந்தத்தைக் கண்டதும் எமக்கு ஏற்பட்டது மந்தகாசம்!

**கா.பூ.க:** ஏற்பட்ட பந்தத்தை முன்னின்று பிடிக்கப்போவது நீங்கள்தானாக்கும்!

(சிவத்தார் முகத்தில் எரிமலை வெடிக்கிறது. கந்தசாமியார் காணாமல் போகிறார்)

## எதிரணித்தலைவரை சந்திக்கிறார் கா.பூ.கந்தசாமியார்

**கா.பூ.க:** காதிலே தேன் பாய்கிறது! வாயிலே பால் கொட்டுகிறது! பாயிலே படுத்தாலும் சமாதானக் கனவுதான் வருகிறது!

**எ.தலைவர்:** என்ன மிஸ்டர் கந்தசாமி? ஒரே குஷியில் குதிக்கிறீர்?

**கா.பூ.க:** நான் மட்டுமா குதிக்கிறேன்? நாடே குதிக்கிறது! விமர்சக வித்தகர்கள் குதிக்கிறார்கள்! தமிழ்க் கட்சி தலைவர்கள் பலர் பக்கம் பக்கமாக பாராட்டுப் பத்திரம் எழுத வார்த்தையில்லாமல் துடிக்கிறார்கள்!

**எ.தலைவர்:** அப்படியா? என்ன சங்கதி? பாராட்டத்தக்க சமாச்சாரங்களும் நாட்டில் நடக்கிறதா என்ன?

**கா.பூ.க:** ஹி.ஹி.ஹி என்றாலும் உங்களுக்கு இத்தனை அடக்கம் கூடாது.

**எ.தலைவர்:** நீர் என்ன சொல்லுகிறீர்?

**கா.பூ.க:** அடியடா படலையிலே எண்டானாம். தெரியாத மாதிரி நடிக்கிறியள் பார்த்தியளோ! அம்மையாருடன் கடிதப் பரிமாற்றம் நடத்தி, கொடிது கொடிதான பிரச்சனையை தீர்க்க ஓ.கே சொல்லிப் போட்டியளே? எத்தனை பெரிய திருப்பம், ரேர்னிங் பொயிண்ட்!

**எ.தலைவர்:** ஓ.. ஐஸீ.. கடிதம் போட்டால் பதில் போடுவதுதானே நாகரிகம்! யூஸீ.. நாங்கள் இன்று நேற்றல்ல இனப் பிரச்சனை தோன்றி யுத்தம் தொடங்காத காலம் முதற்கொண்டு இனப்பிரச்சனையை தீர்க்க ஒத்துழைப்பும் கோரியிருக்கிறோம், ஒத்துழைப்போம் என்றும் கூறி வந்திருக்கிறோம்! கடிதம் போட்டுக் கேட்டாலும் அதைத்தான் சொல்லுவோம், போனில் ஹலோ சொல்லிக் கேட்டாலும் அதைத்தான் சொல்லுவோம்!

**கா.பூ.க:** எதைத்தான் சொல்லுங்கள், இது நிச்சயமாக ஒரு ரேர்னிங் பொயிண்ட்டே தான்!

**எ.தலைவர்:** அப்படியா சொல்கிறீர்கள்?! பேஷ், பேஷ் ஏதோ உங்களைப்போல ஒரு



நாலுபேர்.. வேண்டாம் நீங்கள் ஒருவரே போதும், நாட்டு மக்கள் நம்மை நம்பிக் கொண்டிருக்க செய்துவிடலாம்! நாமும் ஒரே பல்லவியைப் பாடிக்கொண்டே இருக்கலாம்.

**கா.பூ.க:** உங்கள் கட்சியிலும் ஒத்துழைப்புக்கு பச்சைக் கொடி காட்டிவிட்டார்களாமே?

**எ.தலைவர்:** நாங்கள் எப்போதாவது நீலக் கொடி காட்டியிருக்கிறோமா? எங்கள் கொடி பச்சைக் கொடி, அதைக் காட்டிக் கொண்டுதானே இருக்கிறோம்!

**கா.பூ.க:** ஒத்துழைப்பு என்றால் என்ன அர்த்தம் தலைவரே?

**எ.தலைவர்:** அதை வெளியே சொல்வது கட்சி இரகசியத்தை கடைத்தெருவில் கூவி விற்பது மாதிரி! யார் யாருக்கு என்ன தோன்றுகிறதோ, அவரவர் தம் இஷ்டப்படி அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். நமக்கொன்றும் ஆட்சேபனை கிடையாது!

**கா.பூ.க:** தீர்வு யோசனைகள் சட்டமாக மாறுவதற்கு ஒத்துழைப்பீர்களா?

**எ.தலைவர்:** மிஸ்டர் கந்தசாமி! ஒத்துழைப்பு என்பதும் ஒத்துக் கொள்வது என்பதும் ஒன்றாகாது! ஒத்துழைப்போம் என்பதற்காக எல்லாவற்றையும் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று அர்த்தமில்லை. எதை எதை ஒத்துக்கொள்ளக் கூடாதோ அதையதையெல்லாம் ஒத்துக்கொள்ளாமல் ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டே ஒத்துக் கொள்ளாத விடயங்களிலும் ஒத்துழைப்புக் காரணமாக ஓயாமல் விவாதித்துக் கொண்டே ஒத்துக்கொள்ளாத விடயங்களை ஒருநாளும் ஒத்துக் கொள்ளாத கொள்கை உறுதியுடன்தான் எங்கள் ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டே, ஒத்துக்கொள்ளாத விடயங்களை ஒருபோதும் ஒப்புக்கொள்ளாதிருப்போம்.!

**கா.பூ.க:** சர்வதேச மத்தியஸ்தம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**எ.தலைவர்:** மத்தியஸ்தம் வந்தால் நாம் ஒத்துழைத்தபடியே ஒப்புக்கொள்ளாத விடயங்களை ஒத்துழைத்தபடி ஒப்புக் கொள்ளாமல் விவாதிக்க முடியாது! நாமே குழம்பிக்கொண்டது போதாது என்று மத்தியஸ்தர்களையும் குழப்ப நினைப்பது நம் நாட்டின் மரியாதையை மாசுபடுத்திவிடும்! எனவே சர்வதேச மத்தியஸ்தம் வேண்டவே வேண்டாம்!

**(தலை முடியைப் பிய்த்தபடி நழுவுகிறார் காதிலை பூ கந்தசாமி.)**

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
580230

பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# சாதனையால் சோதனை



இந்திய கிரிக்கெட் அணியில் வேகப் பந்து வீச்சாளர்களுக்கு பற்றாக்குறை இருக்கிறது. புதியவர்களை உருவாக்கும் ஆர்வம் போதாது. அதனால் ஸ்ரீநாத், வெங்கடேஷ் பிரசாத் இருவரையுமேதான் அணி மலையாக நம்பியிருக்கிறது.

கபில்தேவின் பின்னர் இந்திய அணிக்கு கிடைத்த அபோகமான பந்து வீச்சாளர் ஸ்ரீநாத். இப்போது யார் கண்பட்டதோ, ஸ்ரீநாத் கட்டாய ஓய்வுக்கு தள்ளப்பட்டுள்ளார்.

சில காலம் ஓய்வு பெற்றால்தான் மறுபடியும் அவரால் ஆட முடியும். குறைந்தது மூன்று மாதமாவது ஓய்வு தேவை என்கிறார்கள்.

அதிக ஓவர்களில் பந்து வீசியதால் ஸ்ரீநாத்தின் பந்துக்கின்னை மூட்டு தசை கிழிந்து போய்விட்டது.

ஏனைய பந்துவீச்சாளர்கள் சரியாக செயற்பட முடியாதபோது, அல்லது விக்கெட்டுக்களை சாய்க்காத போது, ஸ்ரீநாத்திடம்தான் ஓவர்கள் கொடுக்கப்பட்டன. மூச்சு முட்ட பந்து போட்டே தசையை பாதிப்படுத்திக் கொண்டார் இந்த இளம் வீரர்.

முன்னாள் மேற்கிந்திய பந்து வீச்சாளர் மைக்கேல் ஹோல்டிங்கும் இவ்வாறு காயப்பட்டிருந்தார். போதிய ஓய்வின் பின் அவர் மறுபடி விளையாடினார். ... மற்றொரு மேற்கிந்திய பந்து வீச்சாளர் ... தொடர்ந்து ஆட முடியவில்லை. 18 மாதங்களுக்கு அவர் ஓய்வு பெற வேண்டியிருந்தது.

ஸ்ரீநாத், 17 மாதங்களில் 8 டெஸ்ட் போட்டிகளில் 128 ஓவர்கள் போட்டிருக்கிறார். டெஸ்ட் போட்டிகளில் இப்படி பந்துவீசிய பிற ஒரு வீரர் இல்லை என்கிறார்கள்.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 366 ஓவர்கள் போட்டிருக்கிறார் ஸ்ரீநாத்.

கடந்த பதினாறு மாதங்களாக இந்திய அணி தொடர்ந்து போட்டிகளில் ஓய்வேயில்லாமல் போட்டிகளில் பங்கேற்பதும் ஸ்ரீநாத் பாதிக்கப்பட்டதுக்கு முக்கிய காரணம்.

சில போட்டிகளில் ஸ்ரீநாத்தும், பிரசாத்தும் 10 முதல் 12 ஓவர்கள் தொடர்ந்து வீசியதாகக் கூறுகிறார்கள். இதனால் விக்கெட்டை சாய்க்கும் உத்வேகமும் பாதிக்கப்படுகிறது.

எப்படியோ, அதிக சுமை காரணமாக ஒரு அதி சிறந்த பந்து வீச்சாளரின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது. "ஸ்ரீநாத் மீண்டும் ஆட முடியும்" என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார் கபில்தேவ். ரசிகர்களின் ஆசையும் அதுதான்! அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு, விளையாட்டுமேதான்!


ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS
323657
புன்னாலை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# காலமெல்லாம் காதல் வாழ்க



கடிதக் காதல், காதல், டெலிபோன் காதல் என்று முகம் பாராமலே விதம் விதமான காதல்கள் உருவாகும் காலம் இது. அப்படியிருந்தும் கண்டதும் காதல் அல்லது, கண்டபின் காதலில் தான் இப்போதும் ஒரு திருப்தி இருக்கத்தான் செய்கிறது. (அனுபவப் பட்டவர்களின் அபிப்பிராயம் என்னவோ!) இந்த வரிக் குதிரைகளின் காதல் இதில் எந்த ரகம் என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். தென்னாபிரிக்க தேசிய பூங்காவில் இக் காட்சியை கிளிக்கியவர் ...க்கின்பார். வரிக் குதிரைகள் பற்றிய சுவாரசியமான செய்தி ஒன்று. இவற்றுக்கு சந்தோசம் வந்து விட்டால் சண்டை போடுவது போல நடந்து கொள்ளத் தொடங்கிவிடுமாம். சமயத்தில் கடிபடுவதும் உண்டாம். காயங்கள் அதிகமாக இருக்காதாம். அன்புச் சண்டை என்பது இதுதானோ!

# கலையான சங்கிலி



இது ஒரு அபாக்களமான பழச் சங்கிலி. பழங்களை வைத்து பலவிதமான கண்காட்சிகள் உலகில் நடத்தப்படுவதுண்டு. ஆனால் இது அவற்றையெல்லாம் தாண்டி, வித்தியாசமானது.

அப்பிள் பழங்களால் மட்டுமே சங்கிலி போல இது உருவாக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 2 ஆயிரத்தி தொள்ளாயிரத்து 88 பழங்களால் உருவானது இந்தப் பழச் சங்கிலி.

ஆக அவ்வளவு தானா? பணம் இருந்தால் அப்பிள் வாங்கி நாமும்தான் செய்யலாம் என்று நினைக்கிறீர்களா? அப்படிச் சுயமாக செய்ய முடிந்தால் இது என்ன உலக சாதனை? விஷயத்தைக் கேளுங்கள். வெவ்வேறு மரங்களில் காய்த்த அப்பிள்களுடன் அந்தந்த தோட்ட உரிமையாளர்கள் ஒரே இடத்தில் கூடினார்கள். ஆளுக்கு ஒரு அப்பிள் வீதம் 2 ஆயிரத்தி தொள்ளாயிரத்தி 88 பேர் சேர்ந்து உருவாக்கிய சங்கிலி இது!

அப்பிள்களுடன் கலந்து கொண்டு பழச் சங்கிலியை உருவாக்கிய ஒவ்வொருத்தருக்கும் ஒரு பட்டம் வழங்கப்பட்டது. பட்டம் என்ன தெரியுமா? 'அப்பிள் ஒப்பந்த இயர்' செக் குடியரசில் உள்ள லிற்றோமெறில் என்னும் இடத்தில் இக் கண்காட்சி நிகழ்த்தப்பட்டது.

# நீரில் அற்புதம்



தரையில் நிறுவப்பட்டு கடலின் நடுவே கட்டியிழுத்துச் சென்று நிலைப்படுத்தப்பட்ட மிக உயரமான (இதுவரை) கொன்கிரீட்டினால் ஆன மேடை இது தான். நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. ஐரோப்பாவின் வடகரையிலுள்ள கடலில் இந்த மேடை நிறுவப்பட்டுள்ளது. மிகப் பெரிய எரிவாயு நிலையம் இதில் இருக்கிறது. ...

இந்த ... அதிசயமான இந்த மேடையின் உயரம் 472 மீட்டர் (1548 அடி). அடித்தளம் 36 மீட்டர் (118 அடி). இந்த கடலின் மேற்பகுதி நிலத்தில் துளையிட்டு அத்திவாரமிடப்பட்டுள்ளது.

அந்த அத்திவாரத்தின் மேல்தான் தூண்களால் தாங்கப்படும் கொன்கிரீட் மேடையைக் கட்டி இழுத்துச் சென்று பதித்துள்ளனர். 1995ல் நிறுவப்பட்டது இந்த அதிசயம்.

இப்படித்தான் இந்தியாவில் ஹைதராபாத்திலுள்ள தாகார் ஹுசேன் ஏரியின் நடுவே நிறுவ மிகப் பெரிய அனுமார் சிலை செய்யப்பட்டு கரையிலிருந்து மிதவை ஒட்டமுறையில் ஏற்றிக் கொண்டு சென்றனர். சிலை கவிழ்ந்து நீரில் மூழ்கியது. பலர் பலியாகினர். சிலையை இன்னமும் எடுக்க முடியவில்லை. ஆனால் அங்கே தூண்களையும் மேடையையும் கொண்டு போய்ச் சேர்த்து விட்டார்கள். கில்லாடிகள்தான்!




இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை ... தினமுரசு பதிப்பகத்தாரால் 27, ... அச்சிட்டு வெளியிடப்படுகிறது.